
புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 10-7-1977



ஆசிரியப் பெருமக்களுக்கு

1978ஆம் ஆண்டிற்கு அரசினரால்
முற்ருய்த் திருத்தி வெளியிடப்பட்ட
பாடத்திட்டத்தின்படி,

கல்வித்துறையில் பல்லாண்டுகால அனுபவம் பெற்றவரும்,
பல நூல் வரிசைகளை வெளியிட்டுப் பிரபலமானவருமான

திரு. S. P. சாமி,

போதனையில் நீண்டகால அனுபவமுடையவரான

திரு. ஐ. வெ. சாமி

ஆகியவர்களைக் கொண்டு முற்றிலும் புதிய முறையில் எழுதப்பட்டது.

"நவீன மலேசிய சரித்திரம்"

(S. P. சாமி - ஐ. வெ. சாமி)

நான்காம் வகுப்பிற்கு

கல்வி அமைச்சின் புத்தக பீரோவின் முழு அங்கீகாரம் பெற்றது

ஆசிரியப் பெருமக்கள்
எங்களின் இந்நூல் வரிசையினை ஏற்று
ஆதரித்து எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும்
தருவார்களாக!

Geetha

PUBLISHERS AND BOOKSELLERS
Penerbit Dan Penjual Buku2 意達出版社
13-A, Jalan Kovil Hilir, Batu 2½ Jalan Ipoh,
Sentul, Kuala Lumpur 13-05.



வாணிபம்


சி. அன்பானந்தம்

நதிபலவாய்ச் சென்றாலும் நாடியவை ஆழிதனில்
    நன்றேடிக் கலக்கின்ற நயம்போல இப்புவியில்
விதிபலவாய்க் கொண்டாலும் விறுமிக்க சமுதாய
    வெற்றியினை யுட்கொண்டு வினைபலவாய்ச் செய்கின்றார்!
சுதியினிலே கலந்தொன்றிச் சுகநாதம் செவிக்கின்பம்
    சொக்கிடுதே அமுதாகச் சொரிகின்ற விதம்போலப்
புதியதொரு சமுதாயம் புனிதமலை யகத்தில்
    பொற்புடனே காண்பதற்குப் பொருந்திவரும் வாணிபமே!

உள்ளபொரு ளாங்காங்கே உறைந்துவிடில் வையத்தேர்
    உருளாது; பொருளாறும் உதவாது; தழையாது;
கள்ளமொரு வழியாகும்; கணக்கொன்றும் நிலைக்காது;
    கருத்திருந்த இறையெண்ணம் கனியாகிச் சுவைக்காது!
கொள்ளவரு மின்நிலையைக் குலைத்திட்டு மதிகூடிக்
    கொடுக்கின்ற அறிவாற்றல் குறையாமல் உரம்தேக்கி
அள்ளவரு கின்றபொருள் அதிகமுற வையத்தோர்
    அழகோங்கிப் பவனிவர ஆக்குவதே வாணிபமாம்!

ஒருநாட்டின் செல்வநலம் உயர்ந்தோங்கிப் புகழ்மேவ
    உறுகின்ற வளம்யாவும் ஒருங்கேதான் சேர்ந்தாலும்
திருநாட்டும் நிலைக்கிங்கே தெளிந்திட்ட வழியாகித்
    திகழ்கின்ற துறையாகத் தினங்கூடும் வாணிபத்தால்
கருவாட்டும் துயர்தீரும்! களிப்போங்க வாழ்வோங்கும்!
    கருத்தொன்றும் பலநாட்டுக் கனிவந்து தான்சேரும்!
பொருளாட்டப் பெருக்காலே பிரிகின்ற செயற்கெல்லாம்
    பொறைகாக்கும் அணியாகிப் பொலிவேற்றும் வாணிபமே!

வாங்குவதும் கொடுப்பதுமே வாணிபத்தின் குறியாக்கி
    வாழ்விக்கும் தொழில்யாவும் வரவேற்றுச் செய்யுங்கால்
தாங்குநிலை தான்விட்டுச் சுறுசுறுப்புத் தேன்கூட்டிச்
    சூழ்ந்துவரில் சோதனைகள் துடைத்தோட்டித் தடைநீக்கி
ஓங்குநிலை தந்தருளும் ஒப்பற்றான் தாள்போற்றி
    ஊக்கமுடன் நேர்மைநெறி ஒழுகிவரும் திட்பமுடன்
தேங்குபுகழ் நாட்டிற்காய்த் திறம்மிகவே செய்துவரில்
    சீர்த்திதரும் வாணிபத்தால் செழிப்புண்டு! வாழ்வோமே!



அட்டைப்படம்: மாயன்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆனி 26
கம்பம் 1 ஃ (10-7-1977) ஃ குடும்பம் 8.

புதிய சகாப்தம்

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கும் மாப்பா எனப்படும் தோட்ட முதலாளிகள் சங்கத்திற்குமிடையே சென்ற மாதம் கையெழுத்திப் பட்டிருக்கும் சேவைக்கால அனுகூல ஒப்பந்தம் தோட்டப் பட்டாளிகளின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் என்று சொல்வது மிகையாகாது. 1976 முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு அமுல் செய்யப் படவிருக்கும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வேலை ஒய்வு பெறும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ 3 கோடியே 34 லட்சம் வெள்ளி கிடைக்கும் என்று மேற்படி தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் பி. பி. நாராயணன் அறிவித்திருப்பது மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும்.

இந்த ஒப்பந்தத்தின் படி 55 அல்லது 60 ஆவது வயதில் வேலையிலிருந்து ஒய்வு பெறுகிற தோட்டத் தொழிலாளர்களுக்கு 1952முதல் 1975 வரை வருடமொன்றுக்கு 50 வெள்ளி வீதமும், 1975 முதல் 1981 வரை வருடமொன்றுக்கு 70 வெள்ளி வீதமும் சேவைக்கால பணம் கணக்கிட்டுத் தரப்படும்.

ஆட்குறைப்பு, ஆட்கழிப்பு போன்ற நடவடிக்கைகளால் வேலையிழக்க நேரிடுபவர்களுக்கு 10 ஆண்டு வரை சேவை செய்த காலத்திற்கு வருடமொன்றுக்கு 40 வெள்ளி வீதமும், 10 ஆண்டுக்கு மேல் 20 ஆண்டு வரை சேவை செய்தவர்களுக்கு வருடமொன்றுக்கு 50 வெள்ளி வீதமும், 20 ஆண்டுக்கு மேல் வேலை செய்தவர்களுக்கு வருடமொன்றுக்கு 70வெள்ளி வீதமும் சேவைக் காலப் பணம் கணக்கிட்டுத் தரப்படும். ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்திருந்தால்தான் இந்த அனுகூலம் கிடைக்கும்.

ஒரு தோட்டம் விற்கப்பட்டு அதை வாங்கிய முதலாளிகள் அத்தொழிலாளர்களுக்கு வேலை தராமல் வேலை நீக்கம் செய்தால், அவர்களுக்கு வேலை நீக்கச் சம்பளமாக 10 ஆண்டுக்கு உட்பட்ட சேவைக்கு வருடமொன்றுக்கு 66 வெள்ளி வீதமும், 20 ஆண்டுக்கு உட்பட்ட சேவைக்கு வருடமொன்றுக்கு 82 வெள்ளி 50 காசு வீதமும், 20 ஆண்டுக்கு மேற்பட்ட சேவைக்கு வருடமொன்றுக்கு 115 வெள்ளி 50 காசு வீதமும் சேவைப் பணம் கணக்கிட்டுத் தர வேண்டும். மேற்படி ஒப்பந்தத்தின் அனுகூலங்கள்

புதிய சமுதாயத்தின் முகவரி
131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

1976 ஜனவரி முதல் தேதியிலிருந்து வேலை ஓய்வு பெற்றவர்கள், ஆட்குறைப்புக்கு இலக்கானவர்கள் ஆகியோருக்கும் கிடைப்பதற்கு வகைசெய்யப்பட்டிருப்பதும் ஏற்கனவே ஓய்வு பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் கவனிக்க வேண்டிய குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதன்படி கடந்த 18 மாதங்களில் வேலை ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களும் இந்த அனுகூலங்களைப்பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொள்ள முடியும்.

வேலை ஓய்வு, சேவைக்கால அனுகூலங்கள். தோட்டத் தொழிலில் கொள்கை அடிப்படையில் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்புதான் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முதலில் சேவைக்கால சம்பளம், வருடம் ஒன்றுக்கு 20 வெள்ளி வீதமே தருவதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது 50 வெள்ளியாகவும் 70 வெள்ளியாகவும் உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நாளடைவில் ஒவ்வொரு வருட சேவைக்கும் ஒவ்வொரு மாதச் சம்பளம் வீதம் சேவைப்பணம் கிடைப்பதற்குத் தோட்ட முதலாளிகள் சங்கம் இணங்குமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

நீண்ட காலம் வேலை செய்தவர்களை உழைப்பை உறிஞ்சிக் கொண்டு கரும்புச் சக்கை போலத் தூக்கியெறிந்த காலனித்துவ நடை முறைகளுக்கு இனிமேலும் தோட்டங்களில் இடமில்லை என்பதையே இந்த சேவைக்கால அனுகூல ஒப்பந்தம் குறிக்கிறது. இதன் அனுகூலங்களைத் தோட்டத் தொழிலாளர்கள் பூரணமாக அடைவதற்குத் தோட்டத் தொழிற் சங்கம் வகை செய்யுமென்று நம்புகிறோம். இத்தகைய அனுகூலங்களைத் தொழிற் சங்கம் மேலும் போராடிப் பெறுவதற்கு அதன் பலம் அசைக்க முடியாதபடி வலுவாக இருப்பது முக்கியமாகும். தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு இன்னும் சங்கம் சாதிக்க வேண்டிய காரியங்கள் நிறைய உள்ளன என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அவ்வகையில் தொழிற் சங்கத்தின் முயற்சிகள் வெற்றியடைவதற்குச் சங்கத்தின் உறுப்பினர் பலம் பன்மடங்கு கூடுவது மிக இன்றியமையாதது. தற்சமயம் தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடங்கியிருக்கும் 6 மாத கால அங்கத்தினர் சேர்ப்பு இயக்கம் வெற்றி அடைவதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் முழு ஆதரவு நல்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு பலமான தொழிற் சங்கமே தொழிலாளர்களுக்கு நன்மைகளைப் பெற்றுத் தருவதிலும் திடமான உறுதியோடு விளங்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டு தேசியத் தோட்டத் தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் பி. பி. நாராயணன் மற்றும் அத்தொழிற் சங்கத்தின் ஏனைய தலைவர்களின் கரங்களை வலுப்படுத்துவது தோட்டத் தொழிலாளர்களின் கடமை என்பது தெளிவு.

சமுதாயத்தின் விண்ணப்பம்

“புதிய சமுதாயம்” இதழுக்கு சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரிடமிருந்தும் மனமுவந்த வலுவான ஆதரவு கிடைத்து வருவது குறித்துப் பெரிதும் பூரிப்படைகிறோம். ஆதரவுக் கரம் நீட்டிவருகிற எல்லா நல்ல உள்ளங்களுக்கும் முக்கியமாக வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். எனினும் புதிய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வாசகர்கள் செய்யவேண்டிய, செய்யக் கூடிய பணிகள் இன்னும் ஏராளம் உண்டு. உங்கள் ஊரில், நீங்கள் வசிக்கும் தோட்டத்தில் புதிய சமுதாயத்திற்கு விற்பனையாளர் இருக்கிறாரா? அப்படி” இல்லாவிட்டால் அந்த விற்பனைப் பொறுப்பை ஏற்பதற்குத்தக்க ஒருவரை தேர்ந்தெடுத்து எங்களுக்கு எழுதுங்கள். முக்கியமாக நமது மக்கள் வாழுகின்ற எல்லாத் தோட்டங்களிலும் விற்பனையாளர்களை நியமிக்க விரும்புகிறோம். இவ்வகையில் வாசகர்கள் கருத்தோடு எங்களுக்கு உதவுவார்களென்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

புதிய சந்தாதாரர்களைச்சேர்த்துக் துக் கொடுப்பதிலும் வாசகர்கள் எங்களுக்கு நன்கு உதவ முடியும். எல்லாத் தமிழ்க் குடும்பங்களிலும் “புதிய சமுதாயம்” படிக்கப்படுகிறது என்னும் மனநிறைவு அளிக்கத்தக்க இலக்கை அடைவதற்குச் சந்தா சேர்க்கின்ற இயக்கம் உதவியாக இருக்கும். ஆங்காங்கு சந்திப்புக் கூட்டங்கள் நடத்தி வாசகர்களை மேலும் பெருக்குவதற்கும் அன்பர்கள் முயற்சிகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறோம். தமிழகம் உள்ளிட்ட வெளிநாடுகளில் வசிக்கின்ற தத்தம் உற்றார் உறவினர்க்கும், நண்பர்களுக்கும் பரிசுச் சந்தா மூலம் புதிய சமுதாயம் கிடைப்பதற்கு வாசகர்கள் வகைசெய்வார்களென்றும் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு வெளிநாட்டுக்குச் செல்லும் ஒவ்வொரு புதிய சமுதாயம் இதழும் உங்களின் நட்பு, பாசம் ஆகியவற்றைப் பலப்படுத்தும் தூதுவனாக விளங்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எழுத்தாளர்கள் புதிய சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தங்களின் தரமான எழுத்துக்கள் மூலம் நன்கு உதவிபுரிந்து வருகிறார்கள். என்றாலும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் அனுப்புகிற கதை, கட்டுரை, கவிதைகள் போதிய அளவு இன்னும் கிடைக்கவில்லை. இந்த எழுத்துப் பஞ்சத்தைப் போக்கித்தரமானஎழுத்தோவியங்கள் தாராளமாகத் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு குறிப்பாக பெயர் பெற்ற பழைய எழுத்தாளர்கள் புதிய சமுதாயத்திற்கு ஆதரவுக்கரம் நல்கும்படி கேட்டுக்கொள்கிறோம். வளரும் எழுத்தாளர்களின் தரமான படைப்புக்களையும் புதிய சமுதாயம் அன்போடு ஏற்கும் என்றும் உறுதிகூறுகிறோம்.

புதிய சமுதாயத்தின் ஆயிரக்கணக்கான பெண் வாசகர்களிடையே எழுத்தாற்றல் படைத்த சகோதரிகள் பலர் இருப்பதையும் நாம் அறிவோம். அவர்கள் மாதர் குலத்திற்குத் தேவைப்படுகிற கோலம், சமையல்குறிப்பு, பூவேலை மற்றும் கட்டுரை கதைகள் பேட்டிகள்முதலான அம்சங்களைக் கூடுமானவரை சுருக்கமாக எழுதி அனுப்புவர் என்றும் எதிர்பார்க்கிறோம்.

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

வேண்டாத நான்கை விலக்க முனைவோம்.

முருகு சுப்பிரமணியன்

நாம் எடுத்துக்கொள்ளும் இரண்டாவது குறள் பொருட்பாலில் "மடியின்மை" என்னும் 61வது அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஐந்தாவது குறளாகும்.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (605)

இந்தக் குறளின் எண் 605. டாக்டர் மு.வ. இதற்கு எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:—

"காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், அளவு மீறிய தூக்கம் ஆகிய இந்நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறுகின்ற மரக்கலமாம்"

ஏற்கனவே முந்திய கட்டுரையில் கூறியபடி இந்தக் குறளையும் இதன் உரையையும் பத்து அல்லது இருபது தடவை திரும்பத் திரும்பஎழுதி மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள்.

"உருப்படாதவன்", "வீணாகப் போகிறவன்" என்று சிலரை நாம் திட்டுவதுண்டு. உருப்படாமல் போவதற்கும், குட்டிச்சுவராகப் போவதற்கும் இந்தக் குறளில் வள்ளுவர் வழி காட்டுகிறார்!

கெட்டுக் குட்டிச் சுவராகப் போக வேண்டுமா? இதற்கு நீண்ட ஆராய்ச்சி தேவையில்லை. மிக எளிதான வழிகள் இதற்கு உண்டு என்கிறார் வள்ளுவர்.

ஒரு நாளில் செய்து முடிக்கக் கூடிய காரியத்தை ஒன்பது நாளில் செய்வது; எதையும் உரிய காலத்தில்- குறித்த தவணையில் செய்து முடிக்காமல் இழுத்தடிப்பது- இதனைத்தான் வள்ளுவர் "நெடுநீர்" என்று குறிப்பிடுகிறார். இத்தகைய வழுவட்டைத்தனம், கால தாமதப் போக்கு, குறித்த தவணையில் எதனையும் செய்து முடிக்காத தன்மை- இது ஒரு மனிதன் வாழ்க்கையில் உருப்படாமல் போவதற்கு மிகச் சுலபமான வழி!

நேரந்தவறாமை என்பது செம்மையான வாழ்க்கை நெறியாகும். எந்த நிகழ்ச்சிக்கும் நேரம் குறித்து, அந்த நேரத்தில் அதனைத் தொடங்கி, முடிக்க வேண்டிய நேரத்தில் அதனை முடிப்பதே அறிவுடைமை. காலம் பொன்னுக்குச் சமமாகக் கருதப்படுகிறது. காலத்தைப் பொன்னைப்போல், ஒவ்வொரு வினாடியையும் பயனுள்ள வினாடியாகப் பயன் படுத்துகிறவர்கள் வாழத் தெரிந்தவர்கள். அவர்கள் நாளும் வாழ்க்கையில் முன்னேறுவதை நாம் காண முடியும்.

பொது நிகழ்ச்சியாயினும், தனிப்பட்ட சந்திப்பாயினும், குறித்த காலத்தில் அங்கு வரவேண்டிய அனைவரும் வந்து, குறித்த நேரத்தில் அந்த நிகழ்ச்சியைத் தொடங்கினால்தான் நிகழ்ச்சி சிறக்கும்! அவ்வாறு குறித்த நேரத்திற்கு வருகிற பெரியவர்களுக்கு மக்கள் மன்றத்தில் நல்ல மதிப்புண்டு; குறித்த நேரத்தில் நிகழ்ச்சியைத் தொடங்குகிறவர்களுக்கும் மரியாதை கிட்டும்.

பிரிட்டனுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு நான் அந்நாட்டு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சென்றிருந்தேன். அச்சமயத்தில் என் வருகைக்காக ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரித்து, அந்த அட்டவணையின்படியே பல இடங்களுக்கும் என்னை அழைத்துச் சென்றார்கள். பிரிட்டிஷ் மக்களின் நேரம் தவறாத பண்பைக் கண்டு நான் நேரடியாக வியக்கிற மாதிரி என் வருகை நிகழ்ச்சிகள் அனைத்தும் குறித்த காலப்படி அத்துணை கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டன.

கடிகார முள்ளில் கண்

எனக்கு வழிகாட்டியாக நியமிக்கப்பட்டிருந்த சகோதரி, கடிகாரத்தை நொடிக்கொரு முறை பார்த்து ஒவ்வொரு சந்திப்புக்கும். உரிய காலத்தில் என்னை அழைத்துச் சென்று சேர்த்துவிடுவார்! அதுபோலவே நான் சந்தித்த பெரிய மனிதர்கள் எல்லாரும் கடிகார முள்ளைக் கண்களில் பதித்திருப்பவர்கள் போல. என்னை வரவேற்கக் குறித்த நேரத்தில் ஆங்காங்கு வாசலில் காத்திருந்தது, எனக்கு நம்பமுடியாத ஆச்சரியத்தை உண்டாக்கிற்று! ஒரு நிமிஷம், இருநிமிஷம் தாமதம் கூட எந்த நிகழ்ச்சியிலும் நேராதது பிரிட்டிஷ் மக்களிடையே நிலவும் கால உணர்வுக்குச் சரியான சான்றாக அமைந்தது.

சில சந்திப்புக்களுக்குக் குறித்த நேரத்திற்கு முன்பே சென்றுவிட்டாலும், அந்த நிமிடம்வரை பக்கத்தில் எங்காவது உலாவிவிட்டுச் சரியாக மணிக்கணக்குப்படியே அந்த இடத்தில் கால் வைப்போம்.

இத்தகைய "கால உணர்வு" வாழ்க்கை உயர்வுக்கு மிக இன்றியமையாதது. காலத்தின் அருமையை உணர்ந்தவர்கள், எதையும் குறித்த நேரத்தில் செய்து முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். எந்த நிகழ்ச்சிக்கும், எந்தச் சந்திப்புக்கும் குறித்த நேரத்தில் சென்று குறித்த நேரத்தில் திரும்புவர்!

ஆனால் நம்மிடையே "நெடுநீர்" என்னும் கால நீட்டிப்புப் போக்கு, சமுதாயத்தின் இயல்புகளில் ஒன்றாகவே அமைந்துவிட்டது. மாலை 5 மணிக்குக் கூட்டம் என்றால் 7 மணிக்குத்தான் தொடங்குவது, 5 மணிக்கு வரவேண்டிய பேச்சாளர் 7 மணிக்கு வருவது இவை நமது "பெருமைக்குரிய" பண்புகளாகக் கூடக் கருதப்படுகின்றன. கலை நிகழ்ச்சி, இலக்கிய விழா என்று ஒரு கூட்டத்தைக் கூட்டி ஆயிரக்கணக்கில் மக்களைச் சேர்த்து. எல்லோரையும் வீணாக ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் வெறுமனே காக்க வைப்பது பெருங்கொடுமையாகும். இத்தகைய கால விரயம் நமது சமூகத்தின் இயல்பான நடைமுறைகளில் ஒன்றாக அமைந்திருப்பது நினைத்து நினைத்து வருந்தவேண்டிய துர்ப்பாக்கியமாகும்.

காலவிரயம், காலதாமதம் இவற்றைத் தவிர்க்க இன்றே உறுதி எடுத்துக்கொள்வோம். கெட்டுப்போவதற்கு உருப்படாமல் போவதற்குத் துணை நிற்கும் "நெடுநீர்" என்னும் வழுவட்டைத்தனம் நமக்கு வேண்டாம். அதற்கு முழுக்குப் போடுவதற்கு ஆயத்தமாவோம். எதனையும் குறித்த வேளையில் செய்வோம்! குறித்த நேரத்தில் தொடங்குவோம். குறித்த நேரத்தில் முடிப்போம். காலத்தை அளந்து செலவிட்டு அதனைப் பொன்னாக—பொருளாக மாற்றுவோம்.

ஃ ஃ ஃ ஃ

இந்தக் குறளில் குறிக்கப்படுகிற மற்றொரு தீமை மறதி ஆகும். தோளில் ஆட்டைப் போட்டுக் கொண்டு வீதியெல்லாம் தேடுகிற "மறதி மன்னர்கள்" நம்மிடையே அதிகம். நினைவாற்றல் மனிதனுக்கு உயிர் நாடி. நினைவாற்றல் மிகுதியாக உள்ள குழந்தைகள் படிப்பில் பிரகாசிப்பதையும், மறதியுள்ள குழந்தைகள் மண்டுகளாகத் திரிவதையும் பார்க்கிறோம். கல்விக்கு மட்டுமல்லாது வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்குமே நினைவாற்றல் மிக முக்கியமான தேவையாகும். ஒரு தடவை பார்த்தால் போதும், அந்த ஆளை மறக்காமல் நினைவில் வைத்துக்கொண்டு மறுபடியும் காணும் போதெல்லாம் "பெயர் சொல்லி" அழைக்கின்ற தலைவர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஆட்களைச் சந்திக்கும் தன் தலைவர் தன் பெயரை மறவாமல் இருக்கிறாரே, பெயர் சொல்லித் தன்னைக் கூப்பிடுகிறாரே என்று எந்தத் தொண்டனும் பூரித்துப் போவது இயல்பு. தலைமைத்துவப் பண்புக்கு நினைவாற்றல் முக்கிய கூறு என்பதையே இது உணர்த்துகிறது.

இது போலவே வர்த்தகம், தொழில் ஆகியவை களிலும் நினைவாற்றல் மிகுந்தவர்கள் அடைகிற பயன் மிகுதியே ஆகும். வாழ்க்கையில் பெயர் போடுகிறவர் அனைவரையும் துருவிப் பார்த்தால் ஞாபக சக்தி அவர்களிடம் நிரம்பி வழிவதைக் காண முடியும். பழகிய ஆட்களை நினைவில் வைத்திருப்பார்கள். அவர்களின் இயல்புகளை நினைவில் வைத்திருப்பார்கள். நடந்த நிகழ்ச்சிகளை அவற்றால் ஏற்பட்ட அனுபவங்களையெல்லாம் அவர்கள் நினைவில் பதித்து வைத்திருப்பார்கள்.

"ஞாபக மறதி" என்பது கெட்டுப் போகிறவர்கள் விரும்பி ஏறுகிற கப்பல்களில் ஒன்று என்று வள்ளுவர் கிண்டலாகச் சொல்வது நமக்கு நல்ல எச்சரிக்கை.

தன்னையே மறந்து தெருவில் நிற்பது

ஞாபக மறதி என்பது வாழ்க்கையில் பொறுப்பில்லாதவர்கள் வளர்த்துக்கொள்ளும் பழக்கமாகும். அவர்கள் குடும்பத்தை மறந்து விடுவார்கள். பிள்ளைகளைக் கூட மறந்துவிடுவார்கள்.

நாம் படித்தவற்றை மறப்பது, பழகியவர்களை மறப்பது, கடந்த காலச் சம்பவங்களை மறப்பது, தன் எதிர்காலக் கடமைகளை மறப்பது. இறுதியில் தன்னையே மறந்து தெருவில் நிற்பது—ஞாபக மறதி இத்தகைய நிராத அவலத்திற்கே வழிவிடும். ஆகவே "ஞாபக மறதி" என்னும் பயங்கரம் நமக்கு அறவே வேண்டாம. அடியோடு வேண்டாம்.

நினைவாற்றலை நாம் நாளும் வளர்த்துக்கொள்வோம். குடும்பத்தை நினைப்போம். உற்றார் உறவினரை நினைப்போம். சமுதாயத்தை நினைப்போம். பெற்ற நன்னாட்டை நினைப்போம், கடமையை நினைப்போம், கருத்தாய் இருப்போம்.

ஃ ஃ ஃ ஃ

"மடி" என்று சொல்லப்படும் சோம்பல் இந்தக் குறள் காட்டுகிற மற்றொரு தீமையாகும்.

"சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்" என்பது நமக்கு முதல் வகுப்புப் பாடம். ஆகவே கெட்டுப் போகிற மார்க்கங்களில் ஒன்றாகச் சோம்பலையும் வள்ளுவர் சேர்த்திருப்பதில் பொருளிருக்கிறது.

ஏதும் செய்யாமல் காலை முடக்கிக் கொண்டு படுத்திருப்பது, காலத்தை வீணே கழிப்பது, "சோம்பல்" என்று கூறப்படுகிறது. "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா" என்று பாரதியார் குழந்தைகளைக்கூட எச்சரித்திருக்கிறார்.

சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பவர்கள், சோம்பலின்றி ஓடியாடித் திரிபவர்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு படியாக முன்னேறுவதைப் பார்க்கமுடியும். அவர்கள் உலகத்தை இயக்கிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் முன்னே போய்க்கொண்டிருப்பார்கள். உலகம் அவர்களுக்குப் பின்னே வந்து கொண்டிருக்கும்.

பம்பரம்போல் சுழலும் சுறுசுறுப்பை-எந்த விநாடியையும் வீணாக்காத சுறுசுறுப்பை—அயராத உழைப்பைப் பெற்றுவிட்டால் அது பெரிய பாக்கியமாகும். வாழ்க்கை வளங்களையெல்லாம் ஒருங்கே கொண்டு குவிக்கும் அற்புத ஆற்றல் அது.

நமக்குச் சோம்பல் வேண்டாம். மரத்தடியில், நடைப்பாதையில், கள்ளுக்கடையில் முடங்கிக் கிடக்கும் அந்தச் சோம்பல் பிடை நமக்கு அறவே வேண்டாம். சீட்டாட்டம், சூதாட்டம் போன்ற கேளிக்கைகளில் பொழுதை வீணே கழிக்கும் அந்தப் பொல்லாத சோம்பல் நமக்கு வேண்டவே வேண்டாம். வறட்டு வாதம், வெற்றுப் பேச்சு முதலியவற்றில் காலத்தைக் கழிக்கும் அந்தத் தீய சோம்பல் நமக்கு அடியோடு வேண்டாம்.

சோம்பலுக்கு இன்றே முழுக்குப் போடுவோம். சுறுசுறுப்பை வாழ்க்கை நெறியாக-தினசரி நடைமுறையாகக் கைக்கொள்வோம். எங்கும் சுறுசுறுப்பு, எதிலும் சுறுசுறுப்பு-எறும்புபோலச் சுறுசுறுப்பு நமது பண்பாக விளங்க வைப்போம்.

ஃ ஃ ஃ ஃ

"துயில்" எனப்படும் தூக்கத்தையும் வள்ளுவர் கெட்டுப் போகிறவர்கள் ஏறுகிற கப்பல்களில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார்.

தூக்கம் என்பது ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையாகும். இரவு ஏழு மணி நேரம், எட்டு மணி நேரம் நன்றாக அயர்ந்து தூங்குவதால் மறுநாள் கலகலப்பாக இருக்கும்! ஆகவே அந்தத் தூக்கத்தை வள்ளுவர் ஒருபோதும் தீமை என்று சாடமாட்டார்.

ஆனால், அளவு கடந்த தூக்கம் பகலெல்லாம் தூங்குவது, விடிந்த பின்னும் வெகு நேரம் தூங்குவது நேரம் காலமில்லாமல் தூங்கிக் கொண்டேயிருப்பது—இத்தகைய வரம்பு மீறிய, வகைகெட்ட தூக்கங்களையே வள்ளுவர் கண்டிக்கிறார்.

தூக்கம் என்பது சோம்பலின் பிரதிபலிப்பே ஆகும். வேலை செய்யவேண்டிய நேரத்தில்-நல்ல பகல் வேளையில்-சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டிய நேரத்தில் தூங்கிக்கொண்டிருப்பவர்கள், கதிரவன் வழங்கியிருக்கும் பகல் நேரத்தையும் இரவாகப் பாழ்படுத்துகிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

உழைக்க வேண்டிய நேரத்தில் தூங்கிக்கொண்டிருப்பவர்கள் வாழ்க்கையில் தங்களை எதிர்நோக்கியிருக்கும் வாய்ப்புக்களை எல்லாம் இழக்கிறார்கள் என்றே பொருள். விழித்துக்கொண்டு விநாடியை எண்ணிக் கொண்டு உழைப்பை நடத்திக்கொண்டு முன்னேற்றப் பாதையில் நகர்ந்துகொண்டிருக்கிற உலகம், தூங்கிக் கொண்டிருக்கிற அப்பாவிகளை அந்தரத்தில் விட்டுவிட்டு வெகுவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

வாய்ப்புக்களை இழக்கிறார்கள்

நேரம் கெட்ட நேரத்தில் தூங்குபவர்கள், முன்னேற்ற வாய்ப்புக்களை இழப்பதோடு, வாழ்க்கை இன்பங்களை, இனிய இயற்கைக் காட்சிகளை, உற்றார் உறவினர்களின் நற்சூழலை, விழாக்கோலங்களை - அனைத்தையுமே இழந்து வெறுமையில் கிடக்கிறார்கள்.

ஆகவே, அத்தகைய தூக்கம்-நீண்ட தூக்கம், வரம்பு கடந்த பேய்த் தூக்கம் நமக்கு அறவே வேண்டாம்.

கண்ணைத் திறந்துவைத்து விழித்திருந்து வாழ்க்கை-யை எல்லா வகையாலும் துய்க்க முற்படுவோம்: விழிப்பும் உழைப்பும் நமது வாழ்க்கையை வளம் நிறைந்ததாக்க வழி காண்போம்.

ஃ ஃ ஃ ஃ

ஒன்று: காலவிரயம்
இரண்டு: ஞாபகமறதி
மூன்று: சோம்பல்.
நான்கு: பெருந்தூக்கம்

மனிதனைக் கெடுக்கும் இந்த நான்கு பிடைகளும் நம்மை அண்டாதபடி பார்த்துக் கொள்வதற்கு வள்ளுவரின் குறள் நமக்கு வழிகாட்டுகிறது. மீண்டும் அந்தக் குறளை ஒருமுறை படித்து நினைவில் வைப்போம்.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்" (605)



வாழைக்காய், கத்தரிக்காய் இவற்றை நறுக்கித் தண்ணீரில் போடும்போது சிறிது உப்பையும் சேர்த்துக்கொண்டால் கறுக்காமல் இருக்கும்.

• • • • • • • • •

தினமும் பூண்டு சாப்பிட்டு வந்தால் உணவு நன்றாக ஜீரணமாகும்! வாயு உபத்திரவம், இரத்த அழுத்தம், இருதய நோய் முதலியவை வாரா.

இரா. அம்பிகா,
லங்காட்



9. 'சொல்லத்தான் நினைக்கிறேன்'

நவீன் வீட்டில் தங்குவதே மிகவும் அபூர்வம்! இன்று அவன் வீட்டில் தங்கியிருக்கிறான்! அதைவிட ஆச்சரியம், நாளிதழ் படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறான் என்பதுதான்!

நவீனின் அப்பா ஆதிகேசவன் மிகவும் கண்டிப்பானவர்! அவரைக் கண்டதும் அட்டகாசம் செய்யும் பிள்ளைகள் எல்லாம் மிகவும் சாதுவாக அமர்ந்து ஒழுங்காகத் தங்கள் வேலைகளைச் செய்வார்கள். அல்லது அப்படிப் பாவனையாவது செய்வார்கள்.

அப்போதே நவீன் கொஞ்சம் துணிச்சல்காரன்தான்! முரட்டுச் சுபாவம் வேறு! வளர்ந்து புத்தி தெரிந்தபின் சரியாகிவிடும் என்று நீள் மனத்தில் நினைத்துக்கொண்டாலும் வெளிப்படையாகக் கெடுபிடியாகவே இருப்பார்!

அது ஒருகாலம்!

இப்போது வயதாகிவிட்டது! பிள்ளைகளும் தலைக்குமேல் வளர்ந்துவிட்டார்கள். இப்போதெல்லாம் அப்பாவைப் பார்த்து நடுங்கக்கூடிய குழந்தைகள் யாருமில்லை! அதட்டி அடக்கிவைக்க வேண்டும் என்ற நிலையுமில்லை!

அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்! வீட்டுக்கு வந்த நேரத்தில் சாப்பாடு! இரவு படுக்கை! இந்த அளவில்தான் நவீனின் போக்கு இருந்தது.

ஏதோ ஒரு சிறு கம்பெனியில் சாதாரண வேலை! அவன் தேவைக்குப் பணம் கிடைக்கிறது என்ற நிலை! வேலைக்குப் போன பிறகாவது பொறுப்பு வந்துவிடும் என்ற நினைவும் தேய்ந்துவிட்டது.

வம்பு தும்பு எதிலும் மாட்டிக்கொள்ளாதவரை சரி! இந்த அளவில்தான் அவனைப் பற்றி வீட்டிலுள்ளவர்கள் நினைத்தார்கள். கால நேரம் கருதாமல் வெளியில் சுற்றித் திரிகிறான் என்பதைத் தவிர வேறு எந்தப் புகாரும் அவனைப் பற்றி இதுவரை வரவில்லை! அதுவே அவனைப் பொறுத்தமட்டில் பெரிய நிம்மதி என்று இருந்தார்கள்!

அவனது போக்கிரித்தனங்கள் சிறிதுசிறிதாக வளர்ந்து கொண்டு வருவதையும் வீடுவரை எட்டாத விஷமத்தனங்கள் நடைபெற்றிருப்பதையும் வெகு சிலரே அறிந்திருந்தனர்.

அந்த வெகு சிலரில் லல்லியே முதன்மையானவள்! அதற்குக் காரணம் இருந்தது!

கலகலப்பான சுபாவங்கொண்ட லல்லி எல்லாரிடமும் பழகுவது போலவே அவனிடமும் பழகினாள்!

ஆனால் அவனுக்கு லல்லியிடம் குறியிருந்தது! தன்னைப் போல் கட்டுப்பாடின்றி எங்கும் செல்லும் அவள் தன் போக்குக்கு ஒத்து வருவாள்! சுலபமாகத் தன் பக்கம் இழுத்துக்கொள்ள முடியும் என்று எண்ணிக் கொண்டிருந்தான்!

அதனால் அவளையே வட்டமிட்டுக்கொண்டிருந்தான். ஆரம்பத்தில் லல்லி இதைப் பற்றி அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை! போகப்போக அவனது நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளத்தொடங்கி விட்டாள்.

அதனால் வெறுப்பு அதிகமாகியது! அவனது விஷமங்களைக் கண்டிக்கவும் அவனை அலட்சியப்படுத்தவும் தொடங்கினாள்.

"உறவு" என்ற நினைவோடு உடலோடு ஊன்றிப் போன பாசம் ஒன்று அவ்வப்போது தலைதூக்கிக் கொள்வதை நிராகரிக்க முடியாமல் அவனைப் பார்க்கும்போதும் அவன் வலிய வந்து பேசும்போதும் அவளால் தவிர்க்கமுடியாமல் போய்விடுவதுண்டு.

அவனும் லல்லியின் சுபாவத்தை அன்கு அறிந்தவன்தான்! எவ்வளவு நான் அலட்சியமாக ஆத்திரமாகப் தபசினாலும் அவளுக்குத் தன் மீது பேன்பு இருக்கும் என்ற நினைப்பு அவனிடம் இருந்தது.

எனவே லல்லியின் துடுக்குத்தனமான பேச்சை அவன் சீரியசாக எடுத்துக் கொள்வதே இல்லை!

அவன் அடுத்த முறை வலிய வந்து பேசும்போது லல்லிக்கு அனுதாப உணர்ச்சியே மேலோங்கும்.

ஆனால் சகஜமாகப் பேசுவாள்! இறுதியில் இப்படி ஏதாவது ஆத்திரத்தோடு ஏசிவிரட்டும் நிலையிலேயே முடியும்! இது அவர்களுக்குள் பழகிப்போன நிலைதான்!

ஆனால் இப்போது புதிதாக முளைத்திருந்த பிரச்சினை லல்லிக்கு அவனிடமிருந்து விலக வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

கோபிநாத்திடம் லல்லி பழகுவதை விரும்பாத நவீன் அடிக்கடி அவளிடம் வம்புக்கு வந்தது பிடிக்கவில்லை.

வனிதாவைப்பார்த்த பிறகு அவன் நடந்துகொண்ட விதம். கள்ளங்கபடமில்லாத வனிதாவின் வாழ்க்கையில் புகுந்து விஷமத்தனம் செய்துவிடப் போகிறானே என்ற ஆவேசம் இவையெல்லாம் அவளை அவ்வளவு தூரம் பேசத்தூண்டின! இனிமேல் அவன் பார்வையிலிருந்து வனிதா தப்பமுடியாது! எப்படியும் அவளைப் பின்தொடர்ந்து வட்டமிடவே செய்வான்!

அவனைத் தடுக்க அங்கே யாருமில்லை! வனிதாவும் பெற்றோரின் பாதுகாப்பில் இல்லை! இந்தச் சூழ்நிலை அவனுக்கு அசாதாரண துணிவைக் கொடுத்திருக்கும்.

எனவே இதை ஆரம்பத்திலேயே தடுத்துவிட வேண்டும்என்ற பரபரப்பு லல்லியிடம் ஏற்பட்டிருந்தது.

அவள், மாமா வீட்டுக்குத் திடீரென்று வந்துவிட்டாள்! அது அவளுக்கு வழக்கம்! எனவே யாரும் ஆச்சரியப்படவில்லை!

ஆனால் நவீனுக்கு உள்ளுக்குள் ஓர் உந்தல்.

லவே வந்திருப்பான் என்று தீர்மானமாக நினைத்தான். தான் இல்லாத போது எதையாவது சொல்லி வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் தன்னிடம் பாயும்படிச் செய்து விடுவாளோ என்ற எண்ணம் தலை நீட்டியது.

நீண்டநேரம் அவள் தங்கியிருக்கப் போவதில்லை! எனவே அவள் என்னதான் செய்கிறாள் என்பதைப் பார்த்துவிடவேண்டும் என்பதற்காகவே வெளியில் செல்லும் தனது திட்டத்தை மாற்றிக்கொண்டு வீட்டிலேயே இருந்தான்.

லல்லிக்கு அவனது நோக்கம் இலேசாகப் புரிந்திருந்தது! உன்னை நான் சும்மா விடப் போவதில்லை என்பதுபோல அவனைப் பார்வையால் மிரட்டிக்கொண்டே இருந்தாள்.

ஹாலில் யாருமில்லை! நவின் மட்டுமே இருந்தான்! மாமாவிடம் விஷயத்தைச் சொல்வதற்கு முன் அவனை எச்சரித்துப் பார்ப்போம் என்று விரும்பினாள்.

தான்! அவன் பார்வையில் என்று மில்லாமல் குரோதம் கொப்பளித்தது.

"வந்த காரியம் முடிந்துவிட்டதா...? கோள் மூட்டியாயிற்றா...?"

"வீணாக வம்புக்கு வராதே! உன்னை எச்சரித்துவிட்டுப் போகவே வந்தேன்" ஏன் என்பதுபோல் அவளை வெறித்து நோக்கினான்.

"நீ என்னிடம் நடந்து கொள்வதுபோல வனிதாவிடம் செய்யாதே! அவள் பெரிய இடத்துப் பெண்! அவளுடைய அப்பா மிகவும் பொல்லாத மனிதர்! நினைவிருக்கட்டும்!"

லல்லி எப்போதும்போல் கேலியாகக் கூறவில்லை! உண்மையாகவே அவனை எச்சரிக்கை செய்யவேவிரும்பினாள்.

"இருக்கட்டுமே எனக்கென்ன வந்தது..." அளவுக்கு மீறிய ஆவேசத்துடன் இன்னும் என்னவோ சொல்லவந்தவனின் பேச்சு தடைப்பட்டு நின்றது. லல்லி திரும்பிப்



நின்று கொண்டிருந்தார்!

10. 'சொல்லியொன்றும் தெரிவதில்லை'

தானும் நவீனும் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று அங்கே மாமா வந்து நிற்பார் என்பதைச் சற்றும் எதிர்பாராத லல்லி ஒரு கணம் துணுக்குற்றாள்!

நவீனின் முகம் வெளிறிக் காணப்பட்டது.

என்ன பேசுவது? யார் முதலில் பேசுவது? என்பது போல் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றனர்.

அவர் எப்போது வந்தார்? தாங்கள் பேசியதை எல்லாம் கேட்டிருப்பாரா என்ற சந்தேகம் ஏற்பட்டது! எனவே பேச்சைத் திசை மாற்றலாமா வேண்டாமா என்பதுபோல் ஜாடையாக நவீனின் பக்கம் பார்வையை ஓட்டினாள்.

அவனும் அதிர்ச்சியடைந்தது போலவே காணப்பட்டான். மௌனத்தை அவரே கலைத்தார்.

"என்ன லல்லி! நவின் என்ன சொல்கிறான்...?" அவர் குரலில் எந்தச் சலனத்தையும் காணோம்! அந்த அழுத்தமே அவளுக்குச் சங்கடமாக இருந்தது!

"நவீன் எப்போதாவது தன் மனத்தில் உள்ளதை அப்படியே கூறி இருக்கிறதாக உங்களுக்கு நினைவிருக்கிறதா மாமா...!"

லல்லி மிகவும் சாமர்த்தியமாகப் பேசினாள்!

நவீன் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆதிகேசவன் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"இல்லை! நீ என்னவோ எச்சரிக்கை செய்வது போல எனக்குப் பட்டது அதுதான் என்னவென்று கேட்டேன்!"

அவர் பேச்சு சாதாரணமாகவே இருந்தது!

அப்படியானால் பேச்சு அவர் காதில் விழுந்திருக்காதோ?...

நவீனின் முகம் பழைய நிலைக்கு வந்தது! தாங்கள் பேசிக்கொண்டது அப்பாவின் காதில் விழுந்திருக்காது என்ற நிம்மதி ஒரு தெம்பை அளித்தது.

வயோதிகத்தின் காரணமாகக் காது மந்தம், கவனக்குறைவு போன்றவை ஏற்பட்டு வருவதை அவன் அறிந்திருந்தான்.

லல்லியாலும் இதை யூகித்துக் கொள்ளமுடிந்தது. ஆனால் சமயத்தை நழுவ விடாமல் மாமாவுக்கு எட்டும் படியாகச் சிலவற்றையாவது சொல்லிவிட வேண்டும்! இல்லாவிட்டால் நவீன் அடங்கமாட்டான் என்று நினைத்தாள்.

"மாமா! நவீனுக்கு நீங்கள் ரொம்பவும் செல்லம் கொடுத்து இப்படிக் கெடுத்துவிட்டீர்கள்! அதனால்தான் இப்படி ஊரைச்

சுற்றிக்கொண்டு அலைகிறது! சொன்னால் கேட்பதில்லை...! இது கடைசியில் பெரிய வம்பில் முடியப்போகிறது...! பிறகு வருத்தப்பட்டுப் பயனில்லை...!"

"அப்படியா...? இப்போது என்ன செய்துவிட்டு வந்து இப்படி நல்ல பிள்ளைபோல் அமர்ந்திருக்கிறான்...?"

"என்னுடைய சிநேகிதி ஒருத்தியிடம் மோதிவிட்டு வந்திருக்கிறான். அவள் பெரிய இடத்துப் பெண்! அந்தச் செல்லப் பெண்ணுக்கு ஏதாவது நேர்ந்தால் அவளுடைய அப்பா ஆளை உண்டு இல்லை என்று செய்து விடுவார்! இவனுக்கு எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியாகத் தோன்றுகிறது. ஏதாவது விபரீதம் வருவதற்குள் போக்கை மாற்றிக் கொள்ளச் சொல்லுங்கள்!"

லல்லி வேண்டுமென்றே பட்டும் படாமலும் விஷயத்தை வெளியிட்டாள்! "அப்படியா? இவன் என்ன செய்துவிட்டு வந்தான்...?"

"அதுதான் சொன்னேனே ஒரு பெண்ணிடம் மோதிவிட்டு வந்ததாக..." அவர் சடாரென அவனைப் பார்த்தார்! பார்வையில் சூடு தெரிந்தது!

"அது... அது... வந்து ஆக்ஸிடெண்டாகத்தான்...!"

நவீனின் திணறல். லல்லிக்கு உற்சாகத்தை மூட்டியது!

"அது ஆக்ஸிடெண்டோ வேண்டுமென்றோ தெரியாது! அவளுடைய கண்ணில் ஒரு துளி நீர் வெளிவந்தால் கூடப் பொறுக்க மாட்டார் அவளது அப்பா! அது மட்டும் நிச்சயம்! இனிமேல் அந்தப் பக்கம் தலையைக் காட்டினாயோ தொலைந்தாய்..."

லல்லி இரு பொருள்படப்பொடி வைத்துப் பேசினாள்! மாமாவுக்குப் புரிகிறதோ இல்லையோ! நவீனுக்கு மனத்தில் படவேண்டும் என்றுதான் அப்படிப் பேசினாள்.

"என்னம்மா லல்லி! என்னவோ ஆக்ஸிடெண்டு என்கிறான்! நீ என்னவோ சொல்கிறாய்...? யார் அந்தப் பெண்? காயம் பட்டு விட்டதா...?"

லல்லிக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது! மிகவும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"நல்ல வேளை! நானும் கூட இருந்ததால் விபரீதம் எதுவும் நடக்கவில்லை! காயம் படாமல் அவளைக் காப்பாற்றி வைத்தேன்!"

லல்லி என்ன சொல்கிறாள் என்று நவீனுக்குப் புரிந்தது. பல்லைக் கடித்துக் கொண்டான்!

ஆத்திரம் அளவு கடந்தது! விருட்டென்று எழுந்து அவள் அருகே சென்றான்!

"அந்தக்கோபிநாத்தைப்போன்ற அயோக்கியன் என்று என்னையும் நினைத்தாயா...?"

"சேச்சே! அப்படிச் சொல்ல நான் என்ன முட்டாளா...? உனக்கும் அவனுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா...? பாவம்! கோபிநாத்தோடு உன்னையா ஒப்பிடுவது...?" லல்லி வார்த்தைகளாலே அவனைச் சாடினாள்.

இது என்ன நாடகம் என்று புரியாமல் அவர்களைப் பார்த்தார் ஆதிகேசவன்.

இந்த முரடன் யாரையோ மோட்டார் சைக்கிளில் இடித்துத் தள்ளிவிட்டான் போலிருக்கிறது என்பதாக யூகித்துக் கொண்ட அவர் பிரச்சினையை லல்லியிடமே விட்டு விட விரும்பினார்.

"லல்லி, இவனுக்குப் புத்தி சொல்லி நான் அலுத்துப் போய் விட்டேன்! இனிமேல் நீயே சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிக் கொள்! என்ன செய்தாலும் சரி! உன்னிஷ்டம்! அப்படியாவது திருந்துகிறானா பார்க்கலாம்"

இவர்கள் பேச்சை அவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ளாத ஆதிகேசவன் அங்கிருந்து நகர்ந்து செல்ல விரும்பினார்.

"ஹூம்! இவள் பெரிய புத்திசாலி! எனக்குச் சொல்ல வந்து விட்டாள்! முதலில் நீ சரியாக நடந்து கொள்! நீயும் பெண்தான் என்பதை மறந்து விடாதே..! விபரீதம் உனக்கும் ஏற்படலாம்... அதை மறந்து விடாதே..."

விருட்டென்று ஹாலைவிட்டு வெளியேறினான்.

"மாமா! உங்களுக்கு வெளியில் நடப்பது எதுவுமே தெரியாது போலும். இவன் யாரிடமாவது நன்றாக உதைபட்டுக் கொண்டு வரப்போகிறான் பாருங்கள்...!"

லல்லி வேண்டுமென்றே குரலை உயர்த்திப் பேசினாள்! வாசல் வரை சென்றுவிட்ட நவீன் நின்று திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வையின் குரூரத்தை அவளால் உணர முடிந்தது!

பிறகு ஒன்றும் பேசாமல் வேகமாக வெளியே சென்றான்! சில விநாடிகளுக்குப் பின் மோட்டார் சைக்கிள் கடும் வேகத்தோடு புறப்பட்டுச் செல்லும் ஒலி கேட்டது!

ஆதிகேசவன் லல்லியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவள் சோர்ந்துபோய்ச் சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

மாமாவிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவோமா என்று கூட நினைத்தாள்! ஏனோ அவரிடம் இதைச் சொல்ல. அவளுக்கு மனம் வரவில்லை. இதையெல்லாம் அறிந்து கொண்டு இந்த வயதான காலத்தில் கவலைப் பட்டு வருந்துவதைத் தவிர அவரால் என்ன செய்துவிட முடியும். லல்லி ஏதோ தீர்மானத்திற்கு வந்தவள்போல எழுந்தாள்.

"மாமா! நான்போய் வருகிறேன்! முக்கியமான வேலை இருக்கிறது!" அவரது பதிலுக்குக்கூடக் காத்திராமல் பரபரப்பாக வெளியேறும் அவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் ஆதிகேசவன்!

(வளரும்)



ஊர்ஜிதம்

"தன்வினை தன்னைச் சுடும்"
ஆகா! எவ்வளவு பெரிய உண்மை!
ஏதையும் எரிக்க எண்ணும்
நெருப்புக் குச்சி
முதலில்
தன்னைத்தானே எரித்துக்
கொள்கிறதல்லவா?

ஆயிரம் பொய்யைச் சொல்லி...

மூன்று முடிச்சுப் போடுவதற்கு
எவ்வளவு நீளக்
கயிறு திரிக்கவேண்டியிருக்கிறது!

மினிஸ்கர்ட்

நிர்வாணத்திற்கும்
பதினாறு முழத்திற்கும்
ஏற்பட்ட
சமரச உடன்படிக்கை!

சமத்துவம்

ஆணும் பெண்ணும் சமம்
இல்லை என்பதற்கு
இதோ இன்னோர் உதாரணம்:
"லேடீஸ் ஃபர்ஸ்ட்!"

—எம். ஏ. இளஞ்செல்வன்

வேற்றுமைகள்

சிங்கை முகிலன்



பல இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட பூக்கள், அந்தப் பூக்கடைக்குப் பொலிவூட்டுவது போல் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

ஒரு பக்கம், பூக்களை மாலையாகத் தொடுப்பதற்கான நூல் பந்தும் அதற்கு நேர் எதிரே மல்லிகைப் பூக்களும் ஒன்றை ஒன்று பார்க்கும் அளவில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த இரண்டுக்கும் இடையே ரோஜாப்பூக்களும் மனோரஞ்சிதமும் இருந்தன.

இந்தப் பூக்களில் எதற்கு அதிகமான மணம் என நூல் பந்து யோசித்துக் கொண்டிருந்த வேளையில், "என்ன நூலாரே, மணத்தைப் பற்றிய ஆராய்ச்சியா? அல்லது மண்வளத்தைப் பற்றிய ஆராய்ச்சியா?" என்று ஒரு ரோஜாப்பூ கேட்டது.

"மணத்தைப் பற்றிய ஆராய்ச்சிதான்"— நூல் பந்து இப்படிக் கூறிவிட்டு, ஏதோ ஓர் அர்த்தத்துடன் அதைப் பார்த்தது.

ரோஜாவின் உள்நோக்கம் புரியாத ஒரு மல்லிகைப் பூ, "நீ எதற்காக இப்படிக் கேட்கிறாய்?" என்று ஆரம்பித்தது.

"பூக்கள் என்றால் பூக்கள்தான். ஆனால், அதனதன் தராதரத்தைப் பார்க்கும்போதுதான் என்னவோ போல் இருக்கிறது!"

"எதற்காக அப்படிச் சொல்கிறாய்?" என்று மனோரஞ்சிதம் இடையில் குறுக்கிட்டது.

"இப்போது என்னுடன் இருக்கும் ரோஜாப்பூக்கள் ஒரே இடத்தில் கொய்யப்பட்டவை என்று நீ நினைக்கிறாய்?" – ரோஜாப் பூ, தன் உயர்ந்த தன்மையைக் காட்டிக் கொள்ள இப்படிக் கேட்டது.

"அதனால் என்ன, ரோஜாப் பூவை ரோஜாப்பூ அல்ல என்று சொல்லிவிட முடியுமா?"

"சொல்லிவிட முடியாததுதான். ஆனால், அவற்றின் மண்வளத்தையும் அவை வளர்ந்த இடத்தையும் வளர்த்தவரின் மனவளத்தையும் பார்க்கும்போது, வித்தியாசமாக எண்ணத் தோன்றுகிறதல்லவா?"

"நீ வேண்டுமானால் அப்படி எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அப்படி எண்ணவே இடமில்லை!"- மனோரஞ்சிதம் அதை இப்படி மடக்கியது.

"எதையும், எப்போதும் நீ பரந்த நோக்கத்தோடு பார்ப்பதால்தான் இப்படிச் சொல்கிறாய். என்னைப் பொறுத்தவரையில் நான் அப்படி நினைப்பதில்லை!" என்று ரோஜாப் பூ கூறிவிட்டு, அந்த மனோரஞ்சிதப் பூவை ஒரு மாதிரியாகப் பார்த்தது.

"நீ சொல்வதைப் பார்த்தால், எந்த இடத்தில் வளர்ந்தது, எப்படி வளர்ந்தது என்பதையெல்லாம் பார்க்கவேண்டுமென்று சொல்வதைப் போலல்லவா தெரிகிறது?"

"ஆம். அதுவே தான். உருவத்தாலும் மணத்தாலும் ஒன்றுபோல் இருந்தாலும், அதனதன் பூர்வீகத்தைத் தெரிந்துவைத்திருப்பது நல்லதல்லவா?"

"நமக்கு வேண்டியது நல்ல மணம்தானேயன்றி, இப்படிப்பட்ட ஆராய்ச்சியல்ல! மனித வர்க்கத்தில்தான் இப்படி எடுத்ததற்கெல்லாம் என்ன இனம் என்று பாகுபாடு படுத்தி நல்ல அறிவாளிகளை எல்லாம் இழந்துவிடுகிறார்கள் என்றால், நாமும் அப்படிச் செய்து நல்லவற்றை இழந்து நாசமடையவேண்டுமா என்ன?

குறுகிய நோக்கம், குறுகிய புத்தி என்பதையெல்லாம் நம்மைப் பயன்படுத்தும் அந்த மனிதர்களுக்கு இருப்பதால்தான், இன்று வரை ஒன்றுபட முடியாது அழிந்து கொண்டு வருகிறார்கள்! இது, உனக்கும் எனக்கும் தெரிந்ததுதான்!


நாம் அந்த அளவிற்கா தாழ்ந்து விட்டோம்; வளர்ந்த இடத்தையும் வளரும் இடத்தையும் பார்ப்பதற்கு? நமக்கு வேண்டியது என்ன? மணம்! ரோஜாவுக்குள்ள மணம் ரோஜாவுக்கும், மல்லிகைக்குள்ள மணம் மல்லிகைக்கும் இருக்க வேண்டிய மணம்.

அப்படி ஒரு தன்மை நம்மிடையே இருப்பதினால்தான் நமக்குள்ளே நாம் மதிப்பைப் பெறுகிறோம் - மணத்தைப் பெறுகிறோம்" என்று விரிவாகவும், விளக்கமாகவும் கூறியது மல்லிகைப் பூ.

இந்த வாதத்தைக் கேட்ட நூல் பந்து, "இந்த ரோஜாவுக்குள்ள மனவேற்றுமையைப்போல் நானும் வேற்றுமை கொள்ள ஆரம்பித்தால், உங்கள் கதி என்ன ஆகும் என்பதைப் பார்த்தீர்களா? எனக்கு அப்படிப்பட்ட எண்ணமே இல்லாததால்தான் உங்களை எல்லாம் ஒற்றுமை என்னும் நூலால் பிணைத்து, மாலை என்னும் பெயரில் மக்கள் மத்தியில் நடமாட விடுகிறேன். இந்த ரோஜாவைப்போல் நானுமிருந்தால், நீங்கள் இந்த மனிதச் சந்தைக்குத்தான் வந்திருக்க முடியுமா? உங்கள் வாழ்வோ குறுகியது. அதற்குள் ஏதாவது நல்ல செயலைச் செய்துவிட்டுப் போவோமே என்று எண்ணாது, இப்படி அடித்துக் கொண்டிருந்தால் எப்படி முன்னேற முடியும்?" என்று கூறிவிட்டு ரோஜாப் பூவைப் பார்த்தது.

ரோஜாப் பூ எதுவும் கூற முடியாத நிலையில், நூலையே பார்த்துக் கொண்டிருந்தது! ●

அறிவற்றோர்



● கடந்தகாலத்துத் தவறுகளைக் கொண்டு தன்னைத்தானே திருத்திக் கொள்ளாதவன்.

● வாழ்க்கையில் சிறப்புற்று முன்னுக்கு வந்த ஒவ்வொருவரும் மற்றவர்களால் தூக்கிவிடப்பட்டவர் என எண்ணுபவன்.

● மனம்போன போக்கில் போவதை மாற்றிக்கொள்வதற்கு வேண்டிய தைரியம் இல்லாதவன்.

● அதிர்ஷ்டம் தன் பக்கம் எப்போது வந்தடையுமோ என சதா காத்துக்கொண்டே இருப்பவன்.

● "அதைச் செய்யவே முடியாது" என்னும் சொற்களைத் தன் நாவின் நுனியிலே எப்போதும் வைத்துக் கொண்டு சோம்பித்திரிபவன்.

● பிறரிடம் காணும் அற்பக் குறைகளைப் பெரிதுபடுத்திக் குறை சொல்லித் திரிபவன்.

● கொடுக்கிற தெய்வம் தானே கொடுத்துவிட்டுப் போகட்டுமே எனத் தன்முயற்சியின்றி வாழ்பவன்.

தொகுப்பு: ரெ. தம்புராஜ், பாகன் செராய்

நம்பிக்கைச் சின்னங்கள்



இவ்வாண்டு மலாயாப் பல்கலைக்கழக இந்தியப் பகுதியில் படிக்கும் மாணவர்களுள் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிப்பவர்கள் எழுபேர்.

இந்த எழுவரும் தத்தம் துவக்கக் கல்வியைத் தமிழில் கற்றவர்கள். தமிழ்ப் பள்ளியில் படித்து விட்டுப் புகுமுக வகுப்பில் சேர்ந்து இன்று பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைத்திருப்பவர்கள்.

இவர்களிடமுள்ள வேறொரு சிறப்பு: அனைவரும் தோட்டப் புறங்களில் இருந்து வந்திருக்கும் நமது சமுதாயத்தின் விடிவெள்ளிகள். நாம் அனைவரும் காணவும் அமைக்கவும் துடிக்கும் புதிய சமுதாயத்தின் நம்பிக்கைச் சின்னங்கள்.

இவர்களைப் பேட்டி கண்டதில் "புதிய சமுதாயத்திற்கு" ஒரு தனி மகிழ்ச்சி. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்று வள்ளுவன் கூறினானே, அந்த மகிழ்ச்சி.

கு. நாராயணசாமி

"எட்டு ஆண்டுகள் ஆசிரியராக இருந்து பெற்ற அனுபவத்தில், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தமிழ்க் கல்வி தடையல்ல என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். பல தமிழ்ப் பள்ளிகளில் உள்ள வசதியின்மை, பெரும்பாலான பெற்றோர்களின் அக்கறையின்மை, வறுமை ஆகியவையே முட்டுக்கட்டைகள்; தமிழல்ல!

வயதால் இளமையாக இருக்கும் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த பெற்றோர்களில் பலர், எண்ணத்தால் பழமையானவர்களாக கல்வியில் அக்கறை காட்டாத முதிய பெற்றோர்களைப்போல் இருக்கின்றனர். இது நமது சமூகத்திற்கு இன்னும் பேரழிவைத் தரும் என்ற அச்சம் எனக்குண்டு."

செ. குமரன்

கெடா மாநில எழுத்தாளர்-வாசகர் இயக்கம் நடத்தும் எம். சி. இ., எச். எஸ். சி. தேர்வுக்குரிய இலவசத் தமிழ் வகுப்பு, நான் பல்கலைக்கழகத்தில் சேரும் தகுதியைப் பெருக்கியது. அந்த இயக்கத்தைப் போல நாட்டிலுள்ள மற்ற இயக்கங்களும் ஆங்காங்கே உள்ள தமிழ் மாணவர்களுக்கு வகுப்பு நடத்தினால் பல்கலைக்கழகத்தில் இன்னும் அதிகம் பேர் சேர வாய்ப்புண்டு. மற்ற இயக்கங்களில் சில இவ்வாறு வகுப்புக்கள் நடத்துகின்றன என்பதையும் நான் மறுக்கவில்லை. பொதுவாக வகுப்பு நடத்தும் அத்தனை இயக்கங்களும். அத்துறையில் மேலும் தீவிரம் செலுத்தவேண்டும்."

"இலவச வகுப்பு நடத்துவதோடு நாட்டிலுள்ள எல்லா இயக்கங்களும் வேறொரு முக்கிய பணியையும் செய்யவேண்டும். நமது இனத்தவர்களில் பெரும்பாலோர் தோட்டங்களில்தான் வாழ்கின்றனர். அவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தையும், அதில் அவர்கள் கொள்ளவேண்டிய அக்கறையையும் உண்டாக்குவதை இயக்கங்கள் தங்களின் தலையாய பணியாகக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தோட்டப்புற மக்களின் முன்னேற்றம்தானே நமது உண்மையான முன்னேற்றம்?"

ஆ. நாகப்பன்

"7 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கும் எனக்குப் பல்கலைக்கழகத்தில் நுழைய வாய்ப்புக் கிடைத்ததற்குத் தமிழும் முக்கிய காரணமாகும். தமிழில் நான் பெற்றிருந்த சிறப்புத் தேர்ச்சி பல்கலைக்கழகத்தின் நுழைவுக்குத் தேவைப்படும் புள்ளிகளைக் கூட்ட உதவியது. சிலர் நினைப்பதுபோல் தமிழ் என்னைக் காலை வாரிவிடவில்லை, கல்வித்துறையில் முன்னேறு என்று வாரி அணைத்து வாழ்த்தி அனுப்பியிருக்கிறது."

கு. கிருஷ்ணன

"பத்து ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவன் நான். தமிழ் படிப்பவர்களில் பெரும்பாலோர், ஆசிரியராகிவிட்டால் போதும் என்று திருப்தி அடைந்துவிடுகிறார்கள். ஆனால் ஆசிரியராக இருந்துகொண்டே மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த நினைக்கும் அதே வேளையில், கல்வியில் உயர்ந்த நிலையை அடையவேண்டும் என்னும் நோக்கம் கொண்டதனால்தான் நான் இன்று பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருக்கிறேன்."

க. கணேசன்

"ஆரம்பக் கல்வியைத் தமிழில் கற்ற பிறகு சொந்த முயற்சியில் மேலும் தமிழறிவைப் பெருக்கிக் கொண்டேன். ஆறும் வகுப்புக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடைப்பட்ட பள்ளிகளில் தமிழ் அறிவைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பு அத்துணைப் பிரகாசமானதாக இல்லை. இதற்கு நமது எல்லாத் துறைகளையும் சேர்ந்த தலைவர்களும் அரசாங்கமும் வழி காணவேண்டும்."

மு. தர்மராஜா

"தமிழ்ப் பள்ளிப் படிப்புக்குப் பிறகு தமிழின் தொடர்பு விடுபட்டிருந்தது. பக்தி ரசம் ததும்பும் தேவாரப் பாடல்களைக் கேட்ட பின்பு எனக்குத் தமிழைச் சிறப்பாகக் கற்கவேண்டும் என்று தோன்றியது. அதன் பலனாகப் படித்த தமிழ் இன்று பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பைத் தந்துள்ளது."

பேட்டி: பாதாசன்

மனசைவக் கேளுங்கள்

எம். எஸ். மணியம், பில்மோர் தோட்டம், பந்துதிகா

கே: நம் நாட்டில் அடி மரத்திலிருந்து கிளை வரைக்கும் சாதி என்னும் ஒரு கொடிய நோய், பரவிக்கொண்டிருக்கிறது. அந்த நோய் பரவாமல் இருக்க மருந்து உண்டா?



ப: நமது சமூகம் கல்வியில் மேம்பாடு காண்பதே இந்தச் சாதிப்பித்து தெளிவதற்குத் தக்க மருந்து.

ஏ. எஸ். ரவி பெருமாள், குக்கூப் தோட்டம், பொந்தியான்

கே: ம. இ. கா.வில் நேர்மையான அரசியல்வாதி யாராவது இருக்கிறார்களா?

எத்தனையோ நேர்மையாளர்கள் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் ம. இ. கா. மண்ணுக்குள் புதைந்து போயிருக்கும்.

எஸ். விஜய். விஜிடாஸ், புக்கிட் சிடிம் தோட்டம்

கே: உழைக்கும் கரங்கள் கட்டப்பட்டும், பேசும் மனங்கள் பூட்டப்பட்டும் இருந்தால் சமுதாயத்தின் கதி...?

ப:...அதோகதிதான்.

சுகுமாரன், கோலாலம்பூர்

கே: அண்ணா, இங்கே தமிழ் மொழிக்காகப் பாடுபடும் தாங்கள், சிதைந்துவரும் தமிழர் ஒற்றுமைக்காகப் புதிய சமுதாயத்தின்வழி தங்களால் இயன்ற அளவு தொண்டுகள் செய்யவேண்டுகிறோம். புதிய சமுதாயத்தை அமைக்கத் தமிழர்களின் ஒற்றுமை முதலில் மிகவும் அவசியம் என்பதை நாங்கள் உண்மையாக உணர்கின்றோம். செய்வீர்களா அண்ணா?

ப: தமிழ்ச் சமுதாயத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காக்கப் "புதிய சமுதாயம்" தன்னால் இயன்ற அளவு பாடுபடும்.

அசம்மா சூரியநாராயணன், பத்தாங்காலி தோட்டம்

கே: ஏழ்மையில் வாழ்ந்த ஒருவன் வசதிவந்ததும் ஏழ்மையில் வாழ்ந்த வாழ்க்கையை மறந்துவிடுகிறான் ஏன்?

ப: கிடைக்கும் புதிய வசதிகள் கண்ணையும், கருத்தையும் மறைப்பதால்தான்!

வேலு இராமரெட்டி, சபாய் தோட்டம், காராக்

கே: அண்ணா, திருமணமான ஒருவர் தன்மீது அன்பு செலுத்தும் இன்னொரு பெண்ணிடம் காதல் கொண்டுள்ளார். அது தவறு என்று நான் கூறினேன். ஆனால் அவரோ, வாழ்வதோ குறைவான காலம், அதற்குள் நான் சந்தோஷமாக இருக்க விரும்புகிறேன் என்று கூறுகிறார். இதைக் குறித்துத் தாங்கள் கூறும் கருத்தென்ன?

ப: சந்தோஷமாக இருக்க அவர் நாடுகிற இந்த வழி, நாளும் சஞ்சலத்தையே அவருக்குத் தரும்!

தங்கராஜு ., கோலாலம்பூர்

கே: அண்ணா, நான் மூன்றாம் படிவம்வரை படித்து இருக்கிறேன். ரேடியோ மலேசியாவில் வேலைசெய்ய நான் விரும்புகிறேன். எனக்கு அதில் வேலை ஏதாவது கிடைக்குமா?

ப: ரேடியோவில் வேலை கிடைப்பது அத்துணை எளிதல்ல; அரசாங்கம் வெளியிடும் வேலை விளம்பரங்களைப் படித்து உங்களுக்குத் தகுதியான வேலைக்கு மனுச்செய்யுங்கள்.

எம். சேது, குவாந்தான்

கே: சினிமா வினா-விடைப் பகுதியை நிறுத்தி விட்டீர்களா?

ப: தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறதே!

டி. ராஜா, ரீம், ஜாசின்

கே: அண்ணா! திரைப்படம் பார்ப்பதால்தான் தங்கள் பிள்ளைகளின் படிப்புப் பாழாகிறது என்கிறார்கள் சில பெற்றோர்கள். இது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: அவர்கள் சொல்வது உண்மையே. மாணவர்கள் படமேடைகளிலேயே சுற்றிக் கொண்டிருந்தால் படிப்புக்கு நேரம் ஏது?

எஸ். எம். பரமசிவம்சின்னு, செங்காங் தோட்டம், போர்ட்டிக்சன்

கே: புதிய சமுதாயத்தில் அதிகமாக சாக்கடை(அரசியல்) வாடை வீசுகிறதே?

ப: சாக்கடை இல்லாமல் சுகாதாரமாக நாம் வாழ முடியுமா?

எம். ஜி. ராஜு., கோல தெர்லா, கேமரன் மலை

கே: ஏன் அண்ணா, நம்மிடமிருந்து விஷயத்தை வாங்கிக் கொண்டு அவர்கள் பேசும் போழுது மிகவும் குறைவாகப் பேசுகிறார்கள். இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?


ப: அளந்து பேசும் கெட்டிக்காரர்கள்.

கே: நகைச்சுவை, வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவம் இதுபோன்ற கட்டுரைகளை எழுதினால் இடம் பெறுமா? புகைப்படம் ஏதும் அனுப்பவேண்டுமா?

ப: நகைச்சுவையோ, உண்மைச் சம்பவங்களோ சுவையான துணுக்குகளுக்கு இடமுண்டு. புகைப் படமும் இருந்தால் சிறப்பு.

கோபால் நாயுடு, விக்டோரியா தோட்டம்

கே: எனது தோட்ட அதிகாரிகள் வீட்டைச்சுற்றிலும் பூச்செடிகளைத்தவிர காய்கறிச்செடிகளை நடக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதற்குமுன் நட்டுப் பூவும் பிஞ்சுமாக உள்ள செடிகளைக்கூடப் பிடுங்கச் சொல்லி விட்டார்கள். இது குறித்து யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்?



ப: அரசாங்கத்தின் பச்சைப் புத்தகத் திட்டத்தை உங்கள் தோட்ட அதிகாரிகள் அறியவில்லை போலும். தொழிற்சங்க அதிகாரிகள் மூலம் முயன்று காய்கறிகளை மறுபடியும் பயிர் செய்யுங்கள்.

ஆ. முத்து, பெர்ணம் தோட்டம், ஊத்தான் மெலிந்தாங்

கே: குழந்தை, கன்னிப்பெண், தாய்மார் இம்முப்பிரிவினரும் விடும் கண்ணீருக்கு யாது பொருள்?
ப: குழந்தையின் கண்ணீருக்கு, பசி, பிடிவாதம், நோவு முதலிய பொருள்களுண்டு. கன்னிப் பெண்களுக்குத் துயரம், ஏக்கம், ஏமாற்றம், ஆனந்தம் இவை கண்ணீரைச் சுரக்கச்செய்யும். தாய்மாருக்குக் குழந்தைகளுக்கு நேரும் சிறுசிறு சங்கடங்கள்கூடக் கண்ணீரை வரவழைத்துவிடும்.

கே: வலுவான கேள்விகளுக்குத் தரமான பதில்களை அளிக்கமுடியாவிட்டால் என்ன செய்வீர்கள்?
ப: மௌனம் சாதிப்பேன்.

இரா. இராமராவ், தலைங்கர்

கே: இன்றைய இளைஞர்களுக்கு இடையூறாக இருப்பது எது?



ப: தூக்கமும் சோம்பலும்!

கே: எந்த முடிவுக்கும் வரஇயலாத நிலை ஏற்படும் போது ஒருவன் என்ன செய்யலாம்?
ப: பெரியவர்களிடம் ஆலோசனை கேட்கலாம்.

எஸ். இளம்தோதேவர், டமன்சாரா, கோலாலம்பூர்

கே: அண்ணா, எங்கள் பகுதியில் வீற்றிருக்கும் மாரியம்மன் ஆலயத்தில் சமய (தேவார) வகுப்பு ஏற்படுத்த விரும்புகிறோம். அதற்கு யாருடன் தொடர்பு கொள்ளவேண்டும்?
ப: திருமுறைத் தொண்டர் திரு. சண்முகத்துடன் தொடர்புகொள்ளுங்கள். 6, தாமான் சிபூத்தே அன்னும், இள்ளான் ரோடு, கோலாலம்பூர்.

எ. இஸ்மத்பாட்சா, எங்கோர்

கே: நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அந்தப் பெண்ணும் என்னை விரும்பியது போல் பழகினாள். ஆனால் அந்தப்பெண் நானமற்ற பெண்களிடம் பழகுவதையும் பேசுவதையும் தவறாக நினைத்துக் கொண்டு என்னைக் கண்டால் பேசவில்லை. அந்தப் பெண்ணை என்னிடம் பேச வைப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
ப: நீங்கள் மற்ற பெண்களிடம் பேசக்கூடாது.

வேலு ராஜகோபால், சுங்கை ரம்பாய் தோட்டம்

கே: பெண்களை அலங்கரிப்பதற்காகக் கடவுள் தினந்தோறும் புத்தம்புது மலர்க் கூட்டத்தைச் சொரியவிட்டிருக்கும் போது அவர்களுக்குப் பொன்னும் மணியும் முத்தும் வைரமும் எதற்கு? ஏன் அவர்கள் செயற்கை யழகுச் சாதனங்களைத் தேடி அலைகிறார்கள்.
ப: முத்தும் வைரமும் எதற்கு? எனக்கும்தான் புரியவில்லை. பெண்களே பதில் சொல்ல வேண்டும்.

ஐ. சிவபாக்கியம், பத்தாங்காலி

கே: அண்ணா! சிலர் கவலையை மறப்பதற்காகவே குடிக்கிறோம் என்று சொல்கிறார்கள் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். குடித்தால் கவலை பெருகும், குறையாது.

வே. பாலகிருஷ்ணன், லஞ்சாங் தோட்டம், லஞ்சாங்

கே: நான் 4ஆம் தேதி 8ஆவது மாதம் பிறந்தேன் எனக்கு ராசி பலனில் என்ன ராசி?
ப: சிம்மம்.

எம். ராஜேஸ்வரி சாமிக்கண்ணு,
டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: ஒரு நடிகர் பெரிய அரசியல்வாதியை வீழ்த்தி இருப்பது பற்றித் தங்கள் கருத்து யாது?
ப: ஜனநாயக சக்கரத்தின் சுழற்சி விசித்திரமானது!

கே: கல்வியில் தோட்டத்துக் குழந்தைகள் பின் தங்குவதேன்?
ப: சூழ்நிலையும் பெற்றோர்களின் அக்கறைக் குறைவுமே காரணங்கள். பெற்றோர்களின் முறையான அக்கறைஇருக்குமானால் எல்லாத் தடங்கல்களையும் கடந்துவிட முடியும்.

எம். சத்திவேல், சுவா பெத்தோங்தோட்டம், போர்ட்டிக்சன்

கே: புதிய சமுதாயத்தை வர்ணத்தில் வெளியிடுவீர்களா?
ப: சென்ற இதழிலும் இந்த இதழிலும் சில பக்கங்களை வர்ணத்தில் வெளியிட்டு உங்கள் ஆவலை நிறைவேற்றியுள்ளோமே!

எஸ். வள்ளிமணாளன், தோங்கின் தோட்டம், மாசாய்

கே: இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலில் திருமதி பண்டார நாயகா வெற்றி பெறும் வாய்ப்பு உண்டா?
ப: ஆருடம் சொல்வது கடினம்.

கே: உலகத்தில் உயர்ந்த பதவி வகித்த தமிழர் யார்?
ப: ஐ. நா. சபையில் துணைப் பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கும் திரு. நரசிம்மன் அவர்களை உலகத்திலேயே உயர் பதவி வகிக்கும் தமிழர் என்று சொல்லவேண்டும்.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம்,
பாகான் செராய்

கே: நான் அதிக நேரத்தைப் படிப்பதிலும் எழுதுவதிலும் கழிக்கின்றேன். இதனால் என்னுடைய எதிர்கால வாழ்வு பாதிக்கப்படுமா?
ப: கவலைப்படாதீர்கள்! உங்கள் எதிர்காலம் சிறக்கும்.

ஆர். பாலசுப்ரமணியம், லாபுவான் பாடாங் தோட்டம்,
பத்து தீகா

கே: வசந்தகாலம் ஒருவனின் வாழ்க்கையில் எத்தனை முறை வரும்?
ப: வசந்தகாலம் ஒரு சில அதிர்ஷ்டசாலிகளுக்குப் பலமுறை கூட வரலாம்.


எம். ஜி. இராஜு, கோல தெர்லா, கேமரன் மலை

கே: அண்ணா, இறந்தவன் மீண்டும் எழுவானா?
ப: மறுபிறப்பு என்பது அதுதானே!

பி. மிதுனநாதன், சிங்கப்பூர்


கே: "புதிய சமுதாயம்" இதழை ஆரம்பித்தபோது எப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்பட்டன?
ப: அது ஓர் இராமகாதை. சமயம் வரும்போது விரிவாக எழுதுவேன்.

கே: ஆணுக்கு மட்டும் தலையில் வழுக்கை விழுகிறது பெண்களுக்கு விழுவதில்லையே, ஏன்?



ப: விசாரித்துப் பாருங்கள்; பெண்களிலும் வழுக்கைத் தலைகள் உண்டு.


(மிருதங்கம் கஞ்சிராவைப் பார்த்து)
"தம்பி! என்னமோ உன்னிடம் நாலு காசு இருக்குதுன்னு இப்படித் துள்ளாதே!"
தூக்க மாத்திரை பிஸ்னஸ் எப்படி?
"தூங்குது!"
"பிளாஸ்டர் கட்டைப்பிரிக்கப் புது வழி கண்டுபிடிச்சுட்டேன்!
"குழந்தைக்கு என்ன பில்கட் கொடுத்தீங்க? குரலே மாறிட்டதே!"



சட்டத்திற்கு...

“என்ன வந்தாலும் சரி! இன்னைக்கு ரெண்டுல ஒன்னு கண்டுடுறதே சரி” முனுசாமி இந்த உறுதியை மனத்தில் தீர்க்கமாக எழுதிக்கொண்டான். தன்பக்கம் சரியான நியாயம் இருப்பதாக அவன் கருதினான்.

“அட! என்னடா இது கூத்து! ஜப்பான்காரங் காலத்துல எல்லாப் பயலுமா பொறந்த சூருவ காப்பாத்திட்டான்! குண்டு உழும்போது உசிரு பெரிசா சூரு பெரிசான்னு ஓடிப் போய் குழிக்குள்ள பதுங்கினவங்க இந்தியாக்காரன் மட்டுந்தானா? குண்டு என்ன இந்தியாக்காரனுக்காக மட்டும்னு வெள்ளைக்காரன் போட்டான். எல்லார் தலையிலேயும் தானே போட்டான்!”

முனுசாமிக்கு அளவுக்கதிகமாகவே ஆத்திரம் பிறந்தது. நீதி நியாயம் அவனை வேண்டுமென்றே புறக்கணிப்பதுபோல் அவன் நெஞ்சக்குழியில் உணர்ச்சி குமிழ்த்து நின்றது.

பத்து ஆராங் சாமியப்பன் கப்பளா “கொங்சி”யில் அவன் குடும்பம் தங்கியிருந்தது. அப்போதுதான் வெள்ளைக்காரன் குண்டுமழை பொழிந்தான்.

உயிர்தப்பிக்க காடு மேடெல்லாம் ஓடிவிட்டுக் குண்டுபோடுவது நிறுத்தப்பட்டதும் “கொங்சி”க்குத் திரும்பினான் முனுசாமி.

அணைந்துபோன அடுப்பிலிருந்து மூன்றுஞ்சாமத்துப் பனிபோல அந்தக் “கொங்சி” இருந்த இடத்திலிருந்து புகைமட்டும்தான் கிளம்பிக்கொண்டிருந்தது. “கொங்சி” இருந்த இடம் இப்போது ஒரு பாதாளமாகிவிட்டிருந்தது. குண்டு போட்ட வெள்ளைக்காரன் அந்தக் கொங்சியை ஒதுக்கிவிட்டாவது போட்டிருக்கக்கூடாதா? சரியாக அதன் தலையிலேயே குண்டைப் போட்டுவிட்டான்.



சா.ஆ.அன்பானந்தன்

அந்தச் சாமியப்பன் கப்பளா கொங்சிக்குப் பக்கத்தில்தான் ஜப்பான்கார ராணுவ அதிகாரிகள் முகாம் இருந்தது. அதை எப்படியோ அறிந்துகொண்ட பிரிட்டிஷ் படை அந்த முகாமில்தான் குண்டைப் போட்டுவிட்டது. அந்தக் குண்டு என்ன குண்டோ தெரியவில்லை இந்தக் கொங்சியையும் ஒரே அடியாக பூமிக்குள் அமுக்கிவிட்டது.

திரும்பிவந்து பார்த்த முனுசாமிக்குத் திகில்தான் பதிலாகக் கிடைத்தது. எல்லாவற்றையும் குண்டுக்குப் பலியாக்கிவிட்டான். அவன்மட்டுமா? கொங்சியிலிருந்த ஈ பாங், அபு அசான் கூடத்தான் முனுசாமியைப்போல எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டனர்.

உயிர்மட்டும் மீந்ததுக்கு கடவுளுக்கு நன்றிசொல்லிக்கொண்டதோடு அவர்களின் அப்போதைய நிலை முடிவடைந்தது.

அப்போதே குடியுரிமை எடுக்க வேண்டும், எடுக்கும்போது பிறந்த சூரு தேவைப்படும், அப்படியில்லாவிட்டால் பள்ளிப்பரீட்சை எழுதியிராவிட்டாலும் மலாய்ப் பரீட்சையைக் கட்டாயம் எழுதித்தான் ஆக வேண்டும் என்று தெரிந்திருந்தாலாவது உயிரைவிட்டாவது பிறந்த சூருவை முனுசாமி காப்பாற்றிக் கொண்டிருந்திருப்பான்.

ரவாங்கிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள உலு கலுடோனியன் தோட்டத்தில் இருக்கும்போது கோலக்குபு மருத்துவமனையில்தான் முனுசாமி பிறந்தான். அவன் பிறந்தது உண்மை என்பதால் . பிறந்தசூருவும் கிடைக்கத்தான்செய்தது.

அதையும் அவன் பெற்றோர் காப்பாற்றித்தான் வைத்திருந்தார்கள். ஆனால்...... கல்டோனியா தோட்டத்திலிருக்கும்போதே அவனின் அப்பா மாரிசாமியைச் சயாமுக்கு ஜப்பான்காரன் லாரிவைத்துக் கூட்டிக்கொண்டுபோனவன் திருப்பி அனுப்பவே இல்லை. அப்படியே மேலோகத்துக்கு அனுப்பிவைத்து விட்டான் போலிருக்கிறது. போனவர்தான் இன்றுவரை திரும்பவில்லை. பிறந்த சூருவுக்குத் திடீரென்று இப்படி ஒரு “சிறப்பு” வரும் என்று அவன் அம்மாவுக்கும் அன்று தெரிந்திருக்கவில்லை. அவளும் மண்டையைப் போட்டுவிட்டாள். பிரஜாவுரிமை கொடுக்கப்படவில்லை என்பதற்காக முனுசாமிக்கு இந்த மண்ணின்மீது பற்றுச் சிறிதேனும் குறையவில்லை. பிறந்த மண்ணல்லவா? எப்படிப் பற்றுக் குறையும். இந்தப் பற்று ஒன்றுக்காகவே அவன் பிரஜாவுரிமை பெறப் பூரண தகுதியுடையவன்தான். என்றாலும்......

அந்தக் காலத்திலேயே “அனா ஆவன்னா” கொஞ்சம் படித்தான். அப்புறம் ஜப்பான்காரக் காலத்தில் “இச்சி, நோ ச்சி” என்று ஏதோ ஜப்பானில் கொஞ்சம் படித்தான். பிறகு வெள்ளைக்காரன் வந்தபோது

மு.வ. மொழிகள்

அன்பு என்பது அதையே கொடுத்துப் பெறவேண்டிய பொருள். காசு கொடுத்துப் பண்டம் வாங்குவதுபோல் எதைக் கொடுத்தும் அன்பைப் பெற முடியாது. அன்பைக் கொடுத்தால்தான் அன்பைப் பெற முடியும்.

குறையில்லாதவர்கள் உலகத்தில் இல்லை. குறைகளுக்கிடையே குணத்தைக் கண்டு வாழவேண்டும். முள்ளுக்கிடையே, முரட்டு இலைகளுக்கிடையே மெல்லிய மலரைக் கண்டு தேனைத் தேடுகிறது தேனீ! அதுதான் வாழத் தெரிந்தவர்களின் வழி!

—இராசதுரை பூபாலன்,
தைப்பிங்

இங்கிலீஷ் படிக்க விரும்பினான். ஆனால் அந்த நேரத்தில் அனாதையான அவன், வயிற்றுக்குப் பாடுபட வேண்டியிருந்ததால் அதுவும் முடியவில்லை. அப்புறம் மலாய் வந்தது. அதைப்படிக்க மட்டும் அவனுக்கு வாய்ப்பு ஏது? ஆகக் கடைசியாக சுத்தமான படியாத பாமரனாக ஆகிவிட்ட முனுசாமிக்கு மலாய்ப் பரீட்சை எழுதிப் பாஸ்பண்ணினால்தான் "பிரஜா உரிமை" என்று வந்தபோது அவனால் எதுவுமே பண்ணமுடியவில்லை. தெரிந்திருந்த கொஞ்ச நஞ்ச பகாசா மலாயும் அவனுக்குக் கைகொடுக்க மறுத்துவிட்டது.

இங்கேயே பிறந்து, இங்கேயே வளர்ந்தவனுக்கு பிறந்த குரு இல்லாத ஒரே காரணத்தால் பிரஜா உரிமை கிடைக்கவில்லை. பிறந்த தேதியும் கூட அப்பா அம்மாவோடு போய்விட்டதால் அவன் பிறந்த நாள் அவனுக்கே தெரியவில்லை. யார்யாரையோ சென்று பார்த்துவிட்டான். யார்யாருக்கோ "பிளாஞ்சா" பண்ணியும் பார்த்துவிட்டான். "பிரஜாஉரிமை" எடுக்க வாய்ப்பு இருந்தபோதெல்லாம் கோட்டைவிட்டுவிட்டு இப்போது அலைகிறான். என்ன செய்வது?

கடைசியாகத் தலைவர் கந்தசாமியைத் தேடி ஓடினான்.

"என்னப்பா என்ன சேதி?" எகத்தாளமாக அவர் குரல் எழுந்தது.

"வந்துங்க..." அவர் கேள்வியே அவனுக்குப் பேசும் தைரியத்தைக் கொடுக்க மறுத்துநின்றது. தலைவர்கள் என்றால் "கனிவு" தேவையில்லை என்று படித்தவர் போலிருக்கிறது தலைவர் கந்தசாமி.

"நான் இங்கதாங்க நம்ப "கல்தோனியா தோட்டத்துல" பொறந்தேன். அப்பா பேரு மாரிசாமி. அம்மா பேரு கன்னியம்மாங்க! நான் பொறந்தப்பதான் நம்ப வேலுமயில் மக லீலாயியும் பொறந்துச்சாம். அவங்களும் ஊருக்குப் போய்ட்டாங்க! நான் தேடிப்பார்த்தும் பொறந்த நாள் தெரியலிங்க. குருவும் கிடைக்கலிங்க! ஜப்பான்காரன் காலத்துலியே காணாமப் போச்சுங்க! அதனால..."

"என்னப்பா முட்டாத்தனமா பேசறே! உனக்கே நீ பொறந்த நாளு தெரியலே! எப்படிப்பா பிரஜா உரிமை கிடைக்கும். நீ மலாய்ப் படிச்சுக்க.. அவங்க மலாய் பரீட்சை வைக்கும்போது சரியா எழுதுனா அப்புறம் பார்க்கலாம்." இடைமறித்துத் தலைவர் கந்தசாமி அவர் சேவை மனத்தைத் திறந்து காட்டினார்.

"நம்ப தமிழே எனக்கு எழுதப் படிக்கத் தெரியலிங்களே! இதுல... நான்..." முனுசாமி தன் இயலாமையைச் சொல்வதைக் கேட்டதும் ஆத்திரமுற்ற தலைவர் கந்தசாமி, "ஏப்பா சுத்த தெண்டங்களா இருக்கிறீங்க! தமிழு தெரியுதோ தெரியலியோ அதுவா இப்ப தேவை? மலாய்ப்படிக்கக்கிட்டு வந்து பேசுப்பா, போ! போ! உங்களமாதிரி முட்டாளுங்களோட பெரிய தொல்லையா போச்சு!" என்று துரத்தியடித்துவிட்டார்.

சோர்வோடு வந்தவன் எதிர்பாராமல் இன்னொருவரைச் சந்தித்துவிட்டான். அவர் வேறு யாருமல்ல...அவரும் ஒரு முக்கியமான தலைவர்தான். அவர்தான் காரியதரிசி வீராசாமி.

"இந்தாப்பா முனுசாமி! நான் ஆகவேண்டியதெல்லாம் கவனிக்கிறேன். ஆனா கொஞ்சம் செலவாகும்...என்ன சொல்றே!" என்றார் காரியதரிசி வீராசாமி. "அதுக்கென்னங்க...இருக்கிறது ஒரு ரெண்டாயிரம் தேருமுங்க! அப்படியே வேண்டுமானாலும் தந்திடறேன்! என்னால இப்படி அன்னன்னைக்கும் உழைச்சு வீணாப்போற கொன்ட்ரேட்டுக் கூலியா இருக்கமுடியாதுங்க! இந்தச் சிவப்புக்கார்டுகூட சமயங்கள்ள கிடைக்கிறது சிரமமா இருக்குங்க! நம்ம முத்துசாமிதான் கொஞ்சம் லஞ்சத்த வாங்கிட்டு யார்கிட்டேயோ பேசி வாங்கிவந்து உதவி செய்யிராரு. அவரும் இனி முடியாதுன்னு சொல்லிட்டாருங்க"

"சரி! சரி! இருக்கிறதுல "ஒன்ன" முதல்ல கொடு! எல்லாம் முடிஞ்ச பிறகு மத்தத வாங்கிக்கிறேன்!" காரியதரிசி வீராசாமிதான் இப்போதைக்கு முனுசாமிக்குப் பால்வார்த்த பெரிய மனிதனாகத் தெரிந்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் ஒரே ஓட்டமாக ஓடினான்.

அவன் ஓட்டத்தில் நம்பிக்கை தெரிந்தது.

ஆயிரம் வாங்கிய காரியதரிசி வீராசாமியைப் பிறகு அந்தப் பக்கமே காணவில்லை. முனுசாமிக்கு ஒன்றுமே புரியவில்லை.

அண்மையில் ஒரு கிராமத்தார்களில் பெரும்பாலானவர் "அடையாளக் கார்டு" இல்லாமலிருந்ததை அறிந்த அரசாங்கம் அவர்களுக்கு "அடையாளக் கார்டு" வழங்க ஏற்பாடு செய்ய முன்வந்த செய்தியையும் அவன் கேள்விப்பட்டிருக்கிறான். தானும் இந்த மண்ணில் பிறந்தவனாதலால் தனக்கு மட்டும் ஏன் இதுமாதிரி உதவி கிடைக்கவில்லை என்று அவன் வியப்படைந்தான். காரணங்களை விளங்கிக்கொள்ள அவன் முற்பட்டான். அதற்கான விளக்கத்தைக்கூற நமது தலைவர்களால் கூட முடியாத போது...

பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். என்ன வந்தாலும் சரி! ஒரு கை பார்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு "பிரஜா உரிமை" அலுவலகத்துக்குப் புறப்பட்டான் முனுசாமி...

அதிகாரி வேலையில் மும்முரமாக இருந்தார். மேசைமேல் கட்டுக் கட்டாகப் பாரங்களும் கடிதங்களும் குவிந்து கிடந்தன. அடிக்கோல் போன்றதொரு "கனச் சட்டம்" அவை பறந்துவிடாமலிருக்க அவற்றின் மீது வைக்கப்பட்டிருந்தது.

அதிகாரிக்கு ஒரு "தபே" போட்டுவிட்டு அவர் முன்னால் போய் நின்றான். அவனிடமிருந்த அனைத்து உரிமைச் சுருக்களையும் ஆவேசமாக மேசைமீது விரித்து வைத்தான் முனுசாமி.

மேசைமீது இருந்த கனச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு "அப்பா இத்து செமுவா" என்று கேட்டார் அதிகாரி.

"இத்துல்லாம் என் பிரசா உரிமை கேட்டு எழுதின சுருங்க. நான் எத்தனை வருசமா பாடுபடறேன். பெரசா உரிமை கிடைக்க மாட்டேங்குது. ஏங்க, நான்தான் கேக்குறேன். நானும் இங்கதானே பொறந்தேன்! எனக்கு மட்டும் ஏங்க பெரசா உரிமை? ஒன்னு கொடுக்கிறதா இருந்தா கொடுங்க! இல்லேன்னு சொல்லிடுங்க! இந்த மாதிரி ரெண்டுங்கெட்டானா அலைய விடாதிங்க! பரவாயில்ல, நான் ஏதாவது ஆய்ட்டுப் போய்டறேன். இது ஆண்டவனுக்கே அடுக்காது!" "எக்ஸ்பிரஸ் ராயாட்" மாதிரி கிடுகிடுவென்று பேசி நிறுத்தினான் முனுசாமி. அவன் கண்கள் சிவப்புச் சாயத்தில் நீர்த்துளி பட்டதுபோல் கலந்து கலங்கித்தோன்றின.

ஓடிவந்தவனைப்போல் "மூஸ்! மூஸ்!" என்று மூச்சு வாங்கியது அவனுக்கு.

அதிகாரி கனச்சட்டத்தைக் கையில் தட்டிக்கொண்டே முனுசாமியை அனுதாபத்தோடு பார்த்தார். அவன் நியாயத்தை அவரால் உணரமுடிந்தது. அந்த அதிகாரி மலாய்க்காரராக இருந்தாலும் பல ஆண்டுகள் அங்கே வேலைபார்த்த அனுபவத்தில் தமிழும் கொஞ்சம் புரிந்திருந்ததால் முனுசாமியின் கோரிக்கை அவருக்கு விளங்கியது. ஆனால் அந்தச் சட்டத்துக்கு?... ●

மலேசிய மொழித் தேர்வில் வெற்றி பெற (6)

கொஞ்சம்...

வெ. ஆறுமுகம்

மலேசியமொழி இலக்கணத்தில் சிறப்பிடம் பெறுவது Imbuhan. பெயர்ச்சொற்களோ, வினைச்சொற்களோ பெரும்பாலான சொற்கள் இதன் ஆட்சிக்கு உட்பட்டே இயங்குகின்றன. இந்த அடிப்படை இலக்கணத்தைப் புரிந்துகொண்டால்தான் மலேசியமொழியில் பிழையின்றி எழுத முடியும்.

அடிச்சொல்லோடு (Katadasar) இணைந்து வழங்குவது Imbuhan. இது மூன்று வகைப்படும். அடிச்சொல்லின் முதலில் இணைவது awalan (me, ber, di, ter, per, pe, ke, se). அடிச்சொல்லின் ஈற்றில் இணைவது akhiran (an, kan, i, kah, tah, lah, pun dll). அடிச்சொல்லின் நடுவில் இணைவது sisipan (el, em, er, emel, emer).

இவற்றை முழுமையாக விளக்குவதென்றால், மலேசியமொழி இலக்கணத்தின் ஒரு பெரும் பகுதியையே விளக்கவேண்டி வரும். அதற்கு வேண்டிய கால அவகாசம் நமக்கில்லை. ஐந்தாம் படிவ மாணவ, மாணவியரான உங்களுக்கு அடிப்படை இலக்கணத்தில் பயிற்சி இருக்கும் என்னும் எண்ணத்தில், ஒவ்வொன்றையும் நீள விளக்குவதை விடுத்து முக்கியமான குறிப்புகளை மட்டும் தர முனைந்துள்ளேன்.

"பூனை எலியை விரட்டியது" எனும் வாக்கியத்தில் "விரட்டியது" என்பது வினைச்சொல். "பூனை எதை விரட்டியது?" என்னும் கேள்விக்கு "எலியை விரட்டியது" என்று பதில் கிடைக்கும். இங்கு "எலி" செயப்படு பொருள். "விரட்டியது" என்னும் வினைச்சொல்லுக்கு ஒரு செயப்படுபொருள் இருப்பதனால் இதுசெயப்படுபொருள் குன்றாவினை ஆகிறது.

இதே எடுத்துக்காட்டை மலேசியமொழியில் பார்ப்போம். Kucing mengejar tikus என்னும் வாக்கியத்தில் mengejar என்பது katakerja (வினைச்சொல்). Kucing mengejar apa? என்னும் கேள்விக்கு mengejar tikus என்பது பதில். Tikus என்பது இங்கு penyambut (செயப்படு பொருள்). Mengejar என்னும் katakerja-வுக்கு ஒரு penyambut இருப்பதனால் இது Katakerja Transitif ஆகிறது.

Katakerja Transitif, Katakera berpelengkap, Katakerja melampau, Perbuatan melampau எனப் பலவாறு சொல்லலாம் என்றாலும் அவையெல்லாம் செயப்படுபொருள் குன்றாவினையையே குறிக்கும். இச்சொற்றொடர்களை நீங்கள் நினைவு வைத்துக்கொள்ளாவிட்டாலும் அவற்றின் பொருளை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

Velan membaca buku, Ibu membeli ikan, Ayah memangil adik என்னும் வாக்கியங்களைத் தொடர்ந்து membaca apa, membeli apa, memanggil siapa என்று கேட்டால் membaca buku, membeli ikan, memanggil adik என்று விடை கிடைக்கும். எனவேஇந்த வாக்கியங்களில் membaca, membeli, memanggil என்பவை katakerja transitif ஆகும். "எதை, யாரை" என்று கேட்டு, அவற்றுக்கு விடை கிடைக்குமானால் தமிழில் செயப்படுபொருள் குன்றாவினையை நிச்சயிக்கலாம். இது போன்றே "apa, siapa" என்று கேட்டு, விடை கிடைக்குமானால் மலேசியமொழியில் katakerja transitif-ஐ உறுதிப்படுத்தலாம். செயப்படுபொருள் உள்ள வினைச்சொல், செயப்படு பொருள் குன்றாவினையாகும். Penyambut உள்ள katakerja அது போன்றே katakerja transitif ஆகும்.

"அவன் ஓடினான்" என்பதில், "ஓடினான்" என்பது வினைச்சொல். "எதை ஓடினான், யாரை ஓடினான்" என்று கேட்டுப்பாருங்கள்; விடை கிடைக்காது. "ஓடினான்" என்னும் வினைச்சொல்லுக்குச் செயப்படு பொருள் இல்லை. செயப்படுபொருள் இல்லாததனால் இதைச் செயப்படுபொருள் குன்றியவினை என்கிறோம்.

Dia berlari என்னும் வாக்கியத்தில் berlari என்பது katakerja. முன்பு கேட்டதுபோல் berlari apa, berlari siapa என்று கேட்டுப்பாருங்கள்; திண்ணமாக விடை கிடைக்காது. Berlari என்னும் katakerja-வுக்கு penyambut இல்லை. Penyambut இல்லாததனால் இது Katakerja Intransitif ஆகிறது.

தமிழில் செயப்படுபொருள் குன்றாவினையையும் செயப்படுபொருள் குன்றியவினையையும் புரிந்துகொள்வீர்களானால் Katakerja Transitif, Katakerja Intransitif இரண்டும் உங்களுக்கு நன்கு விளங்கிவிடும். மேலே உள்ள விளக்கத்தை ஊன்றிப் படித்தும் இவ்வகை வினைச்சொற்களை உங்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லையென்றால் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எவ்வழியிலேனும் இவற்றை நீங்கள் விளங்கிக்கொண்டாகவேண்டும்; விளங்கிக்கொண்டால்தான் குறிப்பிட்ட சில Imbuhan விதிகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறையும் புரியும்.

மிகுதியாகப் பயன்படுத்தப்படும் Imbuhan-களுள் ஒன்று me எனும் awalan. இது பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றாவினையை (katakerja transitif) ஒட்டிவரும். சில வேளைகளில் செயப்படுபொருள் குன்றிய வினையோடும், பெயர்ச்சொல்லோடும் சேரும். அப்படிச் சேருமாயின் அந்த வினைச்சொற்களும் பெயர்ச்சொற்களும் செயப்படுபொருள் குன்றாவினையின் இயல்பைப் பெற்றுவிடும். எனவே இந்த awalan பெரும்பாலும் katakerja transitif-ஐ ஒட்டியேவரும் என்று கொள்ளலாம். இலக்கண விதிகள்பெரும்பாலானவற்றுக்கு விதிவிலக்குகள் இருப்பதைப்போலவே இதற்கும் சில விதிவிலக்குகள் உள்ளன. அவற்றைப் பின்னர் தெரிந்து கொள்ளலாம்.

1. செயப்படுபொருள் குன்றாவினைக்கு முன்னால் me சேர்க்கவேண்டும் (me + katakerja transitif).

எடுத்துக்காட்டு: menembak (burung), menjual (kereta,) membawa (barang), mencari (kerja)

2. சில வேளைகளில் பெயர்ச்சொல்லோடு meசேரும். (me + katabenda). Me சேர்ந்தவுடன் அப்பெயர்ச்சொற்கள் வினைச்சொற்களின் இயல்பை அடையும்.

எடுத்துக்காட்டு: merotan (பிரம்பால் அடித்தல்), menjala (வலைவீசி மீன்பிடித்தல்), mengapak (கோடரியால் வெட்டுதல்).

3. Me + katasifat.

எடுத்துக்காட்டு: menghijau (பசுமையாக இருத்தல்), menyombong (தற்பெருமை கொள்ளுதல்)

4. Me + katabilangan

எடுத்துக்காட்டு: menduakan (இரண்டாக்குதல்)

5. செயப்படுபொருள் குன்றியவினையோடும் me சேருவதுண்டு (me + katakerja intransitif)

எடுத்துக்காட்டு: menangis, mengantuk.

Ber என்பது இன்னொரு முக்கியமான awalan ஆகும். இதை மிக எளிதாக நீங்கள் விளங்கிக்கொள்ளலாம். Me சற்றுச் சிரமமானதாகையால், ber பயன்படும் முறையை நன்கு புரிந்துகொண்டால் me இயல்பாகவே விளங்கிவிடும்.

1. Ber பொதுவாக செயப்படுபொருள் குன்றிய வினையோடு (katakerja intransitif) இணைந்துவரும். செயப்படுபொருள் குன்றாவினையோடு வருமானால் 'தனக்குத் தானே செய்து கொள்ளுதல்" என்னும் பொருளோடு இயங்கும்.

எடுத்துக்காட்டு: berlari, berbaring (செயப்படு பொருள் குன்றிய வினை). Bercukur (முகம் மழித்தல்) என்னும் சொல்லில் உள்ள cukur என்பதைத் தனித்துப் பார்த்தால் அது செயப்படுபொருள் குன்றுவினை போல் தோன்றும். ஆனாலும் "தன்முகத்தை மழித்துக் கொள்ளல்" என்னும் பொருள் வேண்டுமாயின் bercukur என்றும், "பிறர் முகத்தை மழித்தல்" என்னும் பொருளாயின் mencukur என்றும் இருவகையில் பயன்படுத்தப்படும். இப்படிப் பல சொற்கள், me, ber என்னும் இரு awalan-களையும் ஏற்று இரு வேறு பொருள்பட விளங்குகின்றன.

2. பெயர்ச்சொல்லோடு ber சேர்ந்து அச்சொல்லுக்கு வினைச்சொல்லின் இயல்பைக் கொடுக்கும்.

எடுத்துக்காட்டு: bercerita, berkereta, berkebun

3. பெயர்ச்சொல்லோடு சேர்ந்து, "உண்டு" என்னும் உரிமைப்பொருளைத்தரும்.

எடுத்துக்காட்டு: berakal, berduri, berharta

4. பெயர்ச்சொல்லோடு சேர்ந்து "அணிதல், பயன்படுத்தல்" என்னும் பொருளைத் தரும்.

எடுத்துக்காட்டு: berkasut, berbaju.

5. எண்களோடு சேர்ந்து வருமானால் "ஒன்றித்த" தன்மையைக் காட்டும்.

எடுத்துக்காட்டு. Kami berdua (நாங்கள் இருவரும்), mereka berlima (அவர்கள் ஐவரும்)


Me, ber என்பனவற்றின் விதிகள் இவ்வளவுதாம் என எண்ணுதீர்கள்; நுணுக்கமான உட்பிரிவுகள் இன்னும் பல உள்ளன. எல்லாவற்றையும் விளக்குவது மிகவும் விரிவான வேலை; அப்படியே விளக்கினாலும், ஒருமுறை படிப்பதனால் மட்டும் புரிந்துகொண்டுவிட இயலாது.

நாளிதழ்கள், சஞ்சிகைகள், நூல்கள் போன்றவற்றை மிகுதியாகப் படிப்பதுதான் Imbuhan-களைப் புரிந்துகொள்ள மிகச் சிறந்த வழியாகும். படிக்கும்போது, ஒவ்வோர் Imbuhan-உம் எப்படிப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நுணுகி ஆராய்ந்து நினைவிற்கொள்ள வேண்டும். இவ்வாறு படிக்கும் பயிற்சியை மேற்கொள்வீர்களாயின் மிக எளிதாக அவற்றைப் புரிந்து கொள்ளலாம். அப்படிப் புரிந்துகொள்வதற்கு, இக்கட்டுரையில் சுருக்கித் தரப்பட்டுள்ள விதிகள் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

பயன்படுத்தும் பாங்கினை அறிந்து மொழியைப் பயன்படுத்துங்கள்.

'கலைமகள்' ஆசிரியரின் கடிதம்





பனியில் குளித்து...

அன்னம் சுந்தரம் பி.ஏ.



பனியில் குளித்து — மண
இதழ்கள் விரித்து — மனக்
கனிவை விளக்கும் முகம்!
இனிமை வடித்து — விழுப்
பொருளை உணர்த்தி — அருட்
கருணை பொழியும் விழி!
கனியைப் பிழிந்து — மலைத்
தேனைக் கலந்து — முகக்
கலத்தில் நிறைத்த இதழ்!
பிணியைக் குறைத்து — வரும்
நினைவை மறைத்து — எழும்
துணிவை அடக்கும் மனம்



தாயினும் சிறந்தவன்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

ஊட்டுதற்கான காலத்தினை நினைவினிலே கொண்டு பாலினைத் தன் மகவுக்கு ஊட்டுகின்ற தாயினுங்காட்டில் மிகுதியாக என்பாற் பரிவு கொண்டு நீ, பாவியேனுடைய உடலினை உருக்கி, உள்ளத்தே அறிவொளியினையும் பரப்பி, அழிவற்ற ஆனந்தமாகிய தேனினையும் சொரிந்தனை! அடுத்து, புறம்புறமாகவே திரிந்த அதனையும் செய்த என் செல்வமே! சிவபெருமானே! யான் நின்னைத் தொடர்ந்து வந்து சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனி, நீ எவ்விடத்திற்கு எழுந்தருள்வாயோ?

—திருவாசகம் 37: 9



இன்னுமா ஈயடிச்சான் காப்பி

மூபன் புரொடக்சன்சாரின் "இரத்தப் பேய்" திரைப்படத்தை அதற்குள் நாம் மறந்திருக்க முடியாது. முழுக்க முழுக்க மலேசியக் கலைஞர்களைக் கொண்டு தமிழகத்தில் தயாரிக்கப்பட்டது இரத்தப் பேய். அதில் கதாநாயகனாக நடித்தவர் எஸ். வி. சின்னச்சாமி.

அந்தப் படத்தில் நடிப்பதற்காக தனது இயற் பெயரான சின்னச்சாமி என்பதைக் கலைக்குமார் என்று மாற்றிக் கொண்டார் அவர்.

ஆர்மோனிஸ்ட்டான தன தந்தையுடன் சேர்ந்து "கிருஷ்ண லீலா" நாடகத்தில் பாலகிருஷ்ணனை வேடமேற்றுப் பாடி நடித்துக் கலைதுறையில் 1945-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தார். நல்ல வெற்றி கண்ட இந்த முதல் நாடகத்திலேயே பலரது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றார் சின்னச்சாமி.

அன்றைய நாளில் அசோகா நாடகக் குழுவினர் மிகப் பிரபல்யமாக நாடகங்களை அரங்கேற்றி வந்தனர். அவர்கள் நடத்திய பல நாடகங்களில் எஸ். வி. எஸ். நடித்தாலும், குறிப்பாக சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சேகர் நாடகத்தில் கதாநாயகியாக நடித்து பல இளம் உள்ளங்களை ஏங்க வைத்த நிகழ்ச்சியைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அதன்பின் "எது வாழ்வு", "மலர்-ந்த வாழ்வு" வ. உ. சி.குழுவினரின் "சூழ்ச்சி", "1941"மூபனின் "இரத்தப் பேய்" ஆழியின் "கடாரம்" போன்ற நாடகங்களில் முக்கிய வேடமேற்றுப் பாராட்டும்படி நடித்துள்ளார். அன்றய நாளில் சின்னச்சாமியை மலேசிய ஜெமினி கணேசன் என்று ரசிகர்கள் அன்புடன் அழைப்பது இயல்பாக இருந்தது. அதற்கு உருவ ஒற்றுமையும் ஓரளவு இருந்ததே காரணம்.

நடிப்புத் துறையில் மட்டும் சிறந்தவராக இல்லாமல், இசைத் துறையில் ஆர்மோனியம் வாசித்தல் வாய் பாட்டு போன்றவற்றிலும் அனுபவம் பெற்றவர்.

நாடக, நடிப்புத் துறையைப் பொறுத்தமட்டில் அன்றைய நாட்களைவிட இப்போதுள்ள கலைஞர்கள் மிகவும் மேம்பட்டிருப்பதாகப் பெருமைபட கூறும் இவர், இசைத் துறை சுத்தமாக ஈயடிச்சான் காப்பியாக மாறிவிட்டதைக் குறித்து மிகவும் வருந்துகிறார். "சினிமாவில் பாடுகிற பாடல்களை அவர்கள் குரலைப் போலப் பாவனை பண்ணிப் பாடி தங்களுடைய சுய திறமையை அழித்துக் கொள்கிறார்கள். முன் காலத்தில், நாங்கள் இசையை மட்டும் எடுத்துக் கொண்டு, சொற்களை இந்த நாட்டுக்கு ஏற்றவாறு, நல்ல கருத்துச் செறிவோடு அமைத்துக் கொண்டு சொந்தக் குரலில் பாடுவோம், மக்களும் நன்றாக ரசித்தார்கள்; பாராட்டினார்கள். அந்த நிலைமை இப்போது இல்லாமல் போய் விட்டது. நமது இசைத் துறைக்கு இது ஒரு பெரிய பலவீனம் என்றே கருத வேண்டியிருக்கிறது" என்கிறார்.

இந்த நிலையை முற்றாக மாற்ற முடியாவிட்டாலும், முடிந்த அளவு மாற்றி நல்ல மெல்லிசைச் சங்கீதத்தை வளர வைக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் ஸ்ரீகலைவாணி இசைக் குழுவை தமிழ் இசை ஆர்வலர்கள் கூடி நிறுவியுள்ளார்கள். அதன் தலைவராக திரு. எஸ். வி. எஸ். இருந்து கலைப்பணி சிறக்கப் பங்காற்றி வருகிறார்.

-எஸ். பாரத்

விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால்எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 50 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ.10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சியவெ.40 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
9. இறுதிநாள் 30-7-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku Abdul Rahman,
2nd Floor,
Kuala Lumpur.

1	ரு	2		■	3
■	4		■	5	
6		■	7		
ரீ	■	8			■
■	9	ல		■	10
11			■	■	

தமிழறிவு

போட்டி-4. இறுதிநாள் 30-7-1977

பெயர்: ______________________

அடையாள அட்டை எண்: ______________________

முகவரி: ______________________

____

____

கையொப்பம்

தமிழறிவுப் போட்டி 2 முடிவு

1 ஆ	2 சு	■	3 ஆ	ட்	4 சி
5 வ	ற்	6 க	லை	■	த
7 து	ற	வு	■	8 அ	ம்
■	9 த்	தா	ய	ம்	ப
10 ஊ	தா	ரி	■	பு	ர
11 தா	ர்	■	12 ட	வி	ம்

தமிழறிவுப் போட்டி — 4

இடமிருந்து வலம்:

1. என்றுவது ஒருநாள் அனைவரும்செல்லவேண்டிய இடம்.
4. நோய்.
5. தேர்தல் காலங்களில் ம.இ.கா. வில் அதிகம் அடிபட்ட சொல்.
7. இது அதிகமானாலும் செலவை அதிகரிக்காமல் இருப்பதுதான் நல்லது.
8. இதை வாங்கினாலும் தொல்லை; கொடுத்தாலும் தொல்லை.
9. ஆற்றைக் கடக்க உதவுவது.
11. பெண்களுக்குரிய நான்கு குணங்களுள் ஒன்று.

மேலிருந்து கீழ்:

2. பாரதியார் இந்த அளவுக்குத்தான் நிலம் கேட்டார்.
3. இது உள்ளவன் தான் வாழ்வில் உயர முடியும்.
4. காலை உணவு, உதிர்ந்து கிடக்கிறது.
5. சிவன்.
6. ஒரு விலங்கு.
7. கயிறு.
8. இதைக் கட்டுவதிலும் செலுத்துவதிலும் பண்டைய தமிழர்கள் வல்லவர்களாக விளங்கினர்
10. துணி தைக்கப் பயன்படுவது.

தமிழறிவுப் போட்டி -2க்கு வந்திருந்த ஏராளமான கூப்பன்களில் 13கூப்பன்கள் சரியானவிடைகளைக் கொண்டிருந்தன. அவற்றுள் நான்கு கூப்பன்கள் கேமரன் மலையைச் சேர்ந்த திரு. எம். ஜி. ராஜு அனுப்பியவை. இவர் மொத்தம் 10 கூப்பன்களை அனுப்பியிருந்தார். பரிசு பெற்ற 13 கூப்பன்களுக்கும் வெள்ளி 3.85 வீதம் பரிசுத் தொகையான வெள்ளி 50.00 பகிர்ந்தளிக்கப்படும். பரிசுக்குரியவர்கள் வருமாறு:—

1. எம். ஜி. ராஜு, கேமரன் மலை. (4 கூப்பன்கள்)
2. ஆ. சம்பந்தன், சுங்கை திங்கி தோட்டம், சிலாங்கூர்.
3. எம். சுப்பிரமணியம், பிடோங்.
4. புகழேந்தி, காஜாங் தோட்டம், சிலாங்கூர்
5. ஏ. முனியம்மா, லூனாஸ், கெடா.
6. குமாரி எம். இந்திரா, சிரம்பான்.
7. இரா. வேலாயுதம், சுங்கை, பேராக்.
8. என். ரஹ்மான், சிங்கப்பூர்.
9. சுகு ஆறுமுகம், புக்கிட் பிலாண்டோக், நெகிரி செம்பிலான்.
10. ஆர். மகேஸ்வரி, லிங்கி, நெகிரி செம்பிலான்.

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

எஸ். எஸ். வேலன் கோபால்,
கம்போங் ரம்புத்தான், கிள்ளான்

கே: "சிலப்பதிகாரத்தின்" முக்கியத்துவம் யாது?

ப: சிலப்பதிகாரம் பல துறைகளில் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்திற்கு முன் தமிழில் தன்னுணர்ச்சிப் பாடல்களே மிகுதி. ஒரு கதையின் அடிப்படையில் எழுதப்படும் காவியம் என்ற இலக்கிய வகை, சிலப்பதிகாரத்திலிருந்தே தொடங்குகிறது. சிலப்பதிகாரமே தமிழில் எழுந்த முதல் காவியம். இது இலக்கிய வகை பற்றியது. பொருளை எடுத்துக் கொண்டாலும் சிலப்பதிகாரமே பலவற்றில் முன்னோடி. பத்தினித் தெய்வத்தின் புகழ்பாடும் முதல் நூல் சிலப்பதிகாரம்தான். சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்துகிடந்த தமிழகத்தை இளங்கோவே ஒன்றாக எண்ணிப் பார்க்கிறார். பொதுவாகக் காவியங்களில் மன்னர்களும் பெரிய வீரர்களுமே கதைத் தலைவர்களாக வருவர். இதிலோ குடிமகனேகதைத்தலைவன். இவ்வாறு பல சிறப்புக்கள் சிலப்பதிகாரத்திற்கு உண்டு.

ரோண்ணிய் கமால்,
சுங்கை பொங்கோ தோட்டம்,
பீடோங், கெடா

கே: அகிலன் எழுதிய நாவல்களில்உங்களைப்பெரிதும்கவர்ந்த நாவல் எது? அது உங்களைக் கவரக் காரணம்?

ப: அகிலன் எழுதிய நாவல்களில் என்னைப் பெரிதும் கவர்ந்த நாவல் "சித்திரப் பாவை". கலையும் கருத்தும் சங்கமமாகி, நாவலாக உருவெடுப்பதை இந்த நாவலில் முழுமையாகப் பார்க்கலாம். அன்றாடம் கண்டு பழகும் மனிதர்களைப் போல் கச்சிதமாக வார்க்கப்பட்ட பாத்திரப் படைப்பு, நாமே பங்குகொள்வதுபோன்ற சம்பவக் கோர்வை, அழுத்தமான கால, இடப் பின்னணிகள், துணிவான முடிவு ஆகியவற்றை இந்த நாவலில் சிறப்பாகக் காணலாம் என்பதே காரணம்.

வில்லியம் தமிழ்மணி,
சாபாய் தோட்டம், காராக்

கே: கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன் தோன்றியது தமிழ்மொழி என்கிறீர்களே, இது உண்மையா? இதை நிரூபிக்க முடியுமா?

ப: தமிழ் மிகவும் பழமையான மொழி என்ற கருத்திலேயே இவ்வாறு கூறுகிறார்கள். அதற்காக இவ்வளவு கோபமா?

கே: தமிழ் மொழியின் காலம் எந்த அளவுக்குப் பழமையானது?

ப: தமிழில் மிகப் பழமையான நூலாக இன்று கிடைப்பது தொல்காப்பியம். இது இலக்கண நூல். மொழி தோன்றி, இலக்கியம் பிறந்து, வளர்ந்து, ஒரு சிறப்பான நிலையையடைந்த பின்னரே இலக்கணம் தோன்றும். அதுவும் தொல்காப்பியம் போன்ற ஓர் இலக்கண நூல் தோன்றவேண்டுமானால் சில ஆயிரம் ஆண்டு இலக்கிய வர்லாறு வேண்டும். இவ்விலக்கண நூலுக்கு முன்னரே பல இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. தமிழ் எந்த அளவுக்குப் பழமையானது என்று நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

வேலு இராம ரெட்டி,
சபாய் தோட்டம், காராக்

கே: அண்ணா, தமிழ்மொழியில் வடசொற்கள் கலந்திருப்பதன் அவசியமென்ன?

ப: உரிய தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்துவதே முறை. இல்லாதபோது வழக்கத்தில் வந்து விட்ட ஒரு சில வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம். இலக்கியச் சொற்களாக நின்றுவிட்ட சில சொற்களையும் வழக்குச் சொற்களாகக் கொண்டு வர முயற்சி செய்யலாம். வாரியம் முதலிய சொற்கள் இவ்வாறுள்ளவை. இதற்குத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க.நல்ல வழி காட்டியுள்ளார். காலப்போக்கில் சில புதிய சொற்களும் உருவாகலாம். வேட்பாளர், நாடாளுமன்றம், பாராளுமன்றம் முதலிய சொற்கள் இவ்வாறு வந்தவையே!

கே: அண்ணா, எழுத்தாளர் திரு. ஜெயகாந்தான் அவர்கள் தமது கதைகளில் சில கொச்சையான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைப் பற்றித்தாங்கள் கூறும் கருத்தென்ன, அது தமிழ் எழுத்துலகிற்கும்- வாசகர்களுக்கும் எந்த அளவிற்கு உதவுகிறது?

ப: உண்மையைப் போன்ற தோற்றம் தருவதற்காகவே ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்கள் பேச்சுத் தமிழை அப்படியே உரையாடல்களில் பயன்படுத்துகின்றனர். அளவோடு பயன்படுத்தும் வரை இது சுவையாகவே இருக்கும். அளவுக்கு மீறினால் வாசகர்களுக்கு எரிச்சல்தான் ஏற்படும். கதைமாந்தர் பேசும் போது பேச்சுத் தமிழையும் மற்ற இடங்களில் இலக்கியத் தமிழையும் பயன்படுத்துவதைச் சில ஆசிரியர்கள் நல்ல வழக்கமாகப் பின்பற்றி வருகின்றனர்.

செல். கிருஷ்ணன்,
பங்களான் மாங்கீஸ் தோட்டம்,
சிப்பாங்

கே: டாக்டர் மு. வ. அவர்கள் எழுதிய சுமார் எண்பது நூல்களில் "கி. பி. 2000" என்னும் நூலே ஒரு புரட்சியான நூல் என்று நான் நினைக்கிறேன். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்! வேறு ஏதும் நூலை இப்படிக் குறிப்பிட விரும்புகிறீர்களா?

ப: டாக்டர் மு. வ. எழுதிய நூல்களில் பல, புரட்சியான சிந்தனைகளைக் கொண்டவை. தம்பிக்கு, தங்கைக்கு, அரசியல் அலைகள், மொழிப்பற்று, அகல் விளக்கு, நெஞ்சில் ஒரு முள் என்று இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். எனினும், அவர் காண விழையும் சமுதாயத்தை முழுமையாகக் காட்டுவது "கி. பி. 2000" நூலே.

கே: கி. பி. 2000த்தில் டாக்டர் மு. வ. கண்ட கனவுகள் இன்னும் 2000 ஆண்டுகள் போனாலும் நனவாகாது போல் தோன்றுகிறதே?

ப: ஆட்சி பீடத்தில் அமரும் தலைவர்கள் உண்மையாக மனம் வைத்துச் செயல்பட்டால் அக்கனவு நனவாகலாம்.

கே: தங்களைப் போல் டாக்டர் மு. வ. அவர்களிடம் நெருங்கிப் பழகிய டாக்டர் ச. ச. விசுவநாதன். அவர்களுக்கும் தங்களுக்கும் பேச்சுத்தொடர்பு உண்டா?

ப: இருவரும் நண்பர்கள்தாம்.

இராசிதுரை, கம்போங் போயான்,
தைப்பிங்

கே: டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இலக்கியம்பற்றி எந்த நூலில் அதிகம் எழுதியுள்ளார்?

ப: அவருடையஇலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத்திறன், இலக்கிய மரபு ஆகிய நூல்களைப் படித்துப் பாருங்கள்.

கே: தமிழக எழுத்தாளர்களில் அன்றும், இன்றும் சிறந்த எழுத்தாளர்களான டாக்டர் மு. வ., திரு. அகிலன் திரு. கி. வ. ஜகந்நாதன், திரு. ஜெயகாந்தன் இவர்களின் கதை நூல்கள் அதிக விலையில் விற்கப் படுவதால் காரணத்தால் அதிகம் பேர் வாங்கிப்படிக்க முடியாமல் போகிறது. புதிய பதிப்பான அதே நூல்கள் பழையவிலையை விட அதிகமாகவே இருக்கிறது.

ப: நூல்களை அச்சிடும் காகிதத்தின் விலை, அச்சுக் கூலி, மற்றும் புத்தக வெளியீட்டுத் துறை தொடர்பான செலவுகள், கடந்த சில ஆண்டுகளில் கணக்கில்லாமல் ஏறிவிட்டன. முதல் பதிப்பில் ஒரு விலையும். அடுத்த பதிப்பில் வேறு விலையும் நிர்ணயிக்கப்பட இதுவே காரணம். இவ்வளவு செலவுசெய்து, எழுத்தாளர்கள் என்ன பெறுகின்றனர் எனக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும். புத்தகங்களை வாங்கிப் படிப்போர் தொகை பெருகினால் இந்த நிலைமாற வாய்ப்புண்டு.

பால்மரக் காட்டினிலே

அகிலன்

8. குபேரபுரியும் குசேலபுரியும்

பல மாடிக் கட்டிடங்கள் கொண்ட அந்த ஓட்டலின் உச்சியிலிருந்த மேல்பகுதிக்கு அவர்கள் "லிப்"டில் சென்றார்கள். அது சுழலும் மாடி. அதன் ஓரத்தில் அமர்ந்துகொண்டு சாப்பிட்டால், சாப்பிடும்போதே நகரம் முழுவதையும் உட்கார்ந்த இடத்திலிருந்து கொண்டு பார்த்துவிடலாம். மேலைநாட்டு மெல்லிசை அங்கே மாடியைப் போலவே மெல்லச் சுழன்று கொண்டிருந்தது. பலநாடுகளைச் சேர்ந்த பல இனத்து மக்களும் அங்கே குழுமியிருந்தனர். ஓர் ஒதுக்குப்புறத்திலிருந்த நாற்காலிகளைத் தேடி முருகன், ராதா, பாலன் மூவரும் அமர்ந்தார்கள்.

"இன்னிக்கு உங்க தம்பிக்கு என்னோட விருந்து; அதனாலே ஆர்டர் பண்ற வேலையை எங்கிட்டே விட்டுடுங்க" என்றாள் ராதா; "நான் சாப்பிட்டு வந்தாச்சு; இருந்தாலும் கம்பெனிக்காக ஏதாச்சும் சாப்பிடறேன்".

பாலன் அவன் ஆயுளில் அதுவரை கண்டிராத, சுவைத்திராத, உணவுப் பண்டங்கள் ஒவ்வொன்றாக மேசைக்கு வந்தன. அவற்றைச் சாப்பிடுவதற்கு உதவியாகக் கத்திகள், கரண்டிகள், குத்திகள் முதலியனவும் அங்கே தயாராக இருந்தன. பாலன் தன் அண்ணன் முருகனை இந்தச் சாப்பாட்டு விவகாரத்தில் வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, ஒருவழியாக அந்தப் புதுவகை உணவுப் பண்டங்களுடன் போராடலானான். வண்ண வண்ணக் கோப்பைகளில் ஏதோ பானங்களும் வந்து சேர்ந்தன.

தண்ணீரைக் குடிப்பதுபோல் நினைத்துக் கொண்டு கோப்பையைத் தன் வாயருகில் கொண்டு போனான் பாலன். அப்போதுதான் அது தண்ணீரோ கிரஷ்ஷோ அல்ல என்பதும் விஸ்கியாகவோ பிராந்தியாகவோ இருக்கவேண்டும் என்பதும் அவனுக்குப் புலப்பட்டன. மெதுவாக அதை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டான்.

இதைப் பார்த்துவிட்டுச் சிரித்தாள் ராதா. "ஆரம்பத்திலேயே "உங்க ஹெல்த்"துக்காகக் குடிச்சுட்டுத்தான் சாப்பாட்டைத் தொடங்கியிருக்கணும்; எங்கே நீங்க பின்வாங்கிடப் போறீங்களோன்னுதான் இப்படிச் செய்தேன். சாப்பாடு செரிக்க வேண்டாமா? ஒண்ணும் பண்ணாது; ஒரு "ஸிப்" குடிச்சு வையுங்க."

"என்னை மன்னிச்சிடுங்க; பழக்கம் இல்லே" என்று தடுமாறினான் பாலன்.

முருகனுக்கும் இது சங்கடமான நிலையைத்தான் தோற்றுவித்தது. ஆனால் அவன் பாலனைக் கட்டாயப்படுத்தவில்லை.

"அப்படீன்னா பரவாயில்லே; உங்க அண்ணா அதைக் கவனிச்சுக்குவார்!" என்று சொல்லி, அந்தக் கோப்பையை எடுத்து ராதா முருகனிடம் நீட்டினாள். மௌனமாக அதையும் உறிஞ்சி உள்ளே தள்ளி வைத்தான் முருகன்.

குடைராட்டினம்போல் அந்த மாடி மெல்லச் சுழன்றுகொண்டே வந்தது. அங்கிருந்தபடியே கோலாலம்பூர் நகரத்தின் கோலாகலத் தோற்றத்தைக் கண்டுகளித்தான் பாலன். இயற்கை அழகும் செயற்கை அழகும் கூடிக் களிநடம் புரியும் நகரம் அது. நகரத்தின் பரப்புக்குப் பஞ்சம் இல்லை. எங்கே பார்த்தாலும் மரங்கள், செடி கொடிகள், அழகழகான சிறு வீடுகள். நகரத்தின் மையப் பகுதியில் மட்டும் மிகுதியாக மரங்களைக் காணோம். சாலைகளில் சிற்றெறும்புக் கூட்டம்போல் சாரிசாரியாகக் கார்கள் போய்க்கொண்டிருந்தன. புதியதோர் உலகத்துக்கே வந்துவிட்டது போன்ற உணர்ச்சி பாலனுக்கு ஏற்பட்டது.

சாப்பாடு முடிந்தது; பலமான விருந்துதான். பில் வந்தது. அதைக் கொடுப்பதில் சற்று நேரம் முருகனும் ராதாவும் போட்டி போட்டுக் கொண்டார்கள். வெற்றி ராதாவுக்குத்தான். அறுபது வெள்ளிக்கு மேல் செலவாகியிருந்தது. நோட்டுக்களாக எழுபது வெள்ளியைத் தட்டில் வைத்துவிட்டு அங்கிருந்து எழுந்தாள் ராதா.

பாலன் அந்தத் தொகையைப் பார்த்தவுடனேயே திடுக்கிட்டான். கிட்டத்தட்ட ஒரு மாதம் உழைத்தால் அவன் அப்பாவுக்கோ அம்மாவுக்கோ கிடைக்கக்கூடிய தொகை அது. தொழிலாளர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த முருகனுக்கு இந்த உண்மை தெரியாமல் இருக்க நியாயம் இல்லை.

ஓட்டலைவிட்டு வெளியே வந்தவுடன் "இன்னிக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே, எங்கேயாச்சும் போய்ப் பொழுது போக்கலாமா?" என்று முருகனிடம் கேட்டாள் ராதா.

"இன்னிக்கே நான் ஊருக்குத் திரும்பணும்! எனக்கு அங்கே வேலை இருக்கு" என்று குறுக்கிட்டுக் கூறினான் பாலன்.

"அப்படீன்னா உங்க நேரத்தை நான் எடுத்துக்கலே. உங்க அண்ணன் கிட்டப் பேசவேண்டிய விஷயம் உங்களுக்கு நிறைய இருக்கலாம். வாங்க, உங்களை உங்க ரூம்லே விட்டுட்டு நான் கிளம்பறேன்!"

மீண்டும் முருகன் குடியிருந்த இடத்தை நோக்கிக் கார் திரும்பியது. அவர்களை இறக்கிவிட்டு காரிலிருந்தபடியே ராதா இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டாள். "உங்க வீட்டிலே நான் எல்லாரையும் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லுங்க" என்று பாலனிடம் கூறினாள். கார் அங்கிருந்து கிளம்பியது.

தன் அறைக்குப் போகும் மாடிப்படி ஏறிக்கொண்டே, "எதிர்பார்க்காத வேளையிலே அவளும் வந்து சேர்ந்திட்டா; எப்படி, ராதாவை உனக்குப் புடிச்சிருக்கா?" என்று கேட்டான் பாலன்.

"உனக்குப் புடிச்சிருந்தால் சரி; நல்ல பெண்ணாத்தான் தோணுது. ஆனா மிகவும் பெரிய இடத்துப் பெண்போலே இருக்கு."

"ஆமா, பெரிய இடத்துப் பெண்தான்" என்று சொல்லியபடியே கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் முருகன். பாலன் நாற்காலியிலும் முருகன் கட்டிலிலும் அமர்ந்துகொண்டார்கள்.

"அஞ்சு மணிக்கு இங்கேருந்து பஸ் புறப்படுது; அதிலே கிளம்பினால் ராத்திரிக்குப் போய்ச் சேர்ந்திடலாம். நீ ஒரு நாளைக்கு லீவு போட்டுட்டு வந்தால் போதும், அம்மா அப்பா ரெண்டு பேருமே உன்னைப் பார்க்கணும்கிறாங்க" என்று தான் வந்ததன் காரணத்தை வலியுறுத்தினான் பாலன்.

"நான் ஊருக்குப் புறப்படறது ஒரு பக்கம் இருக்கட்டும்" என்று சொல்லித் தன் முகத்தை அழுத்தித் தேய்த்துக்கொண்டான் முருகன். எதையோ அவன் யோசிப்பதுபோல் தோன்றியது. யோசித்துவிட்டு "உங்கிட்ட உன்னோட எதிர்காலத்தைப் பத்தி நான் முக்கியமாப் பேசவேண்டியிருக்கு" என்றான்.

பாலனின் கண்கள் முருகனின் கண்களைச் சந்தித்தன. குடித்திருந்ததால் விழிகளில் ஓரளவு சிவப்பேறியிருந்தாலும் அவன் நிதானத்தோடுதான் இருந்தான் என்பதைப் பாலன் புரிந்துகொண்டான்.

முருகன் பேசலானான்.

"நம்ம குடும்பத்திலே பிறந்த ஆம்பிளைப் பிள்ளைங்கள்ளே முத்துவும் நடேசனும் படிக்காமல் கெட்டுப் போயிட்டாங்க. பால்மரம் வெட்டிப் பிழைக்கிறதைத் தவிர அவங்களுக்கு வேறெ வழியில்லே. ஆனால் உன்மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு. என்னாலே என்னோட தம்பிகள்ளே யாருக்காவது உதவி செய்ய முடியும்னா உனக்குத்தான் செய்ய முடியும்!"

"எனக்கென்ன உதவி தேவை இருக்கு?" என்று கேட்பதுபோல் தன் அண்ணனைப் பார்த்தான் பாலன்.

"உனக்கு ஏன் என்னாலே உதவ முடியும் தெரியுமா? அதுக்கு நீதான் காரணம். எனக்கு ஏன் இப்பப் பல பேர் உதவுறாங்க தெரியுமா? அதுக்கு நான் தான் காரணம்."

புரியாமல் விழித்தான் பாலன். குறுக்கிட்டு அவன் பேச விரும்பவில்லை.

"எவனெவன் தனக்குத்தானே உதவி செய்துகொள்கிறானோ அவனுக்குத்தான் கடவுளும் உதவி செய்வார்னு இங்கிலீஷ்லே ஒரு பழமொழி இருக்கு. இங்கிலீஷ்காரனோட இந்த எண்ணந்தான் அவனை இவ்வளவு கெட்டிக்காரனா இந்த உலகத்திலே உயர்த்தி இருக்கு. நான் சொல்றேன், கடவுள் மட்டும் இல்லே, அடுத்தவன் கூட, யார் யார் தனக்குத்தானே உதவிசெய்துக்கறானோ அவனுக்குத்தான் உதவி செய்வான். உதவி செய்ய முடியும். புரிஞ்சுதா உனக்கு?"

பாலனுக்குப் புரிவதுபோல் தோன்றியது. தன் அண்ணனிடம் அவன் கொண்டிருந்த பழைய மதிப்பு இப்போது மீண்டும் அவனிடம் தலைதூக்கியது.

"பாலா! தன்னோட எல்லாப் பிள்ளைகளையுந்தான் அப்பா படிக்க வச்சாங்க. நானும் நீயுந்தான் இப்போ படிச்சு முன்னுக்கு வந்துக்கிட்டிருக்கோம். நீயும் நானும் இப்போ படிச்சு வேலை பார்க்கிறதோட நிறுத்திக்கலே. மேல் படிப்புப் படிச்சு நீ அடுத்த பரீட்சை எழுதப் போறே. அதை எழுதித் தேறிட்டேன்னா, உனக்கு என்னாலேயே கோலாலம்பூரிலே ஒரு நல்ல வேலையா வாங்கித்தரமுடியும். நான் மேலே படிக்கறதுக்கு லண்டனுக்குப் போகப்போறேன்!"

"லண்டனுக்குப் போறியா?" மகிழ்ச்சியோடு கேட்டான் பாலன்.

"ஆமா, ராதாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அடுத்தாப்பிலே அவங்கப்பா என்னை இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கிறதாச் சொல்லி இருக்கார்."

இந்தச் செய்தியைக் கேட்டால் குடும்பத்தில் எல்லாருமே பூரிப்படைவார்கள் என்று நினைத்தான் பாலன். தோட்டத்து அதிகாரிகளான கிராணிகள், மானேஜர்கள் முதலியவர்களே தங்கள் வீட்டுப் பிள்ளைகளை மேல் படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் நிலையில் இருந்தார்கள். மரம் வெட்டும் குடும்பத்தில் பிறந்த ஒருவன் இங்கிலாந்துக்குப் போவதென்பது எளிதில் மற்றவர்களால் நம்பமுடியாத செய்திதான்.


"இதோ பார் பாலா, நான் உனக்கு உதவி செய்யணும்னா, நீயும் உனக்கு ஓர் உதவி செய்துக்கணும். எஸ்டேட் வாழ்க்கையை அடியோட நீ வெறுக்கக் கத்துக்கணும். பிறவியிலேருந்து அது கொடுத்திருக்கிற தாழ்மை உணர்ச்சியை வேரோடு கல்லிக் குப்பைத்தொட்டியிலே எறிஞ்சிடணும். அதோட பாசம், பந்தம், ஒட்டு, உறவு எல்லாத்தையும் கத்திரிச்சுக்கிட்டு, நீ அதிலேருந்து தப்பிச்சுக்கணும்; ஆமா, தப்பிச்சுக்கணும்!"

"அண்ணா!" என்று கோபத்தோடு கத்தினான் பாலன்; "நீ ஒருத்தன் தப்பிச்சு வெளியிலே வந்தாச்சு; அப்படியே என்னையும் வந்திடச் சொல்றியா?"

ஆவேசத்தோடு நிறுத்தாமல் பேசிக்கொண்டு போனான் முருகன். தோட்ட வாழ்க்கையில் அவன் அடைந்த துன்பங்கள் அதன்மீதே தீராத வெறுப்பை அவனிடம் வளர்த்திருந்தன. பயங்கரமான கனவாக அதை நினைத்துக் கொண்டு அதன் நினைவையே தன்னுடைய நெஞ்சிலிருந்து கல்லி எறியத் துடிப்பவன்போல் அவன் பேசினான்.

"நம்மை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டவங்களை அங்கேயே தவிக்க விட்டுட்டு நாம மாத்திரம் தப்பிச்சுக்கறது நியாயமா?" என்று கேட்டான் பாலன்.

"உன்னோட நியாயத்தையும் தர்மத்தையும் உன்கிட்ட படிக்கிற பள்ளிக்கூடத்துப் பிள்ளைங்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வச்சுக்க. அவுங்களை நீ ஏமாத்து; ஆனால் உன்னையே ஏமாத்திக்காதே! டார்வின் சொல்லியிருக்கான் பார். 'ஸர்வைவல் ஆஃப் தி ஃபிட்டஸ்ட்"னு, "வலிமையானவன்தான் இந்த உலகத்திலே வாழமுடியும்"னு. அதை இந்த நூறு வருஷமாத் தோட்டத்திலே வாழற தமிழன் கத்துக்கலே. அவனுக்கு யாரும் கத்துக்கொடுக்கவும் இல்லே. அதனாலேதான் இத்தனை காலமான பிறகும் ஒரு மாச நோட்டீஸை வாங்கிட்டு அவன் கடல்லே விழுந்து சாகிற நிலைமையிலே இருக்கான்.



அவனைக் காப்பாத்த நீ முயற்சி பண்ண வேண்டாம்; உன்னை நீ காப்பாத்திக்க".

"என்னை நீ என்ன செய்யச் சொல்றே?" வேதனையோடு கேட்டான் பாலன்.

"காமாட்சியை முத்து தாராளமாய்க் கட்டிக்கட்டும்; ஆனால் கண்ணம்மாவை நீ கட்டிக்கிற முட்டாள்தனத்தைச் செய்திட வேண்டாம். இன்னமும் ரெண்டு மூனு வருஷம் பொறுத்துக்க. படிச்ச பொண்ணு, பணக்காரப் பொண்ணு, எத்தனையோ பேர் உனக்கு இங்கே கிடைப்பா. நல்ல எதிர்காலம் உனக்குக் காத்துக்கிட்டிருக்கிறப்ப எதுக்காக நீ அவசரப்பட்டு உன் காலுக்கே விலங்கை மாட்டிக்கனும்?"

முருகனின் பேச்சைக் கேட்கக் கேட்கப் பாலனுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. குழப்பம் தலைதூக்கி நின்றது. "முருகன் நல்லவனா? கெட்டவனா? நல்லவனாக இருந்தால் ஏன் தோட்டத்தில் மற்றவர்களை விட்டுவிட்டு என்னை மட்டும் தப்பித்துக்கொள்ளச் சொல்கிறான்? கெட்டவனாக இருந்தால் எதற்காக அவன் என்னை எஸ்டேட் வாழ்க்கையிலிருந்து வெளியே பற்றி இழுக்க முயலவேண்டும்?"

"நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன்" என்று உறுதியான குரலில் கூறினான் பாலன். "ஒரு தோட்டத்திலே இருக்கிற அத்தனை பேரையும் காப்பாத்தறதுக்கு ஆசைப்பட்டேன். அது நடக்கலே. நம் மாமா குடும்பத்தையாவது காப்பாத்தலாமான்னு அடுத்தாப்பிலே யோசனை செஞ்சோம். அதுவும் முடியாது போலேருக்கு. கடைசியா அந்த ரெண்டே ரெண்டு பொண்ணுகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கறதுன்னு தீர்மானம் பண்ணியாச்சு. நான் கண்ணம்மாவைக் கல்யாணம் செய்துக்கப்போறது உறுதி".

"சரி, உன் இஷ்டம்; நான் அதிலே தலையிடலே" என்று முகத்தைச் சுளித்தபடி வெடுக்கென்று எடுத்தெறிந்து பேசினான் முருகன். "எத்தனை பெரிய வாய்ப்பை நீ உதறித் தள்றேன்னு இப்ப உனக்குத் தெரியாது".

"இப்ப நீ ஊருக்கு வர்றதைப் பத்தி என்ன சொல்றே?"

"எனக்கு அங்கே வரப்பிடிக்கல்லே; இப்ப நான் வரப்போறதில்லே!"

"கல்யாணத்தை எவ்வளவு சிக்கனமாப் பண்ணினாலும் ரெண்டாயிரம் வெள்ளியாவது செலவாகும்னு தெரியுது. இவ்வளவுகூட வேண்டாம்னு நான் சொல்லிப் பார்த்தேன். அம்மா கேக்கலே. தெரிஞ்சவங்களைக் கூப்பிட்டு விருந்து போடணுமாம்!"

"செலவுக்குன்னே சடங்கு, சம்பிரதாயம், கல்யாணம், கருமாதி எல்லாம் வச்சிருக்காங்க நம்ப சனங்க. அதிலே மட்டும் ஒண்ணும் குறைச்சல் இல்லே!"

கல்யாணம் என்ற சொல்லோடு கருமாதி என்ற அவச் சொல்லையும் சேர்த்து அவன் அண்ணன் சொல்லியது கேட்டுத் துணுக்குற்றான் பாலன். அவனிடம் தொடர்ந்து பேசவோ பழகவோ பாலனுக்குப் பிடிக்கவில்லை. மேற்கொண்டு அவன் பேச்சைக் கேட்க விரும்பாதவன் போல் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து, "நேரமாகுது, நான் ஊருக்குப் போயிட்டு வாறேன்" என்று கிளம்பினான்.

"சரி, போயிட்டு வா. இன்னம் ரெண்டு நாளிலே எங்கேயாவது கடன் வாங்கி ஐநூறு வெள்ளி அனுப்பி வைக்கிறேன். என்னாலே முடிஞ்சது அவ்வளவுதான். கல்யாணத்துக்கு வர்றதுக்கு லீவு கிடைச்சா வந்து பார்க்கிறேன். இல்லேன்னா நான் வராததைப் பெரிசு படுத்த வேண்டாம்னு அப்பாகிட்டே சொல்".

முருகன் பேச்சைத் தான் கேட்காததால் முருகன் கோபமடைந்திருக்கிறான் என்பது பாலனுக்குத் தெரியாமல் இல்லை. தம்பியின் மீது பற்றுதலும் பாசமும் கொண்டவன்போல் பேச்சு மழை பொழிந்தவன் திடீரென்று மாறிவிட்டான். "சரி, உன் இஷ்டம்; நான் அதிலே தலையிடலே" என்று பாலனின் கல்யாண யோசனையைப் பற்றி ஒப்புக்குச் சொல்லிவைத்தானே தவிர தன் பேச்சைத் தட்டி நடப்பவனிடம் தனக்கு எப்படித் தண்டனை தரமுடியும் என்பதை முருகன் செயலில் காட்டிவிட்டான். மூன்று மணி நேரப் பயணத்தில் அவன் விரும்பினால் எஸ்டேட்டுக்கு வந்துவிட முடியும். கல்யாணத்துக்கு வருவது கூடச் சந்தேகம் என்கிறான். இருந்துவிட்டுப் போகட்டும்.

கோலாலம்பூரில் பஸ் ஏறிச் சிரம்பானுக்குத் திரும்பினான் பாலன்.

வீட்டுக்குள் அவன் நுழைந்தபோது, அங்கிருந்த யார் முகத்திலும் சுயாடவில்லை. பாலனை உற்சாகமாக யாரும் வரவேற்கவில்லை. கீழ்வீட்டில் கூட்டம் போட்டுக்கொண்டு எல்லாரும் உட்கார்ந்திருந்தார்கள். வீரப்பன், வேலம்மாள், முத்து, செல்லம்மாள், கமலம் யாவருமே அங்கேதான் இருந்தார்கள்.

"பாவிப் பயலுக இப்படி மோசம் பண்ணிட்டானுகளே? இவுங்களுக்கெல்லாம் குடும்பம், பொண்டு, புள்ளை, அக்கா, தங்கச்சி யாரும் இருக்கமாட்டாங்களா?" என்று வேதனைக் குரலெடுத்து முனகலானாள் வேலம்மாள்.

"என்ன நடந்திச்சு?" என்று கேட்டான் பாலன்.

மௌனமாக முத்து ஒரு காகிதத் துண்டை எடுத்து நீட்டினான். அங்கே இருந்த அரிக்கேன் விளக்கருகில் பாலன் அதை எடுத்துச் சென்றான். தமிழில் அச்சடிக்கப்பட்ட துண்டுக் காகிதம் அது. விக்டரி எஸ்டேட் நிர்வாகம் அதை வெளியிட்டிருந்தது.

படித்தான்:

"இதனால் சகல விதமான எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், அவர்கள் அக்கம்பக்கத்துத் தோட்டங்களில் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தொழிலாளர்களையோ அவர்கள் குடும்பத்தாரையோ தங்கள் வீடுகளில் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான். அது மட்டும் அல்ல, ஏற்கனவே உள்ள விதிகளிலிருந்து தப்புவதற்காக, நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தோட்டத்தில் உள்ளவர்களோடு கல்யாணச் சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் சிலர் முயற்சி செய்வதாய்த் தெரிகிறது. அப்படிக் கல்யாணம் செய்துகொள்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு அவர்களை அழைத்துக்கொள்ளக்கூடாது. மீறி நடப்பவர்கள், விளைவைத்தெரிந்தே கல்யாணம் செய்து கொண்டதாய்க் கருதப்படுவார்கள். அதன் பின் விளைவுகளுக்கு அவர்களே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும். வாடகை இல்லாமல் வீடும், விலை இல்லாமல் விறகும், காசில்லாமல் தண்ணீரும் கொடுக்கும் நிர்வாகத்துடன் இந்த விஷயத்தில் ஒத்துழைக்கும்படி தொழிலாளர்கள் கோரப்படுகிறார்கள்."

அச்சிட்ட தாளை ஒரு முறைக்கு இருமுறை கவனமாகப் படித்துப் பார்த்தான் பாலன். அவனுடைய அண்ணன், கல்யாணத்தையும் கருமாதியையும் ஒன்றாகச் சேர்த்துப் பேசிய நினைவு அப்போது அவனுக்குப் பளிச்சிட்டது. குபேரபுரியில் வாழ்ந்து பழகிவிட்டவன், குசேலபுரிவாசிகளுக்கு இட்ட சாபத்தின் விளைவா அது? இல்லை, ஒப்பந்தக் கூலிமுறையென்றால், இப்படியெல்லாம் கூடத் திடீர் திடீரென்று சட்டங்கள் போடவும் குடும்ப வாழ்வில் குறுக்கிடவும் உரிமையை அது பெற்றிருக்கிறதா?

கையில் காகிதத்தோடு அந்த விளக்கருகிலேயே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டான் பாலன்.

(தொடரும்)

முத்துக்கள்

கடலிலே முத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிப்பிகளின் வயிற்றிலே சிதறிக் கிடக்கின்றன. அம்முத்துக்களை அப்படியே விட்டுவிடுவதனால் யாருக்கும் எந்த விதப் பயனும் கிடையாது. அவற்றை ஒன்று திரட்டிச் சரமாகக் கோத்து மாலையாக அணியும்போதுதான் அவற்றின் தன்மை புரிகிறது.

இதுபோலவே, தோட்டங்களிலும் கிராமங்களிலும் இளைஞர்கள் அங்கொருவரும் இங்கொருவருமாகச் சிதறிக் கிடக்கின்றனர். அவர்களை அப்படியே விட்டுவிடுவதால் அவர்கள் யாருக்கும் பயனற்றவர்களாகி விடுகின்றனர். அவர்களை ஒன்று திரட்டிச் சமூக இயக்கங்களின் வழி பயன்படுத்திக் கொள்ளும்போதுதான் அவர்களின் தன்மை புரிகிறது.

—அ. முனுசாமி,
போண்டோக் தஞ்சோங்



முன்னோட்டம்

தொலைக்காட்சி

14-7-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: கலைஞர் மு. கருணாநிதி கதை-வசனம் எழுதிய பராசக்தி. இதில் சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி, எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், பண்டரிபாய் ஆகியோர் நடித்துள்ளனர்.

21-7-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம்: சல்தே பதன்..

28-7-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: சங்கே முழங்கு. எம். ஜி. ஆர்., லட்சுமி, டி. கே. பகவதி, வி. கே. ராமசாமி, அசோகன் ஆகியோர் நடித்துள்ளனர். கதை- வசனம் - டைரக்ஷன்: இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன். இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

16-7-77 இதுவே வாழ்வின் வினோதம். பணக்காரப் பெண்ணொருத்தி ஏழை வாலிபனைக் காதலித்துக் கைப்பிடிக்கிறாள். கைப்பிடித்தவன் ஈயலம்ப மணற்சரிவில் புதைந்து போகிறான். அவள் பிறந்த வீட்டுக்குப் போகிறாள். அங்கே அவளை ஏற்றுக் கொள்ள ஒருவன் காத்திருக்கிறான். அவள்...?

இந்நாடகத்தைத் தலைநகர் ஜி. கண்மணி கிருஷ்ணன் எழுதியுள்ளார். தயாரிப்பு: எல். ராமன்.

23.7.77 தலைநகர் நிர்மலா ராகவன் எழுதிய இதற்குத்தானா உறவு?

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு 7.15 மணிக்கு ஒலிபரப்பாகிறது]

சிவானந்தத்தின் குடும்பத்தில் துன்ப அலைகள் ஓய்ந்தபோது புதிய பிரச்னைகளும் குழப்பங்களும் உருவாகின்றன. அவற்றுக்குத் தீர்வு காணப்படுமா...?

பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிவரும் அலைகள் ஓய்ந்தபோது... தொடரினைக் கேளுங்கள்.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

16-7-77 கா. அப்துல் காதர் எழுதிய சத்தியம், இது சத்தியம்.

23-7-77 பட்டர்வொர்த் எம். சின்னத்தம்பி எழுதிய சாமியாடி சொக்கன்.

சிறுகதை

(ஞாயிறு இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

17-7-77 பினாங்கு கே. ஆர். காளிதாசன் எழுதிய உமா

24-7-77 செர்டாங் எல். முத்து எழுதிய தப்புக் கணக்கு

மனச்சூழல்

[ஞாயிறு தோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகிறது] .

17-7-77 அகம் ஓர் அல்ஜீப்ரா ஏகபோக நாகரிக வாழ்வை விரும்பும் தந்தை; அதற்கு நேர்மாறாக பரம சாதுவாகவும் பக்திமானாகவும் உள்ள மகன்; இருவரிடையே பெரும் போராட்டம்; இறுதியில் ஒருவர் வெற்றி பெறுகிறார். அவர்... இதனை ஜி. கண்மணி கிருஷ்ணன் எழுதியுள்ளார். தயாரிப்பு ஏ. பீட்டர்

24-7-77 தலைநகர் மெ. அறிவானந்தன் எழுதிய நச்சுக் கோப்பை

இஸ்லாமிய நாடகம்

21-7-77 வியாழன் இரவு 8.30க்குத் தலைநகர் எம். பி. நூர்முகமது எழுதிய வரட்டுக் கௌரவம் என்ற பதினைந்துநிமிட நாடகம் ஒலியேறும்

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை மணி 6–31க்கு ஒலிபரப்பாகிறது)


23-7-77—30-7-77 ஆகிய நாட்களில் விஜயகுமார், ஜெயசித்ரா, ஜெய்கணேஷ், சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன் ஆகியோர் நடித்த தாயில்லாக் குழந்தை இரு பகுதிகளாக ஒலியேறும். கதை. தயாரிப்பு: சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பா தேவர். டைரக்ஷன் எம். திருமுகம், இசை: சங்கர்-கணேஷ்

கண்ணோட்டம்

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தமிழ்ப்படங்கள் மிகவும் மோசமாக உள்ளன. ஏராளமான படங்கள் இருக்கையில், ஏன் இப்படி உருப்படாத படங்களைக் காண்பித்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளவேண்டும்? இதன் பொறுப்பாளர்கள் சிறிது கவனம்செலுத்திரசிகர்களின் மனக்குறையைக் களைய முன்வருவார்களா?

—இரா. இராமராவ், தலைநகர்

துணையமைச்சர் பாராட்டினார்!



அண்மையில் சிலாங்கூர் இந்தியப் பத்திரிகை விற்பனையாளர்கள் சங்கத்தின் 13ஆம் ஆண்டு விழா, தொழிலாளர் ஆள்பலத் துணையமைச்சர் மாண்புமிகு கு. பத்மநாபன் தலைமையில் நடந்தது.

"புதிதாகத் தோன்றி மாதமிருமுறை வெளிவந்துகொண்டிருக்கும் "புதிய சமுதாயம்" இதழ் மக்களிடையே நல்ல வரவேற்பையும் ஆதரவையும் பெற்று வருகிறது.

நல்ல தரமான பத்திரிகைகள் வெளிவந்தால் அவற்றை வாங்கிப் படிக்க வாசகர்கள் காத்துக் கிடக்கிறார்கள் என்பது புதிய சமுதாயத்திற்கு வாசகர்கள் அளித்துவரும் வரவேற்பிலிருந்து தெரிகிறது" என்று துணையமைச்சர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

படவிளக்கம்: மாண்புமிகு கு. பத்மநாபன் தலைமையுரையாற்றுகிறார். மற்றவர்கள் இடமிருந்து சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ஓய். செபஸ்தியான், செயலாளர் திரு. சி. த. வடிவேலு, செயலவை உறுப்பினர் திரு எம். பி. ஆப்ரகாம்.

15 நாள் பலன்

ஜூலை 11 முதல் 25 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

நினைத்த காரியங்கள் நிறைவேறும். என்றாலும், சிற்சில பிரச்சினைகள் உங்களுக்குத் தலைவலியைக் கொடுக்கலாம். எதிர்பாராமல் பணம் வரும். ஓய்வு ஒழிச்சலில்லாமல் வேலைசெய்ய வேண்டியுள்ளதா? என்ன செய்வது? சமாளியுங்கள். இம்மாதப் பிற்பகுதியில் எல்லாம் சரிபட்டுவரும். உடலாரோக்கியம் பாதிக்கலாம். கொஞ்சம் கவனமாக இருங்கள்.

நல்ல நாட்கள்: 13,15,16,21,22

எச்சரிக்கை நாட்கள்: 20, 24

மீனம் (பிப். 19- மார்ச்சு 20)

செய்தொழிலில் உங்கள் முழுத் திறமையையும் காண்பிக்கவேண்டிய காலம் இது. சோம்பலாக இருந்துவிடாதீர்கள். கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டு நீங்கள் சாலையில் நடக்கப்போக, கார் உங்களை மோதப்போக...ஏன் வீண் வம்பு? கவனமாக இருங்கள். புதியயோசனை, திட்டம் ஏதும் உதயமாகிறதா? தயங்காமல் செயல்படுத்திப் பாருங்கள்.

நல்ல நாட்கள்: 15,16,21,22

எச்சரிக்கை நாட்கள்: 19, 25

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

கண்ணை மூடிக்கொண்டு செலவு செய்யும் சந்தர்ப்பங்கள் பல ஏற்படலாம். பணத்தைக் கையிலேயும் பையிலேயும் வைக்காமல் வீட்டில் வைத்துவிட்டுப் போங்களேன்! உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்களின் உதவி கிடைத்தாலும் நீங்கள் அவர்களின் உதவியை அளவுடன் பெற்றுக் கொள்வதே நல்லது. நாளை ஒரு காலத்தில் "சொல்கடன்" வந்துவிடுமே, அதற்காகத்தான் சொல்கிறேன்.

நல்ல நாட்கள்: 13,15,16,17

எச்சரிக்கை நாட்கள்: 14,20,23

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

மேலதிகாரிகளின் போக்கு உங்களுக்கு ஒத்துப்போகாவிட்டாலும் செய்தொழிலில் மேன்மை உண்டாகும். வருமானம் பெருகவும் வழி உண்டு. குடும்பத்தில் சில சச்சரவுகள் தோன்றினாலும் நெருங்கிய உறவினர்களால் அவை தீர்க்கப்படும். எடுத்ததெற்கெல்லாம் முன்கோபம் கொள்வதா? உங்கள் முன்னேற்றத்திற்கு அதுவே பெரிய முட்டுக்கட்டை!

நல்ல நாட்கள்: 13,15,16,21,22

எச்சரிக்கை நாட்கள்: 19, 20

மிதுனம் (மே 21-ஜூன் 20)

மற்றவர்களுக்காக இரக்கப்பட்டு ஒன்றிரண்டைச் செலவழிக்க வேண்டியிருக்கும். கன்னிப் பெண்களுக்குத் திருமணம் கைகூடும் காலம் இது. வழக்கத்திற்கு அதிகமாகப் பயணங்கள் செய்ய நேரும். பெரியோர்களின் ஒத்துழைப்பு மாத இறுதியில் கிடைக்கும். "மறப்போம்; மன்னிப்போம்" என்னும் வாக்கின்படி நீங்கள் நடந்தால் பல வழிகளிலும் நன்மை கிட்டும்.

நல்ல நாட்கள்: 15, 21, 22

எச்சரிக்கை நாட்கள்: 11,14,17

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

பொருளாதாரம் நல்லபடி இருக்கும். கடிதப் போக்குவரத்து-வாகனப் போக்குவரத்து முதலியவற்றால் சில நன்மைகள் கிடைக்கலாம். உடல் ஆரோக்கியத்தில் நீங்கள் அக்கறை செலுத்தவேண்டும். மேலதிகாரிகள் உங்களின் வேலைத் திறமையைப் பாராட்டுவர். தவறான வழிகளைச் சிலர் காட்டக்கூடும். எச்சரிக்கையாக இருங்கள்.

நல்ல நாட்கள். 17, 18, 21

எச்சரிக்கை நாட்கள்: 19, 20

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். பணமுடை ஏற்படாது. செய்தொழிலும் நல்லவிதமாக இருக்கும். அடிக்கடி அங்குமிங்கும் அலைய வேண்டியிருக்கும். அதனால்தான் ஆதாயம் உண்டு என்கிறபோது அலைவதற்கென்ன? கார் ஓட்டும் வழக்கமுள்ளவர்கள் கொஞ்சம் கவனமுடன் இருப்பது நல்லது.

நல்ல நாட்கள்: 16, 22

எச்சரிக்கை நாட்கள்: 18, 19

கன்னி (ஆக 22-செப். 22)

எதிலும் திடீர் முடிவுசெய்து அவதிப்படவேண்டாம். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உறவினர்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட உதவி கிடைக்காது. செலவுகள் கொஞ்சம் அதிகமாகும். என்றாலும் பணமுடை ஏற்பட வழியில்லை. உடலாரோக்கியம் நல்லபடி இருக்கும்.

நல்ல நாட்கள்: 15, 22

எச்சரிக்கை நாட்கள்: 20, 21

துலாம் (செப். 23-அக். 22)

பொதுச்சேவைகளில் அதிகமாக ஈடுபடுவீர்கள். அதனால் உங்களுக்குப்பேரும் புகழும் அதிகமாகும். கூட்டுத்தொழில் செய்ய எண்ணுகிறீர்களா? அதைச் சில நாட்களுக்கு ஒத்திவையுங்கள். எப்பொழுதும் கையில், மடியில் கொஞ்சம் பணத்தை வைத்துக்கொண்டே இருங்கள். ஏனெனில் எதிர்பாராத செலவுகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

நல்ல நாட்கள்: 13, 15, 21

எச்சரிக்கை நாட்கள்: 12, 19

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

குடும்பத்தில் வீண்வாக்குவாதம் ஏற்பட்டு அமைதி குறைந்து காணப்படலாம். அடக்குங்கள்; முடியாவிட்டால் அடங்குங்கள். அதுவே அமைதிக்கு வழி. உத்தியோக உயர்வு கிடைக்கும் வாய்ப்புண்டு. உங்கள் முழுத் திறமையையும் பயன்படுத்துங்கள். வெளியூர்ப் பயணங்களால் நன்மை உண்டு. பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 13, 19, 22

எச்சரிக்கை நாட்கள்: 17, 24

தனுசு (நவ. 23 - டிச. 20)

பிரமச்சாரிகளுக்கும் கன்னியர்களுக்கும் திருமணம் கைகூடும் நேரம். நெடுந்தூரப் பயணங்களைத் தவிருங்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு ஏற்படும் உடல் நலக் குறைவால் உங்களுக்குக் கொஞ்சம் அவதி ஏற்படலாம். எதிர்பாராத பிரச்சினைகள் பல உருவாகி உங்கள் நிம்மதிக்கு ஊறு விளைவிக்கலாம். நிதானமாக எதையும் செய்யுங்கள்.

நல்ல நாட்கள்: 15, 18, 23

எச்சரிக்கை நாட்கள்: 16,19

மகரம் (டிச. 21- ஜன. 19)

எழுத்தாளர்களுக்கு யோக காலம். மற்றவர்களுக்குப் பணம் தேடும் முயற்சிகள் பலிக்கும். அதற்கு உதவியாக நண்பர்களும், உறவினர்களும் இருப்பார்கள் - என்றாலும் கடின உழைப்புத்தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கடிதப் போக்குவரத்தினால் நன்மை உண்டு. நீண்ட நாளாகச் சுணங்கிக் கிடந்த காரியங்கள் நிறைவேறும்.

நல்ல நாட்கள்: 16, 21, 22

எச்சரிக்கை நாட்கள்: 15,23,25

—தஞ்சை நகுலன்


கற்பின் செல்வி
கண்ணகி
8
பொற்கொல்லனுடன் சென்ற காவலர்கள் கோவலனைக் காண்கின்றனர்
இவனைப் பார்த்தால் திருடன் மாதிரி தெரியவில்லையே
திருடிவிட்டு நல்லபிள்ளைபோல காட்சி அளிப்பதிலிருந்தே, இவன் மகா திருடன் என்பது தெரியவில்லையா
கொல்லனின் சூது அறியாத காவலர்களும் குற்றமற்ற கோவலனை கொன்றனர்
கோவலன் கொலைப்பட்ட தினத்தில் ஆயர்சேரியில் மாதரி தன் மகளிடம்....
ஐயை, இதென்ன அதிசயம் குடத்துப்பால் உறையவில்லை, காளைமாடு அழுகிறது ஏதோ தீமை நடந்து இருக்கும் போல் தோன்றுகிறது
கண்ணகி மாதரியிடம்....
மாமி, மதுரை நகருள் சென்ற என் கணவர் இன்னும் வீடு திரும்பவில்லையே, எனது நெஞ்சம் என்னவோ தெரியவில்லை, துணுக்குறுகிறது!
அப்போது ஒருத்தி ஓடிவந்து கண்ணகியிடம்
அம்மணி, தங்கள் கணவரைக் கள்வன் எனக் கூறி கொல்லச் செய்துவிட்டார், மன்னர்
ஆ, இதென்ன கொடுமை, குற்றமற்ற என் கணவர் கள்வரா? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் சூரியனே, நீ சொல் என் கணவர் கள்வரா.....
கற்புடைய செல்வியே, உன் கணவன் கள்வனல்லன் அவன் கொலைப்பட்ட இந்த ஊர் தீக்கு இரையாகும்
தொடரும்..

பெரிய சோம்பேறியாயிட்டே டே...! முன்ன மாதிரி வேலையிலே அவ்வளவு கவனமா இருக்கிறதில்லே... இப்ப உனக்கு என்ன நினைப்பு... காலையிலேயே சொன்னேனு இல்லேயா? பசியாறி முடிஞ்சதும் மூட்டைக் கலப்பு செய்யின்னு... செஞ்சியா அதை... மறந்திட்டு... இங்கே நின்னுகிட்டு எதைப் பார்த்துக்கிட்டிருக்கிறே போடா...போடா...போயி சொன்ன வேலையைக் கவனி."

முதலாளி தென்போ இப்படிச் சீறி விழுந்த போது அக்காவ் எதுவும் பேசவில்லை. முணுமுணுத்துக் கொண்டான். முகத்தைச் சுளித்தபடி அங்கிருந்து நகர்ந்தான்.

"ம்...இன்னும் ரொம்ப நாளைக்கு உனக்கு உழைச்சிப் போட்டு நான் ஏமாந்து போய்க்கிட்டே இருப்பேன்னு நினைக்கிறியா நீ...! அடே! உன் தில்லுமுல்லுகளை நல்லா புரிஞ்சவண்டா நான். எனக்கும் தெரியும் எப்படி பிழைக்கிறதுன்னு. இந்த நிமிடமே "நீ வெளியே போ"ன்னாலும் நான் ரெடி. அப்புறம் பார்... உன்னை விட பெரிய முதலாளியாகிக் காட்டறேன்" மனதிற்குள் ததும்பி நின்ற வன்மத்தை ஒரு முறை எச்சிலாகக் காறித் துப்பிக் கால்கட்டையால் தேய்த்துவிட்டுக் கொண்டான் அக்காவ்.

இப்படித்தான் மனதிற்குள் குமுறுகின்றான். அவன் மனதிற்குள் இந்தப் போராட்டம் சமீப காலமாகவே நடந்துகொண்டிருக்கிறது. தன் முதலாளி தென்போ... ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு கடையில் ஈ ஓட்டிக்கொண்டிருந்தவன் என்பதை அக்காவ் கேள்விப்பட்டிருக்கிறான். அதன் பிறகு எப்படி இவ்வளவு பெரிய கட்டிடக் கடைக்குச் சொந்தக்காரனானான், எப்படி இரண்டு வேன்கள் வாங்கினான், பக்கத்தில் இருபது ஏக்கர் ரப்பர் தோட்டம் கூட அவனுக்குச் சொந்தமாக இருக்கின்றதே. அவன் பிள்ளைகளில் ஒருவன் ஆஸ்திரேலியாவில் படிக்கின்றான். மற்றொருவன் தலைநகரத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் டாக்டருக்குப் படித்துக்கொண்டிருக்கிறான். ஒரு ஏழெட்டு வருடங்களுக்குள் தென்போ எவ்வளவு வேகமாக முன்னேறி இருக்கிறான்.

நான்கு வருடங்களுக்கு முன் அக்காவ் தன் படிப்பை அரையும் குறையுமாக நிறுத்திக் கொண்டு தன் குடும்பத்திற்கு உதவுவதற்காக தென்போ கடையில் உடனடியாக கிடைத்த வேலையில் ஒட்டிக்கொண்டான். பாதியில் போன படிப்பிற்காக அவன் கவலைப்படவேயில்லை.



பி.கே.சரோஜா மணியம்

தென்போ வியாபாரத்தில் ஏற்றம் கண்டுகொண்டிருந்த நேரம் அது. அப்போதுதான் அக்காவ் அவனுக்குக் கைக்கு உதவியாக வந்து சேர்ந்தான். காலால் இட்ட வேலைகளைத் தலையால் செய்வான் என்பார்களே அப்படி உழைத்தான். வஞ்சகமில்லாத உழைப்பு. போட்ட சாப்பாட்டைச்சாப்பிட்டுக்கொண்டு நேரம் காலம் பார்க்காமல் உழைத்தான் அக்காவ். அக்காவ் வேலைக்குச் சேர்ந்த பிறகு தன் முதலாளியிடம்



எத்தனையோ. தானுகக் கற்றுக் கொண்ட அனுபவங்கள் எத்தனை எத்தனையோ. எதை எதைச் செய்யலாம் என மனதிற்குள் அரும்பித் துளிர்க்கும் புதுப் புதுச் சிந்தனைகள் எவ்வளவோ?

ஓ... அந்தப் பாடங்கள்...! அத்தனையும் வணிகத் துறையின் சூதாட்டங்கள்... நடமாடும் பித்தலாட்டங்கள்... மோசடிகள். ஆனல், அவை தான் வியாபாரத் துறையின் லட்சணங்கள்.

ஆரம்பக் காலத்தில் தன் முதலாளி தென்போ சொல்லித் தந்த பாடங்களைக் கேட்டு மனஞ்சிலிர்த்து மனச்சாட்சியோடு சிறிது போராடி இருக்கிறுன் அக்காவ். போகப்போக மனம் மரத்துப் போய்விட்டது. இதயம் இரும்பாகிவிட்டது.நேர்மை யாவது... நியாயமானது... எல்லாவற்றையும் பொட்டலங்கட்டி மனத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டான்.

வருகின்ற வாடிக்கையாளரை எடைபோட்டு அதற்கேற்றாற் போலவே விற்க வேண்டிய பொருளையும் தராசில் வைத்து எடை போட்டு விற்கவேண்டும். ஒரு கட்டிக்கு ஒரு தயிறுவது குறைவாக நிறுத்திக் கொடுக்க வேண்டும்... என்று கற்றுக் கொடுத்த முதலாளியையும் பிறகு மிஞ்சிவிட்டான் அக்காவ்.

டின்னிற்கு இரண்டு போத்தல் மண்ணெண்ணெய்யை எடுத்துவைத்துக்கொண்டு விற்பனை செய்வதில் கைதேர்ந்தவனுனன்.

ஒரு கட்டி கருவாட்டைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி பாலித்தீன் பைகளில் அடைத்து மூன்று மடங்கு இலாபத்தை அடையும் மார்க்கத்தைக் கண்டுபிடித்துச் செயல்படுத்தியிருக்கிறுன்.

எத்தனை எத்தனையோ முறைகளில் அக்காவ் தன் வஞ்சகமில்லாத உழைப்பைக் கொடுத்து தன் முதலாளியின் உயர்வுக்குக் காரணமாக இருந்திருக்கின்றுன்.

அப்படிப்பட்ட அக்காவ்வுக்கு வேறு உயர்வான வேலை கொடுத்து சம்பளத்தையும் உயர்த்தியிருக்கலாம் இந்த முதலாளி. ஆனல் நேற்று வந்தவனெல்லாம்வேன்ஓட்டுகிறுன். தன்னை மறந்து விட்டானே முதலாளி என்ற அங்கலாய்ப்பு அக்காவ்வைப் பிடித்தாட்டியது.

வந்த நாள் முதல் இந்த நாள் வரை மூட்டைக் கலப்பு செய்யும் சிரமமான பணியைத் தான், தான் செய்ய வேண்டுமென நினைக்கிறுனே இந்த முதலாளி என்று மனதிற்குள் கறுவினுன். இதற்காக இவனுக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டுத் தான் போகவேண்டும் என்று பற்களைக் கடித்துக் கொண்டு புழக்கடைப் பக்கமாக இருந்த அந்தக் கடைசி அறைக்குள் நுழைந்தான் அக்காவ்.

அங்கிருந்த அரிசி மூட்டைகளைப் பார்த்ததும் அவனுக்கு மலைப்பு ஏற்படத்தான் செய்தது. மனதில் மகிழ்ச்சி இருந்தால் தானே வேலையில் சுறுசுறுப்பாக இயங்கமுடியும்.

மூட்டைகள் ஒருபுறம். மிகவும் மலிவான அரிசி மூட்டைகள் மறுபுறம்.

நல்ல அரிசியில் மூன்று மூட்டைகளுடன் மலிவான குருணையும் கல்லும் கலந்த தரமில்லாத அரிசி ஒரு மூட்டையைக் கொட்டிக் கலந்து மறுபடியும் மூட்டைகளாக்கி வைக்க வேண்டும். அது தான் மூட்டைக் கலப்பு. இப்போது நான்கு மூட்டைகளான அரிசி ஒரே தரமான அரிசியின் விலைக்கே விற்கப்படும். இதுதான் வியாபாரத் தந்திரமாம். ஏற்றம் முதலாளிக்கு. ஏமாற்றம் யார் யாருக்கோ. முதலாளி தென்போவின் உயர்வுக்காக இப்படி எத்தனையோ மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டிக் கலப்புச் செய்து உழைத்தவன் அக்காவ். அவனுக்குத் தான் உரிய மதிப்பும், உயர்வும் முதலாளியிடமிருந்து கிடைக்கவில்லை.

கலப்படம் செய்த அரிசி மூட்டைகளை மறுபடியும் கோணி ஊசி கொண்டு தைத்து அடுக்கி வைத்துவிட்டு மத்தியான சாப்பாட்டிற்குப் புறப்பட்டான். அவனுடைய காலர் இல்லாத வெள்ளை பனியன் வியர்வையால் முற்றுக நனைந்து போயிருந்தது. குளித்துவிட்டுச் சாப்பிட்டால் சுகமாக இருக்கும். அதற்கு அனுமதிப்பானு இந்த முதலாளி. சே... சே... சுத்த வயிற்றெரிச்சல்காரன். அக்காவ் கலைந்து போன தன் கோரை முடியை சீப்பினுல் வாரிக் கொண்டு பலகையில் தொங்கிக்கொண்டிருந்த கண்ணுடியில் பார்த்துக் கொண்டான். கோழி வால் முடி தோள் பட்டையில் சிலிப்பிக் கொண்டிருந்தது.

டிங்கிலிருந்த சோற்றை நீண்ட குச்சிகளால் தள்ளி வாயில் திணித்துக் கொண்டிருந்த அக்காவ் முதலாளியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

அவன் எதிரே கண்கள் சிவக்க பற்களை நற நறவென்று கடித்தபடி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு முதலாளி தென்போ நின்று கொண்டிருந்தான். அக்காவ் என்னவென்று புரியாமல் திரு திருவென விழித்தான்.

"டேய்! துரோகி! எத்தனை நாளாடா இந்த வியாபாரம் பண்றே. என் உப்பைத் தின்னுட்டு எனக்கே துரோகம் பண்ணிட்டியேடா. அந்த லிம் சாய்க்கு இருநூறு வெள்ளி சாமான்களைக் கட்டிக் கொடுத்துட்டு நூறு வெள்ளிக்கு பில் போட்டு வச்சிருக்கிறே. லிம்



"போலீஸ் கார் ஏன் சத்தம் கொடுத்துக் கொண்டே வருது?"
"திருடர்களை உஷார் படுத்த!"

வெள்ளியை நீ வாங்கிக்கிட்டே" அக்காவ்வை அடிப்பது போல கையை ஓங்கிக்கொண்டு நின்றுன் தென்போ.

தன் குட்டு வெளிப்பட்டு விட்டதை உணர்ந்து கொண்ட அக்காவ் ஒரு கணம் தடுமாறிப் போனுன். மறுகணம் இந்த நேரத்திலேயே தனக்கு விடுதலை கிடைக்கப் போகிறது, புது வாழ்வு ஆரம்பமாகப் போகிறது என்று உறுதி கொண்டான்.எனவே, முதலாளியை அவன் எதிர்க்கத் தயாராகி விட்டான்.

"இத்தனை வருடங்களாக உழைத்த உழைப்பிற்கு நீங்க மட்டும் என்ன பெரிசா செய்திட்டீங்க? இன்னும் மூட்டைக் கலப்பு செஞ்சி உங்களுக்கு உழைக்கிறேன். ஆனல் எனக்கு ஒரு பத்தோ இருபதோ சம்பளத்தைக் கூடுதலாகக் கொடுக்க உங்களுக்கு மனசு வரல. உழைக்கிறதுக்கு ஏற்ற சம்பளம் கொடுத்தா நான் ஏன் முதலாளி, குறுக்கு வழியிலே போகப் போறேன்? இந்த வழி கூட நானு செய்துக்கலே, உங்க கிட்டே இருந்து கத்துக்கிட்டதுதானே"

"என்ன, நான் கத்துக் கொடுத்தேனு?" முதலாளி தென்போ சீறினுன்.

"ஆமாம். அந்த அரிசி கொண்டார்ற லோரிக்காரன் கிட்டே பில் போடாம பாதி விலையிலே அரிசி மூட்டைகளை வாங்கி அடுக்கிறீங்களே அது எப்படி? அந்த மேனேஜருக்கு பாதியை நீங்க தள்றீங்க. அவன் அவனுடைய முதலாளிக்கு துரோகம் பண்ணிப்புட்டு அரிசி மூட்டைகளை உங்ககிட்டே தள்ருன். அந்தக் கம்பெனி முதலாளி உங்க மாதிரி தானே?"

ஒரு கணம் அதிர்ந்து போனுன் தென்போ! பிறகு "டேய்! அது வியாபார ரகசியம். திருட்டு நாயே... நீ எனக்கில்லேடா துரோகம் பண்ணியிருக்கிறே. டேய்! உனக்கு ரெண்டுமாச சம்பளத்தை விட்டெறியறேன். உடனே இங்கே இருந்து ஓடு. இனிமே நீ ஒரு நிமிசம் கூட இந்தக் கடையிலே இருக்கக் கூடாது" எரிமலையென வெடித்துச் சீறினுன் தென்போ.

இரண்டு மாத சம்பளத்தைக் கையில் வாங்கிக் கொண்ட அக்காவ், முதலாளியைத் திரும்பிக்கூட பார்க்காமல் நடந்தான்.

"டேய்! நீ உருப்படவே மாட்டே" –பின்னலிருந்துதென்போ வயிற்றெரிச்சலோடு கூப்பாடு போட்டான்.

"அடடே! பெரிய சத்தியவான். சாபம் கொடுக்கிறுன். உன் கிட்டே இருந்து நான் கத்துக்கிட்ட பாடம் நிறைய இருக்கு. உன்னை விடவும் வேகமா செய்து காட்ட நேரம் வாய்ச்சிருக்கு எனக்கு. நீயும் பார்க்கத்தானே போறே..." என்று மனதிற்குள் முணு முணுத்துக்கொண்டான் அக்காவ். எதையோ சாதிக்கப்போகும் ஆர்வத்துடிப்போடு மௌனமாக அவன் நடந்து கொண்டிருக்கின்றுன். ●

ஐயோ, பொறுமை!

ஆசிரியரின் கைவண்ணத்தில் மலரும் "வழிகாட்டுகிறார் வள்ளுவர்" என்ற கட்டுரையையும் "ஆவன்னா" வின் "மறுபடியும் கண்ணகி மதுரையை எரித்தால்" என்ற பகுதியையும் இரண்டு முறை படித்து மகிழ்ந்தேன்.

புதிய சமுதாயம் வளர்ச்சி பெற்று வருவதைக் கண்டு எனக்கு ஒரே "பொறுமை"யாக இருக்கின்றது.

—என். வி. சுப்பாராவ், பினாங்கு

விடிந்தது

கு. ப. ரா. வின் "விடியுமா" சிறுகதையை வெளியிட்டதன்வழி வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் நல்லவழி காட்டிவிட்டீர்கள்.

—வே. இராமு, ஈப்போ

இன்னும்...இன்னும்

இன்னும் பல தலைவர்களைப் பேட்டி கண்டு வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

—எம். எஸ். ராமுலம்மா அப்பாராவ், ஊத்தான் மெலிந்தாங்

பெயர்ப் பொருத்தம்

பெயருக்கு ஏற்றாற்போலவே ஒவ்வோர் இதழும் புதுமைப் பொலிவுடன் வெளிவருகிறது.

—டி. ராஜா, ஜாசின்

புதுமலர்ச்சி

இந்தியரிடையே ஒரு புதிய இலக்கிய மறுமலர்ச்சியை உண்டு பண்ணும் நோக்கோடு "புதிய சமுதாயம்" உருவாகி இருப்பது கண்டு மகிழ்கிறேன்.

—மு. இலட்சுமணன், ஜேரம், சிலாங்கூர்

ஏங்க வைக்கிறதே!

இப்போதெல்லாம் "புதிய சமுதாயம்" மாதம் இருமுறை குறிப்பிட்ட நாளில் கைகளில் தவழ்கிறது; அதோடு அடுத்த இதழுக்காக ஏங்கவும் வைக்கிறது.

—ஜீவரத்தினம், கோத்தா பாரு தோட்டம், கோப்பெங்

நம்பிக்கைக் கட்டுரை

எம். சி. இ. மாணவர்களுக்கான கட்டுரைத் தொடர், புத்துணர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் ஊட்டுவதாக உள்ளது.

—ஆர். பழனியாண்டி, பெட்டாலிங்

முயற்சி வெல்லும்

"வழிகாட்டுகிறார் வள்ளுவர்" கட்டுரைத்தொடரில் ஆசிரியரின் வேண்டுகோளைக் கண்ணுற்றேன். வாழ்வுக்கு நல்வழி கோலும் பொது மறை இப் புவி எங்கும் கமழ்ந்து மணம் பரப்ப ஆசிரியர் எடுத்துக் கொள்ளும் முயற்சி முழுமை பெற வாசக அன்பர்களின் ஆதரவு என்றும் உண்டு.

"ஆர்வி" ஜெயா, சுங்கை

கலங்க வைக்கும் காடு

"பால்மரக் காட்டினிலே" தொடர்கதை என் இதயத்தைக் கலங்க வைக்கிறது.

—ஐயாசாமி ஜமுனா, சுங்கை

படமேடை

"கதிர்" எழுதும் "சிந்தனை மேடை", நம்மிடையே நிலவும் சில சம்பவங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

-கே. எஸ். எம். ஹமீம் முஹம்மது, சபாக் பேர்னம்

சுளீர்! சுளீர்!

"கனவுகள் பல கோடி" தொடர் கதையில் பெண்ணைச் சுற்றித் திரியும் நவீனுக்கு லல்லி கொடுக்கும் சாட்டையடி அடேயப்பா, சுளீரென்று விழுகிறது.

—ஆ. துரைராஜா, அலோர்ஸ்டார்

ஒரு படி மேல்

இந்நாட்டில் வெளிவரும் தமிழ் இதழ்களைவிட ஒரு படி மேலேயே இருந்துவருகிறது "புதியசமுதாயம்". விளையாட்டுச் செய்திகளையும் வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

—பசுபாலன், குவாந்தான்

கவலை தந்த கவி

கரு. திருவரசு கவிதையைப் படித்தேன். கண்கள் தாமாகவே கலங்கின. நம்முடைய தாழ்ந்த நிலையை மாற்றுவார் யார்? கவிஞரின் கவலையை ஆற்றுவார் யார்?

—சு. கணேசன், ஜோகூர்பாரு

சிறந்த சபதம்

பாதாசனின் "சபதம்" சிறுகதை சிந்திக்க வைக்கும் சிறந்த படைப்பு.

—எஸ். மணியம், ரிஞ்சிங் தோட்டம், சிலாங்கூர்

நல்ல வம்பு

"பழனி மாமாவின் "விண்வம்பு" பள்ளிப் பிள்ளைகளுக்கு நல்ல பாடமாய் அமையட்டும்; இதுபோன்ற பயனுள்ள கதைகளை அவர் தொடர்ந்து எழுதுவார் என்று நம்புகிறேன்.

—குமாரி கே. ருக்குமணி, பெட்டாலிங் ஜெயா

இயற்கைச் சூழலில் அன்னை ஆலயம்

கோலாலம்பூர், உலுகிள்ளான் சாலையில் திருப்பணி செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயத்தின் குடமுழுக்கு (கும்பாபிஷேக) விழா 26.6.77 ஞாயிற்றுக் கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை ஆயிரக் கணக்கான பக்தர்கள் கண்டுகளித்தனர். இந்த ஆலயத்தின் பெருமிதத் தோற்றமும் இயற்கைச் சூழலும் பக்தர்களைப் பெரிதும் கவர்கின்றன.





முத்துராமன். கவிதா. படம்: காற்றினிலே வரும் கீதம்



"உன்னைச் சுற்றும் உலகம்" படத்தில் ஜெயலலிதா

சுஜாதா திருமணம்



யாருமே எதிர்பாராத வகையில் பிரபல திரையுலக நட்சத்திரம் சுஜாதா—ஹென்றி ஜெய்கரைக் காதல் திருமணம் செய்துகொண்டார்!

இந்தத் திருமணம் தமிழ்ப்பட உலகில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது என்று கூறலாம்!

தன் பெற்றோருக்கும் தெரியாமல் தன்னை இந்த அளவுக்குப் புகழ் பெற்ற நட்சத்திரமாக்க அரும்பாடு பட்ட அருமை அண்ணனுக்கும் தெரியாமல் சுஜாதா திடீரென்று திருமணம் செய்துகொண்டதுதான் இந்தப் பரபரப்புக்குக் காரணம்!

இந்தத் திருமணத்தையொட்டி சென்னை தாஜ்கோரமண்டல் ஓட்டலில் பத்திரிகையாளர்களுக்கு விருந்து வைத்துத் திருமணத்தைப் பற்றிய விவரங்களைக் கூறினார் சுஜாதா! பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுஜாதா புன்முறுவலுடன் பதில் அளித்தார்!

கே: நீங்கள் ரகசியமாக ஏன் திருமணம் செய்துகொண்டீர்கள்?

ப: அவர் வேறு மதத்தைச் சேர்ந்தவர். அதனால் என் பெற்றோர்கள் இந்தத் திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆகையால் ரகசியத் திருமணம் செய்துகொண்டோம்.

கே: அவரிடம் நீங்கள் எப்படி மனதைப் பறிகொடுத்தீர்கள்?

ப: இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது என்று புரியவில்லை? அவரிடம் எனக்குப் பிடிக்காதது எதுவும் இல்லை! ஆனால் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்கிறேன். அவர் சொன்ன வார்த்தையை மதித்து நடப்பவர். இல்லாவிட்டால் இரண்டு ஆண்டுகள் எனக்காகக் காத்திருப்பாரா? அதுவும் நவநாகரீகப் பெண்கள் நிறைந்த அமெரிக்காவில் இருந்தவர்; எனக்காகக் காத்திருக்கிறாரே! நான் பாக்கியம் செய்தவள் அல்லவா?

கே: திருமணத்திற்கு முன் அவருக்கு எழுதும் கடிதங்களில் எதைப் பற்றி எழுதுவீர்கள்?

ப: எங்கள் எதிர்காலவாழ்க்கையை எப்படிஅமைப்பது என்பதைப் பற்றியே இரண்டு ஆண்டுகள் திட்டம் போட்டோம். அதையே கடிதங்கள் மூலம் பரிமாறிக்கொண்டோம்.

கே: கலப்புத் திருமணம் செய்துகொண்ட நீங்கள், "கலப்புத் திருமணம் செய்துகொள்ளுங்கள்" என்று மற்றவர்களுக்குப் புத்தி சொல்வீர்களா?

ப: எனக்குக் கலப்புத் திருமணம் பிடித்து இருக்கிறது...! ஒவ்வொருவருக்கும் ஒன்று பிடிக்கும். அதனால் நான் எதுவும் சொல்ல முடியாது.

கே: அமெரிக்காவுக்கு சென்றதும் நாட்டிய நிலையம் அமைத்து கலைத்தொண்டு புரிவீர்களா?

ப: அப்படி எதுவும் செய்யத் திட்டமில்லை.

கே: இதுவரையில் எத்தனைப் படங்களில் நடித்து இருக்கிறீர்கள்?

ப: தமிழில் 25 படங்களும், மலையாளத்தில் 40 படங்களும் இருக்கும். எனக்கு இதுவரையில் ஆதரவு காட்டிய ரசிகர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்!

அட்டைப்படப் பேட்டி

கமலஹாசனை எப்படி



உருக்கமான குடும்பக் கதையா, நியூவேவ் கதையா, வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் கதையா - எதையும் சிந்தித்துப் பார்த்து—வளர்ந்து வரும் சமுதாய மாற்றத்திற்கேற்ப படமாக்கி வெற்றி காண்பதில் முன்னணியில் நிற்பவர் தமிழ்ப்பட "இயக்குநர் சிகரம்" கே. பாலசந்தர். "காதல் இளவரசன்" என ரசிகர்களால் அழைக்கப்படுவர் கமலஹாசன். இருவரும் 30 பேர் கொண்ட குழுவுடன் இங்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வந்திருந்த போது "புதியசமுதாயத்திற்காக" பாலசந்தரும், கமலஹாசனும் அளித்த சிறப்புப் பேட்டி இது.

"நான் இளைஞனாக இருந்த போது விரும்பித் தொடர்ந்து படித்த வந்த "பொன்னி" பத்திரிகையின் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மலேசியாவில் வெளிவரும் "புதிய சமுதாயம்" இதழுக்குப் பேட்டி கொடுப்பதில் தனி இன்பம் அடைகிறேன்" என்றும் பேட்டியின் ஆரம்பத்திலேயே பூரிப்புடன் குறிப்பிட்டார் பாலசந்தர்.

கே: நீங்கள் உருவாக்கி இன்று புகழ்வானில் சிறந்து விளங்கும் கமலஹாசனை முதன் முதலில் எப்போது சந்தித்தீர்கள்?

ப: அவனைக் "காத்திருந்த கண்கள்" படப்பிடிப்பின் போதுதான் முதன் முதலில் சந்தித்தேன். அப்போது அவனுக்கு வயது 15. இது 1968 அல்லது 69-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அதன் பிறகு "பூவா, தலையா" படப்பிடிப்பின் போது ஜெமினி கணேசன் அவனைக் கூட்டிக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்.

கே: முதன் முதலில் கமலஹாசனை சந்தித்தபோது உங்களுக்கு என்ன தோன்றியது? அவர் இவ்வளவு சீக்கிரம் புகழ் பெற எப்படி வழி செய்தீர்கள்?

ப: ஏதோ ஒரு தனித்திறமை அந்தப் பையனிடம் ஒளிந்து கொண்டிருப்பதாகவே எனக்குப் பட்டது. வயதிற்கும் அதிகமான இன்டலிஜன் அவனிடமிருந்தது. "அரங்கேற்றம்" படத்தில் அவனுக்கு ஒரு சின்ன "ரோல்" கொடுத்து நடிக்க வைத்தேன். அடுத்துச் "சொல்லத்தான் நினைக்கிறேன்" படத்தில் வில்லன் கேரக்டரில் நடிக்க வைத்தேன். அவன் தொடர்ந்து படவுலகில் வில்லனாகவே மாறிவிடாமலிருக்க "அபூர்வ ராகங்கள்" படத்தில் கதாநாயகனாகப் போட்டேன். அவனுடைய இளமைத் தோற்றமும் நடிப்புத் திறமையும் கடின உழைப்பும்தான் அவனுக்கு இந்த அளவுக்குப் புகழ் தந்துள்ளதாக நினைக்கிறேன்.

கே: கமல் நடித்த படங்களில் நீங்கள் எதிர்பார்த்ததை விடச்சிறப்பாக நடித்திருப்பதாக எந்தப் படத்தைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?

ப: "அபூர்வ ராகங்கள்".

கே: நீங்கள் இயக்காத சில படங்களிலும் கமல் நடித்திருக்கிறார். அப்படி வந்த படங்களில் நீங்கள் ரசித்துப் பார்த்த படம் எது?

ப: அவன் சுஜாதாவோடு நடித்து வெளிவந்திருக்கும் "உயர்ந்தவர்கள்" படத்தை நான் ரசித்துப் பாராட்டினேன்.

கே: கமலஹாசனை வைத்து அடுத்து என்ன புதுமைப்படைப்பைத் தரவிருக்கிறீர்கள்?

ப: தமிழில் "நிழல் நிஜமாகிறது" என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறேன். அதை அடுத்து ஒரு உயிரோட்டமுள்ள காதல் கதையை முதன்முறையாகத் தெலுங்கில் கமலை கதாநாயகனாகப் போட்டு ஒரு படம் தயாரிக்கத்திட்டமிட்டுள்ளேன்.

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு; பெண்ணுக்கு வீடுதான் உலகம்.

—காண்டேகர்

இன்று கடமை தவறும் மகள் நாளை அடங்காப்பிடாரி மனைவியாக இருப்பாள்.

—பிராங்லின்

கே: சினிமா கதாசிரியர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ முடியுமென்று ஒரு கருத்தும், முடியாது என்று ஒரு கருத்தும் நிலவுகிறது. உங்கள் அபிப்பிராயமென்ன?

ப: சினிமா கதாசிரியர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ முடியுமென்று நான் நினைக்கவில்லை. இலக்கியங்கள் சினிமாவாக உருப்பெறும்போது அதன் அழகு, சிதைந்து போய்விடும். இதற்குப் பல படங்களை உதாரணம் காட்ட முடியும். மேலும் சினிமாக்காரர்களை இலக்கியவாதிகள், இலக்கியவாதிகளாக ஒப்புக் கொள்வதே இல்லை!

கே: அறிஞர் அண்ணா காலத்தில் இருந்த வசன நடைக்கும் இப்போது படவுலகில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

ப: நீங்கள் சொல்வது உண்மைதான்! அண்ணா காலத்து வசன நடைக்கும் இப்போது ஏற்பட்டுள்ள நியூவேவ் ரக வசனங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. தமிழ் உரை நடைக்கு அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி காலத்தில்தான் சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த அடுக்கு மொழி வசனங்கள் பல புரட்சிகளைக் கொண்டு வந்தது. அப்போதுதான் சினிமாவுக்கு யார் வசனமெழுதுகிறார்கள் என்று ஆவலோடு கேட்கவைத்தது. காலகட்டத்தின் மாற்றத்தினால் ரசிகர்களின் ரசனையும் மாறிவிட்டது. இப்பொழுது அடுக்கு மொழிகளை ரசிகர்கள் விரும்பவில்லை. "சிம்பாலிஸம்" இப்பொழுது பெரிதும் விரும்பி ரசிக்கப்படுகிறது.

கே: நீங்கள் பெரும்பாலும் சமூகம்-சீர்திருத்தம் போன்ற கதை அம்சங்களை தொட்டே படமெடுக்கிறீர்கள். நம் புராணச் சிறப்புக்களையும் வரலாற்று வீர காவியங்களையும் படமாக்கினால் என்ன?

ப: புராணம் - வரலாறு இவையெல்லாம் பெரிய விஷயங்கள். அதோடு இவையெல்லம் எனக்குத் தெரியாத விஷயங்களும் கூட! தெரியாத விஷயங்களில் தலையிடுவதை நான் விரும்புவதில்லை.

கே: மலேசியாவில் தமிழ்ப் படம் எடுக்கும் எண்ணம் ஏதும் தங்களிடம் இருக்கிறதா?

ப: மலேசியா ஒரு அழகான குளுமையான நாடு. இங்குள்ள இடங்களைப் பார்க்கிறபோது படம் எடுக்கவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் படம் எடுப்பது என்பது பெரிய வேலை. அதனால் இந்த முயற்சி எப்படி, எந்த நேரத்தில் கனிந்த பழமாகும் என்று என்னால் சொல்ல முடியவில்லை.

கண்டு பிடித்தார் பாலசந்தர்

கமலஹாசன்! ரசிகர்களால் "காதல் இளவரசனாக போற்றப்படு பவர். இன்றைய இளம் தலைமுறையின் இளம் கதாநாயகன். வயது 24. தனது துடிப்பான நடிப்பின் மூலம் திரை ரசிகர்களின் உள்ளங்களைக் கிளுகிளுக்கச் செய்பவர். "களத்தூர் கண்ணம்மா" படத்தில் சாவித்திரியின் மகனாக நடித்து முதன்முதலில் படவுலகில் அறிமுகமாகி கே. பாலசந்தரின் "அபூர்வ ராகங்கள்" படத்தின் மூலம் கதாநாயகனாக நிலையான இடத்தைப் பிடித்தவர். இன்று பல படங்களில் தனக்கென ஒரு பாணி அமைத்துக்கொண்டு வருபவர்.

இவை பலரும் அறிந்த விஷயங்கள். ஆனால்...

"புதிய சமுதாயம்" கமலஹாசனைப் பேட்டி கண்டு அறிந்து கொண்ட விஷயங்களோ பெரும்பாலோர் அறியாதவை. அவை, அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களிலிருந்து தெரிந்தன.

கே: முதன் முதலில் டைரக்டர் கே. பாலசந்தருடன் உங்களுக்கு எப்போது நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது?

ப: "குறத்தி மகன்" படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோதுதான் அவருடன் எனக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. என் வீட்டிலிருந்து அவருடைய கலாகேந்திரா அலுவலகத்திற்கு அடிக்கடி சைக்கிளில் போய் அவரைச் சந்தித்து விட்டு வருவேன்.

கே: அடிக்கடி அவரைப்போய் சந்தித்ததாகச் சொன்னீர்கள். அப்போதெல்லாம் என்ன நினைத்துக் கொண்டு சென்றீர்கள்?

ப: உங்கள் கேள்வியின் நோக்கம் புரிகிறது. "நீ நடிப்புக்கு லாயக்கில்லை...என்னிடம் உதவி டைரக்டராக வந்துவிடு" என்று அவர் சொல்லமாட்டாரா என்ற எண்ணமே எனக்கு அப்போதெல்லாம் ஏற்படும்.

கே: டைரக்டர் கே. பாலசந்தர் பெரிய கோபக்காரர் என்று சிலர் சொல்கிறார்களே... உங்கள் அனுபவம் எப்படி?

ப: தொழிலின் மீதுள்ள அக்கறை காரணமாக ஏற்படும் ஓர் உணர்வாகவே அவருடைய கோபத்திற்கு நான் பொருள் கொள்கிறேன்.

கே: உங்கள் குரு கே. பாலசந்தரிடம் உங்களுக்குப் பிடித்தது எது? பிடிக்காதது ஏது?

ப: பிடித்தது அவருடைய அர்ப்பண உணர்வு. பிடிக்காதது அவருடைய பதற்றம். அதாவது எல்லாவற்றிற்கும் அவர் அதிகம் கவலைப்படுவார்.


கே: அவர் இயக்கி நீங்கள் நடிக்காத படங்களில் நீங்கள் மிக வும் ரசித்துப் பார்த்த படம் ஏது?

ப: நாகேஷ்-சௌகார் ஜானகி நடித்திருந்த "நீர்க்குமிழி"

கே: தமிழ்ப்படவுலகில் ஒன்றிரண்டு டைரக்டர்களைத் தவிர மற்றவர்களுக்கு புதுமையைப் புகுத்தும் திறனில்லை, தைரியமுமில்லை என்று திரு ஏ. எல். சீனிவாசன் கூறியிருப்பது குறித்து உங்கள் கருத்தென்ன?

ப: ஏ. எல். எஸ். அவர்கள் பழுத்த அனுபவமிக்க ஒரு சினிமாக்காரர். அவருடைய வார்த்தைகள் நிச்சயம் பிதற்றல்களாக இருக்காது. ஆகவே, அவருடைய கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

கே: நடிகர் எம். ஜி. ஆர். தமிழ்நாட்டு முதலமைச்சராகியுள்ளாரே... அது குறித்து உங்கள் அபிப்பிராயமென்ன?



ப: ஒரு நடிகர் முதலமைச்சராவது உலகத்திலேயே இதுதான் முதல்தடவை என்று கருதுகிறேன். பெருமைப்படுகிறேன்; ஒரு கூத்தாடி முதலமைச்சராக ஆவதாவது என்று வேறுபாட்டான கருத்தும் இருக்கிறது. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

கே: சினிமாவில் அரசியல் கலப்பதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

ப: சோற்றில் உப்பு போடுவது போல அளவோடு இருக்க வேண்டும். குறைந்து போனால் நல்லது. அதனால் உடலுக்கும் கெடுதி வராது. அதைப்போல சினிமாவிலும் ஜாக்கிரதையாக அரசியல் கலப்பு இருக்கவேண்டும். கூடிப்போனால் சினிமா உலகிற்கே கெடுதிதான்.

கே: உங்கள் குடும்பம், உடன் பிறப்புக்கள் பற்றிச் சில விவரங்களைச் சொல்லுங்கள்.

ப: என் தகப்பனார் திரு சீனிவாசன் ஒரு வழக்கறிஞர். என் மூத்த சகோதரர் சாருஹாசன் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பயிற்சி பண்ணிவருகிறார். என் தம்பி சந்திரஹாசன் தொழிற்கூட நிறுவனத்தில் அதிகாரியாகப் பணிபுரிகிறான். என் ஒரே சகோதரி நளினி திருமணமாகி குடும்பத்தோடு பம்பாயில் இருக்கிறாள்.

கே: "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று நீங்கள் பாடி நடித்திருக்கிறீர்கள். உங்களுக்கு எப்போது திருமணம்?

ப: நான் இன்னும் தவம் பண்ண ஆரம்பிக்கவில்லை!

– ராமதாஸ் மனோகரன்

பெரிய அதிசயம்

தொகுப்பு:
இரா. ஆறுமுகம்.
ஈப்போ.

1. உலகத்தில் பெரிய அதிசயம் என்னவென்றால் இத்தனை கோடி மக்களிருப்பினும் ஒருவர்போல் மற்றொருவர் இல்லை என்பதே!
2. பத்து முட்டாள்களுடன் தேவலோகத்திலிருப்பதைவிட ஓர் அறிவாளியுடன் நரகத்திலிருக்கலாம்.
3. தனிப்பட்ட மனிதனை நீ வெறுக்கும்போது ஒரு கூட்டத்தை நீ மதிப்பது முட்டாள்தனமாகும்.
4. வாழ்க்கையின் மறுபதிப்பாகவும், உண்மையின் வரிவடிவாகவும் இருப்பதே கவிதை.
5. ஒருவரை மற்றொருவர் தப்பாக நினைப்பதால்தான் யுத்தங்கள் விளைகின்றன.
6. உலகத்தில் வியப்பிலும் வியப்பென்னவெனில் செத்த பிணத்தைப் பார்த்துச் சாகும்பிணங்கள் அழுவதுதான்.



தேசியத் தலைவரின் பக்கத்தில் துணைத்தலைவராக இருந்து பணியாற்ற வாய்ப்புக் கேட்டுப் பெற்றுக் கொண்டிருக்கும் மாண்புமிகு சாமிவேலுவுக்குத் தேசியத் தலைவரின் கையால் மாலை சூட்டப் பெறும் பேறும் கிட்டியதில், அவருக்கு மட்டுமா இரட்டிப்பு மகிழ்ச்சி! அத்தனை ம. இ. கா. பேராளர்களுக்கும்தான்.



"தங்களின் வலக்கரமாகவும் இடக்கரமாகவும் நாங்கள் இருவரும் பணியாற்றி ம. இ. கா. வையும் இந்திய சமுதாயத்தையும் வலுப்படுத்துவோம்" என்று தேசியத் தலைவர் முன்னிலையில் மாண்புமிகு சாமிவேலுவும், மாண்புமிகு எஸ். சுப்பிரமணியமும் கைகுலுக்கி உறுதி கூறுகின்றனர் போலும்!

வெற்றிக் களிப்பு



"உங்களை இப்படிப்பட்ட சூழலில் தூக்கி மகிழும் வாய்ப்பு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது எங்களுக்குக் கிட்டியதே" என்று தேசிய உதவித் தலைவராகத் தேர்வு பெற்ற திரு. எஸ். கோவிந்தராஜுவைச் சுமந்து மகிழ்கின்றனர் அவரது ஆதரவாளர்கள்.



"வெற்றியைத்தான் கேட்டேன்; ஆனால் நீங்களோ அதிகமான வாக்குகளை அளித்து எனக்கு முதல் நிலையான வெற்றியைத் தந்து விட்டீர்கள். உங்கள் பேரன்பை எப்படி மறப்பேன்" என்று நன்றி கூற விரும்பியதைத்தான் தேசிய உதவித் தலைவர் டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லா தம் சிரிப்பால் புலப்படுத்துகிறார்.

ம. இ. கா மாநாடு




ம. இ. கா. வின் "இசிங்கர்" என வருணிக்கப்படும் திரு. ஜி. வடிவேலு மத்திய செயலவைக்குத் தேர்வுபெற்ற மூவருள் ஒருவர்.



"எனது தனிப்பட்ட செல்வாக்காலும், உழைப்பாலும் உதவித் தலைவரானேன்" என்கிறார் டாக்டர் கணேசன்.



"இப்பொழுது பாராட்டுவதைவிட இனிமேல் நான் சாதிக்கப்போகும் சாதனைகளைக் கண்டபிறகு பாராட்டுங்கள்" என்கிறாரோ, மத்திய செயலவைக்குத் தேர்வுபெற்ற திரு. வி. கோவிந்தராஜு.



மத்திய செயலவைக்கு மிக அதிகமான வாக்குகள் பெற்று வாகை சூடிய செனட்டர் மகாலிங்கம்.